














# முன்னணி



**உள்ளே ...**

**1.வாழ்க்கையின் ஒவ்வொரு அடியையும் மாற்றத்திற்கானதாகப் பார்க்க கற்றுக் கொண்டேன். அந்த வகையில் நான் எப்போதுமே போராளிதான்...**

**2.புலித் தலைவர்களின் மரணங்களுக்கு முன் முள்ளிவாய்க்காலில் நடந்தது என்ன?**



இதழ் - 05 (மாசி - வைகாசி 2012)

## ”மே” நாளின் ஆச்சரியம்..!?

”மே” மாத தொழிலாளர் தினத்திலும்
எங்கள் நாட்டில் ஆச்சரியம்..!?

மானிட உரிமையின் அதி.., உச்ச
”ஜனநாயக சோசலிசக் குடியரசு” - என்ற
தத்துவப் பெயரினை
வித்தகமாய்ப் பொறித்திருக்கும்
சிறிலங்காத் தீவுத் தேசத்தில்..!

ஒரு வேளை உணவுக்கே
வக்கில்லா வாழ்வெரியும்
எங்களூர் மனிதர்களை..!?

சிங்க வாளேந்தி
செத்த புலி தேடும் படலமென..!?
தெருப் பொறுக்கிப் படையணியும்
அதனை அண்டி அடிசுவைக்கும்
தறுதலைத் தமிழ்க்குழு சிலதும்
ஆணியத்தின் ஆணவத் திமிர்கொண்டு
ஆயுதமாய் அலைந்துவந்து..,

அந்தரித்த மக்களினை
அடித்து உதைத்து அடக்கி ஒடுக்கி
அவ்வூர்களையே பாசிசப் பேயறைந்த நிலையாக்கி
பெண்மையைப் பிய்த்தழித்து
மக்களின் வாழ்வைக் கொலை செய்யும்..!?
அத்தனை சமூக விரோதத்தின்
அதிபதியாய்த் துணையிருக்கும் அரசு - தாம்
குரல்வளை அறுத்த மக்களின் குருதியில் - அவர்
உறவுகள் புதைந்த மண்ணில்
அத்தனை நினைவுகளையும் தகர்த்துவிட்டு..,



உலகத் தொழிலாளர் வென்றெடுத்த
உரிமையின் நினைவு நாளை விழாவெடுக்க
இந்தப் பாசிஸ்ட்டுகள் சாகடித்த மக்களிடம்
உரிமை தந்தோமென..!?
அழைப்பு விடுகிறார்கள்..!!

இப்படியாக..!?
பேய்க்கும்பல் ஆட்சிசெய்யும்
சிறிலங்காப் பாசிஸ நாட்டின்
பிணந் தின்னும் காடேறிகளால்
எங்கள் தீவுத் தேசமே
இடுகாடாய்.., சுடுகாடாய்.., ஆனதில்
ஆச்சரியம் தானென்ன..?

ஆகவே..!
இனங்களை இணைத்து
பிரிவினை தவிர்த்து
சாதியம் உடைத்து
மத மூடங்கள் தகர்த்து
இலங்கையில் நாமும் மனிதராய் வாழ
உழைக்கும் மக்களின் மனிதங்கள் போற்றும்
வர்க்கப் புரட்சியை
கருத்தாழச் செயலொடு ஏற்போம்.

- மாணிக்கம்

**MUNNANI / முன்னணி (இரு மாத இதழ்)**
**இதழ் - 05 (மாசி - வைகாசி 2012)**

Publishers NDPF Org N° / புதிய ஜனநாயக மக்கள் முன்னணி இல. : 996 514 749
Intrenational standard Serial N° / உலக பதிவு இல. : (ISSN) 1892 - 6347
Printers e-mail / அச்சக ஈமெயில் : info@setlinedata.com

**முன்னணி இணையங்கள்**
www.ndpfront.com/tamil/
www.ndpfront.com/sinhala/
www.ndpfront.com/english/
www.padippakam.com
www.ndpfront.net
www.tamilcircle.net

**முகவரி**
**MUNNANI**
ESC 3 : APP 131
5 Rue Robert Lavergne
92600 Asnières Sur Seine
France

**முன்னணி ஈமெயில்**
munnanee@gmail.com

**சந்தா 6 இதழ்**
12 ஈரோ - 12 டொலர் - 12 பவுண் 120 குரோன்
அன்பளிப்பு
1 ஈரோ - 1 டொலர் - 10 குரோன் - 1 பவுண்
BANK : NORDEA BANK NPRGE ASA / SWIFT : NDEANOKK
ACCOUNT NUMBER : 65660545608
International Bank Account Number
சர்வதேச வங்கி கணக்கு இல.
IBAN N°: NO4965660545608

# புலித் தலைவர்களின் மரணங்களுக்கு முன் முள்ளிவாய்க்காலில் நடந்தது என்ன?

**தமிழ் சமூகம் இதைக் கடந்து வெளிவரவில்லை. பகுத்தறிவுடன் நடந்தது என்ன என்பதை சுயமாக அறிய முடியாது வண்ணம், சமூகம் மூடிய இருண்ட கற்பனையில் வழிகாட்டப்பட்டு இருக்கின்றது. நடந்த உண்மைகள் புதைக்கப்பட்ட நிலையில், இதில் இருந்து விடுபடமுடியாத அறியாமைக்குள் சமூகத்தை முடக்கி வைத்திருக்கின்றது. இதன் மீது தெளிவைப் பெறும்வண்ணம், அடிப்படைத் தகவல்களை கொண்ட உங்களுடனான ஒரு உரையாடல் தான் இது.**



பிரபாகரன் கொல்லப்படவில்லை, இன்னும் உயிருடன் உள்ளார் என்று இன்றும் கூறுகின்ற நம்புகின்ற அரசியல் பின்னணியில் அனைத்து உண்மைகளையும் நாம் தெரிந்தாக வேண்டும். இதற்கு மாறாக, அரசு பிரபாகரனை சண்டையில்தான் கொன்றோம் என்று கூறுகின்ற அரசியல் பின்னணியில், அங்கு உண்மையில் என்ன நடந்தது என்பதை நாம் தெரிந்தாக வேண்டும். இன்னொரு பகுதி அரசு சொல்வது தான் உண்மை, பிரபாகரன் வீரமரணம் அடைந்ததாக கூறுகின்ற அரசியல் பின்னணியில், அரசு சொல்வது உண்மையா என்பதை நாம் சுயவிசாரணை செய்தாக வேண்டும்.

புலி - அரசு இரண்டும் நடந்த உண்மையை, மக்களுக்கு முன் மூடிமறைத்து இருக்கின்றன. இவர் களின் இறுதி உரையாடல்கள் முதல் அவர்களின் கையில் கிடைத்த ஆவணங்களை அழிக்கின்றன, அழித்தும் வருகின்றன. வெளிவந்த காட்சிகளோ வெட்டியும் சுருக்கியும் மூடிமறைத்தபடியே, அரசியல் உள்நோக்குடன் வெளிவருகின்றது. இப்படி இங்கும் அங்குமாக உண்மைகள் மூடிமறைக்கப்பட்ட இந்தப் பின்னணியில், நடந்த போர்க்குற்றங்கள் மூடிமறைக்கப்படுகின்றன. அரசும் புலிகளும் தத்தம் பக்கத்தில் நடந்ததை மூடிமறைக்கும் அரசியல் பின்னணியில், அரசுக்குச் சார்பாக புலிகளும், புலிகளுக்குச் சார்பாக அரசுமாக, முழு உண்மைகளையும் புதைத்து விடுகின்றனர். இதுதான் இதன் பின்னுள்ள அரசியலின் ஒட்டுமொத்த சாரம். யுத்தம் தொடர்ந்த வரை, மக்களை புலி பலிகொடுக்க அரசு பலி எடுத்தது. இதைச் சுற்றியே அரசியல் மற்றும் தர்க்கங்கள் கட்டமைக்கப்பட்டன. இதைச் சுற்றியே அரசியல் நடத்தைகள் முதல் போராட்டங்கள் வரை அங்குமிங்குமாக நடந்தேறின. இந்த அரசியல் பின்னணியிலான நடத்தையூடாக புலிகளும் அரசும் செய்த கொடுமைகளையும், கொடூரங்களையும், மக்கள் தாம் கண்கண்ட காட்சிகளையும் சுதந்திரமாக பேசமுடியாத வண்ணம், அவர்களை திறந்த வெளிச்சிறையில் அடைத்து வைத்திருக்கின்றது அரசு. இதன் மூலமும் நடந்த உண்மைகள் தொடர்ந்து புதைக்கப்படுகின்றன. ஆக அங்கு உண்மையில் என்ன நடந்தது என்பதை மக்களுக்கும், உலகுக்கும் மூடிமறைத்து வரும் பின்னணியில், இதை நாம் விரிவாகவும் குறிப்பாகவும் தெரிந்துகொள்ள முனைவோம்.

### புலிகள் தம் மரணத்துக்கு முன் எடுத்த முடிவு என்ன?

மரணம் வரை போராடுவதா? இல்லை சரணடைவதா? ஆம் அவர்கள் சரணடைவைத்தான் தேர்ந்தெடுத்தனர். இந்த அரசியல் பின்னணியில்

1. மக்களை பணயக் கைதிகளாக்கி அவர்களை ஆயிரம் ஆயிரமாக பலி கொடுத்த புலிகள், அவர்கள் அங்கிருந்து தப்பிச் செல்ல பின்னர் அனுமதித்தனர்.
2. புலிகள் கைதியாக வைத்திருந்த சிங்களப் படையினரை, வெளிப்படையான எந்த நிபந்தனையுமின்றி தமது இறுதிநாட்களின் போது விடுவித்தனர்.

3. புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் உட்பட பெரும் பகுதியினரை (குறைந்து 15 ஆயிரம் புலிகள்) மக்களுடன் மக்களாக வெளியேற புலிகள் இறுதியில் அனுமதித்தனர்.

ஆக இப்படித்தான் யுத்தமுனை திடீரென வெறுமையாகியது. மிகப் பெரியளவில் மக்களை பலியிடும் புலிகளின் அழிவு அரசியலைக் கைவிட வைத்த, புதிய அரசியல் சூழல் என்ன? புலிகளின் ஈவிரக்கமற்ற கொலை வெறித்தனமும், பலி வாங்கும் குணமும் திடீரென கைவிடப்பட்டது எதனால்? இந்தப் பின்னணிக்குரிய அரசியல் சூழல் என்ன?

புலிகளின் முக்கிய புள்ளிகளின் சரணடைவுக்குரிய நாடகம் ஒன்று, அங்கு எந்தச் சந்தேகமும் இன்றி அரங்கேறியது. இது தான் அனைத்தையும் மாற்றியது. பாதுகாப்பாக முக்கிய புலிகளும், அவர்களின் குடும்பமும் வெளியேறும் சரணடைவு நாடகம் ஒன்று அங்கு திட்டமிட்டு அரங்கேறியது. இதில் ஈடுபட்ட புலத்துப் புலிகள் இதை மூடிமறைக்கின்றனர். இதை அரசும் மறுக்கின்றது. புலிகளோ தங்கள் அரசியல் பிரிவு மட்டும் சரணடைந்ததாக அதைச் சுருக்கிக் கூறுகின்றனர். அரசோ இப்படி சரணடைந்தவர்களை, சரணடையாத புலிகள் கொன்றதாக கூறுகின்றது. இப்படி புலிகளின் அரசியல் பிரிவு சரணடைந்ததாக கூற, அதை புலிகளின் இராணுவப் பிரிவு கொன்றதாக அரசு கூறுகின்றது. இல்லை அரசுதான் கொன்றதாக புலிகள் கூறுகின்றனர். இப்படி சரணடைவு பற்றிய திரிபும், யாரால் எந்த நிலையில் வைத்து எப்படி கொல்லப்பட்டனர் என்ற உண்மைகளையும் புதைக்கின்ற அரசியல் பின்னணியில் தான், பிரபாகரன் உயிருடன் உள்ளார் என்ற கதை வரை புனையப்படுகின்றது. கொலைக்கு உடந்தையாக, அதை மூடிமறைக்கின்ற அரசியல் பின்னணியில், உண்மைகளை தங்கள் சதிகளின் பின்னணியில் புதைக்கின்றனர்.

## பிரபாகரன் உட்பட்ட முக்கிய புலிகள் சரணடைந்த பின்னர் தான் கொல்லப்பட்டனர்

அரசு சொல்வது போல், பிரபாகரன் சண்டையில் கொல்லப்படவில்லை. நடேசன் போன்றவர்களை, சரணடையாத பிரபாகரனின் புலிகள் கொன்றதான அரசின் கூற்று பொய். மாறாக நம்பவைத்த ஒரு சரணடைவு நாடகத்தின் பின் அரசு தான் அவர்களைக் கொன்றது.



பிரபாகரனின் 14 வயது மகன் சரணடைந்த நிலையில் கொல்லப்பட்டார். இதை சனல்-4 காட்சி இன்று மீள உறுதி செய்திருக்கின்றது. பிரபாகரனின் 14 வயது மகன் உடலில் குண்டு பாய்ந்த விதம் முதல் கண் பார்வை பற்றிய ஆய்வுகள் இதை மேலும் உறுதி செய்கின்றது. இப்படி உண்மை இருக்க, சரணடைவை விரும்பாத மற்றொரு பகுதி (அதாவது பிரபா கரன்) பிரபாகரனின் மகனைக் கொன்றதாக அரசு கூறுகின்றது. அரசின் இந்தக் கூற்றைத்தான் பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார் என்று கூறுகின்றவர்களும், பிரபாகரன் சரணடையாது வீரமரணம் அடைந்ததாக கூறுகின்ற பிரிவும் கூட மறைமுகமாக கூற முற்படுகின்றது. இப்படி நடந்த உண்மைகளையும், நடந்த குற்றங்களையும் பரஸ்பரம் மூடி மறைக்கின்றனர்.

பிரபாகரனின் 14 வயது மகன் கொல்லப்பட்ட அதே காட்சியை ஒத்த, புலிகளின் முன்னணி இராணுவத் தளபதிகளின் பல படங்கள் வெளிவந்திருக்கின்றது. இந்த வகையில் குறுகிய இடைவெளியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட சூசை, பானுவின் படங்களுக்கும், பிரபாகரனின் 14 வயது மகனின் படத்துக்கும் இடையில் உள்ள ஒற்றுமை இதை மேலும் தெளிவாக உறுதி செய்கின்றது. இதில் இருந்து சற்று வேறுபாடாகவே பிரபாகரனின் படங்கள் கூட வெளியாகி இருக்கின்றன. அவையும் மிக அருகில் வைத்து கொன்றதை உறுதி செய்கின்றன. இது போல் ரமேஸ் சித்திரவதை செய்யப்பட்ட வீடியோ முதல் அவர் கொல்லப்பட்ட பின் எரியூட்டப்படும் பல காட்சிகள் இன்று வெளியாகி இருக்கின்றன. இது போல் பல கொலைக் காட்சிகள் உட்பட பாலியல் ரீதியான நடத்தைகளை வெளிப்படுத்தும் காட்சிகள் இதை மேலும் உறுதி செய்கின்றது. இதே போல் மக்களுடன் மக்களாக வெளியேறி, தங்கள் முன் சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்தது என்று கேட்டு, நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு முன் துணிச்சலுடன் சிலர் சாட்சியமளித்தனர். இப்படி அங்கு நடந்தது என்ன என்பதை, மூடிமறைப்பின் பின்னான பல

உண்மைகள் மூலம் நாம் தெரிந்து கொள்ளமுடிகின்றது. அன்று வெளியான உத்தியோகபூர்வமான அறிக்கைகள், பேட்டிகள் இதை மேலும் உறுதி செய்கின்றன. அன்று அங்குமிங்குமாக வெளியான வைகளையும், தொடரான நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியையும் அடிப்படையாகக் கொண்டு இதை நாம் தெரிந்து கொள்வோம்.

ஒரு சதியும் நாடகமும் முள்ளிவாய்க்காலில் அரங்கேறியது. நம்ப வைத்து கழுத்தறுக்கும் நம்பிக்கை மோசடியில், பலர் ஒரே மாதிரி ஈடுபட்டனர். அமெ. பசுபிக் பிராந்திய கட்டளைத் தளபதி அட்மிரல் திமேத்தி ஜே கீட்டிங், இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் மற்றும் வெளி விவகார செயலாளர் சிவசங்கர் மேனன் ஆகியோரை சந்தித்த பின்னர், *15.05.2009* இல் வெளியிட்ட அறிக்கை, இந்த சதி நாடகத்தின் வெளிப்படையான ஒரு பக்கம். அந்த அறிக்கை இலங்கை அரசுட னான அவரது கூட்டுச் சதியை நாசூக்காக, புலிகளை நம்பவைக்கும் மோசடியுடன் வெளியாகியது. அதில் "இலங்கையில் போர்ப் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ அமெரிக்கக் கடற்படை கப்பல்கள் தயார் நிலையில் உள்ளது." என்று *15.05.2009* அறிவிக்கின்றார். அத்துடன் அதில் "போர் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கான வழிகளை கண்டறிய அமெரிக்க குழு இலங்கை சென்றது. எவ்வகையில் உதவி செய்ய முடியும் என்ற அறிக்கையையும் இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகம் வழியாக வெளியுறவுத்துறைக்கு வழங்கியுள்ளது. அதில் போர் பகுதியில் தமிழர்களுக்கு அமெரிக்க கடற்படை வழியாக உதவுவதற்கான பல்வேறு வழிமுறைகளை தெரிவித்துள்ளோம்." என்கின்றது. இப்படி வெளியான அந்த அறிக்கை, இந்த படுகொலைகளும் சரணடைவும் நடக்க முன்பு வெளிவருகின்றது. புலியை மீட்பது போன்று, அமெரிக்க கடற்படை தரையிறங்கியதா!? ஆனால் நிச்சயமாக இங்கு புலிகளை நம்பவைக்கும் வண்ணம், கப்பல் உட்பட மூன்றாம் தரப்பு அங்கு நிச்சயமாக பிரசன்னமாகி இருந்துள்ளது. அதே நேரம் புலிக்கு "பொது மன்னிப்பு இலங்கை வழங்க வேண்டும்" என்ற அமெரிக்காவின் கோரிக்கையும் வெளியாகியது. புலிகளை நம்பவைத்து கழுத்தறுக்கும் பொதுச் சதிடன் கூடிய ஒன்றாக இது இருந்துள்ளது. மக்கள் மீட்பு என்பது, புலிச் சரணடைவுடன், புலியினை அரசியல் ரீதியாக முடிவாக்கும் சதியின் அடிப்படையில் இருந்துள்ளது.

எரிக் சொல்கைம் இந்த நாடகத்தின் மற்றொரு சதிகாரன். *17.05.2009* பல தரம் (வெளிநாட்டு உள்நாட்டு) புலியுடன் தான் தொடர்பில் இருந்ததாக கூறியுள்ளார். இந்த பின்னணியில் பேசப்பட்டது முதல் வழிகாட்டப்பட்டவை அனைத்தும் மூடிமறைக்கப்பட்டு இருக்கின்றன. இப்படி மோசடி செய்து கொல்ல உதவிய பின், நடந்ததையிட்டு "இது மிகவும் கோரமானது" என்கின்றார். இதேபோல் கடைசி நிமிடங்களில் ஐ.நாவைச் சேர்ந்த நம்பியாரும் (வெளிநாட்டு - உள்நாட்டு) தொடர்பில் இருந்துள்ளார். இவையெல்லாம் இவர்கள் கூறியவைகள் தான். இந்தச் சதியின் சில வெளிப்பாடுகள் தான் இவை. மீண்டும் நம்பியார் ஏன் இலங்கை சென்றார்!? எல்லாம் இதற்காகத்தான். இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் மற்றும் வெளிவிவகார செயலாளர் சிவசங்கர் மேனன் ஆகியோர் அடிக்கடி இலங்கை சென்றது இதற்காகத்தான். *17.05.2009* அன்று புலிகளின் சர்வதேச பொறுப்பாளர் கே.பி (பத்மநாதன்) புலிகளின் சரணடைவு பற்றிய தன் பேட்டியில் கூறுகின்றார் "..அதனால் தான் நாம் எமது ஆயுதங்களை அமைதியாக்கி சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வருகிறோம் விடுதலைப் புலிகளின் அச்சமற்ற தன்மையையும், தங்கள் கொள்கை மீதுள்ள முடிவில்லாத கடமையுணர்ச்சியையும், அதன் மீது எம்மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையையும் எவரும் சந்தேகப்படமுடியாது. எமது அழைப்பை எமது பிள்ளைகள் எந்தவொரு கேள்வியுமில்லாமல் மரணத்துக்கு பயமற்று எடுத்துள்ளார்கள். எமது போராட்டம் எம்மக்களுக்காகவே என்பதை நாம் மறந்துவிடவில்லை என்றும் இப்போதைய நிலமையில், இந்த யுத்தத்தை சிறிலங்கா இராணுவம் எம்மக்களைக் கொன்று குவிப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாகப் பாவிக்க நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம்.. மிகத் துணிச்சலோடு நாங்கள் எழுந்து நின்று எமது ஆயுதங்களை அமைதியாக்குகிறோம், எமது மக்களைக் காப்பாற்றுமாறு தொடர்ந்து சர்வதேசச் சமுதாயத்துடன் கேட்டுக் கொள்வதை விட வேறு தெரிவு எங்களுக்கு இல்லை இப்படிக் கூறினார். இந்தப் பின்னணியில் தான், இந்த முடிவின் அடிப்படையில்தான் சரணடைவு அன்று நடக்கின்றது. ஆம் ஒட்டு மொத்த புலிகளும் ஆயுதத்தை கீழே போட்டுவிட்டு மக்களுடன் மக்களாக வெளியேறுகின்றனர், முன்னணிப் பகுதி தாம் மட்டும் பாதுகாப்பாக வெளியேற, தம் குடும்பங்களுடன் சரணடைகின்றது.

முக்கிய புலிகளின் குடும்பங்கள், மக்களுடன் மக்களாக வெளியேறவில்லை. பிரபாகரனின் தாய் தகப்பன் மட்டும், அவர்களின் உடல்நிலை காரணமாக விதிவிலக்கு. ஆக இந்தச் சரணடைவு நேரடியாக அரசிடமல்லாத மூன்றாம் தரப்பின் முன்னிலையில் தான் நடந்தேறியது. சரணடைந்தவர்களை நாட்டைவிட்டு வெளியேற்றும் உத்தரவாதத்தின் அடிப்படையில், தெரிவு செய்யப்பட்ட முக்கிய புலிகள் அவர்கள் குடும்பங்கள் ஒட்டுமொத்தமாக சரணடைந்தனர். இவர்கள் சரணடைந்த போது, மக்களிடம் கறந்த கோடிக்கணக்கான பணம் (இலங்கை மற்றும் சர்வதேச கரண்சி) மற்றும் தங்கம் முதல் கொண்டு

முக்கிய இயக்க ஆவணங்களுடன், தாம் மட்டும் தப்பிச் செல்லும் பின்னணியில் தம்முடன் எடுத்துச் சென்றனர். இதன் பின் நடந்தது என்ன? தமிழ்நெற்றுக்கு பத்மநாதன் வழங்கிய பேட்டி ஊடாக தெரிந்து கொள்வோம். எமது அமைப்பின் பல மூத்த உறுப்பினர்களும் தலைவர்களும் உயிரிழந்திருக்கின்றனர் அல்லது துரோகத்தனமாகக் கொல்லப்பட்டுள்ளனர் என்பது உண்மை. எங்களின் முடிவை நாம் சர்வதேசத்துக்குக் கூறியிருந்தும், சிறிலங்காவின் தாக்குதல்களை நிறுத்தச் சொல்லிக் கேட்டிருந்தும், கொழும்பானது அதைப் பொருட்படுத்தாது இதுதான் முடிவென்று இராணுவத் தாக்குதலைத் தொடர்ந்தது. எங்களுக்கு கிடைத்த தகவலின்படி சரணடைந்து வெள்ளைக் கொடியைத் தாங்கிச் சென்ற போராளி களையும் தலைவர்களையும் சர்வதேச மரபைப் பொருட்படுத்தாது இரக்கமில்லாமல் கொன்றுள்ளது. சர்வதேசச் சமூகமும் சிறிலங்காவுக்கு எதிராக ஒரு திடமான நிலையை எடுத்து சிறிலங்காவை ஒரு முறையான முடிவை எடுக்கச் சொல்லி ஊக்குவிக்கவில்லை. நடந்த நிகழ்வுகளையிட்டு நாங்கள் மிகவும் துக்கத்திலுள்ளோம் என்கின்றார். இங்கு சர்வதேசச் சமூகம் தம்மை ஏமாற்றியதையும், படு கொலைக்கு உதவியதையும் தெளிவாக்குகின்றார். மேலும் சிறிலங்கா அரச தலைவர் மகிந்த ராஜபக்ச மற்றும் பசில் ராஜபக்ச ஆகியோருடன் நேரடியாக ஆலோசிக்கப்பட்ட பின்பே மூன்றாம் தரப்பு ஒன்றினால் இந்த அறிவுறுத்தல் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. இதன்பின்னர், அடுத்த ஒரு மணி நேரத்திற்குள் முன்னேறி வந்த சிறிலங்கா படையினரிடம் அவர்கள் சரணடைந்தனர் அன்று நடந்த நிகழ்வைப் பற்றி புலிகள் கூறினர்.

இந்தப் பின்னணியில் தான் அரசு தகவல் முன்னுக்கு பின் முரணாக வெளி வருகின்றது. செய்தி பல முறை திருத்தப்படுகின்றது. கைதைத் தொடர்ந்து எடுத்த முடிவுகள், மூன்றாம் தரப்பின் வேண்டுகோளுக்கு அமைய மீளக் கையாளப்படுகின்றது. பொதுவாக செய்தி வழங்கும் இராணுவ தகவல்கள், பின் மறுக்கப்பட்டு மாற்றப்படுகின்து. அரசின் இந்தக் குழப்பம், இந்த படுகொலைச் சதியை மேலும் அம்பலப்படுத்துகின்றது. இந்த சரணடைவு பற்றி இலங்கை அரசாங்கம் சார்பில் வெளிவிவகார அமைச்சர் பாலித கொஹண பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தார். அது பற்றி அவர் கூறும் போது புலிகள் சரணடைய விரும்புவதாக வடபகுதியில் பணியாற்றிய சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களிலிருந்தும், வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடமிருந்தும் ஞாயிற்றுக்கிழமை மாலை தனக்குப் பல்வேறு தகவல்கள் கிடைக்கப்பெற்றதாக பாலித கொஹண பிரித்தானிய ஊடகமொன்றிடம் கூறினார். இந்த சரணடைவின் பின்னான தனது வழிகாட்டலை இதற்கு ஒரே வழிதான் உண்டு. இராணுவ முறைப்படி கையில் வெள்ளைக் கொடியுடன் பயமுறுத்தாத வகையில் மெதுவாக வந்து சரணடைய வேண்டும் என நான் கூறியிருந்தேன் என்று வெளிவிவகார அமைச்சர் பாலித கொஹண தெரிவித்தார். அவ்வாறு அவர்கள் சரணடைந்தால் உயிர்களுக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது என நோர்வே அமைச்சர் இறுதியாகத் தனக்கு அனுப்பிய குறுஞ்செய்தியையும் பாலித கொஹண அந்த ஊடகத்திடம் காண்பித்துள்ளார். இந்தப் பின்னணியில் சரணடைவு நடந்தது.



*16-17.05.2009* அன்று ஜனாதிபதி சர்வதேச நாடொன்றில் வைத்து ஆற்றிய உரையில், நாட்டில் பயங்கரவாத பிரச்சனை முடிந்துவிட்டதாக மகிழ்ச்சியுடன் அறிவித்தார். அத்துடன் தன் பயணத்தை திடீரென நிறுத்தி நாடு திரும்பினார். *17.05.2009* அன்று எல்லாக் கொலைகாரர்களும் புடை சூழ, மகிழ்ச்சியாக மண்ணை முத்தமிட்டார். இந்த நிகழ்வு நடக்கும் போது, புலித்தலைவர்கள் கதை (சரணடைந்தவர்கள் கைது செய்யப்பட்டு விட்டனர்.) முடிந்துவிட்டது. அந்த பின்னணியில் தான் இந்த ஆர்ப்பாட்டம், மகிழ்ச்சி என அனைத்தும் ஒருங்கே நடந்தேறியது. இப்படி புலித் தலைமையின் கதை முடிந்ததை அமைச்சர்களாக உள்ள டக்கிளஸ் மற்றும் கருணா சார்பு இணையங்கள் செய்தியாக கொண்டு வருகின்றன. இதில் சரணடைவு பற்றிய குறிப்புகளும் உள்ளது.

*17.05.2009* மக்கள் முழுமையாக வெளியேறியதாக அரசு அறிவித்தது. புலிகள் தம் சரணடைவுக்கு நல்லெண்ண அறிகுறியாக மக்களை விடுவித்தனர். இந்த நிகழ்வுக்கு முன் மக்கள் உயிர் இழப்பை தவிர்க்க, ஆயுதத்தை கைவிட்டு விட்டதான பத்மநாதனின் கூற்று வெளிவருகின்றது. இவை அனைத்தும் மூன்றாந் தரப்பின் சதிக்கு உட்பட்ட ஒன்றுதான். அடுத்த சம்பவத்தைப் பாருங்கள். இராணுவத்தை சேர்ந்த ஏழு கைதிகளை, புலியிடமிருந்து தாம் மீட்டதாக இதே நாள் அரசு அறிவிக்கின்றது. உண்மையில் புலிகள் சரணைடைய முன்னர் அவர்கள் நல்லெண்ணமாக விடுவித்த கைதிகளைத்தான், தாங்கள் மீட்டதாக அரசு கதை விடுகின்றது. இப்படி புலிகள் முன்னைய நிலைக்கு மாறாக எதிர்மறையில் பிறிதான ஒரு நகர்வு நடக்கின்றது. இந்த அடிப்படையில் அரசின் முன்னுக்குப் பின் முரணாக செய்திகள், இவற்றை மேலும் உறுதி செய்கின்றது. இந்தக் கூட்டுச்சதியை அவர்களின் ஒன்றுக்கொன்று முரணான செய்திகள் அம்பலமாக்குகின்றது. புலிகளின் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டது “இன்று காலை” (*19.05.2009*) தான் என்றும், அதை கருணா அன்றைய பிபிசி தமிழ் சேவையில் பலதரம் உறுதி

செய்கின்றார். 18ம் திகதியே பிரபாகரன் கொல்லப்பட்டதாக அரசதரப்பில் இருந்து வெளியிட்ட செய்தி, பின் 19ம் திகதி காலையே கொல்லப்பட்டதென்ற செய்தியும் சரி, தொடர்ந்து டிஎன்ஏ மூலம் உறுதி செய்துள்ளதாக கூறுவதன் மூலம், இதன் முழுச் சதியும் மொத்தத்தில் தொடர்ந்து அம்பலமாகியது. ஏமாற்றி சரணடைய வைத்தவர்கள் மேல், படுகொலை, அவர்களின் உடலங்கள் என்று நாடகமே அரங்கேறுகின்றது. இப்படி சரணடைந்தவர்கள் மீதான விசாரணை என்பது, இலங்கை மற்றும் இந்திய அரசு நடத்திய அனைத்துக் குற்றங்கள் மேலான விசாரணையாக மாறும். அத்துடன் இதுவே அரசியல் போராட்டமாக மாறும். அதைத் தவிர்க்க, இந்திய இலங்கை அரசுகள் சேர்ந்து இந்த படுகொலை செய்து அழிப்பதை தெரிவு செய்தன. இதனால் எவரும் உயிருடன் பிடிபடவில்லை என்றால், எவரையும் உயிருடன் விட்டுவைக்க அவர்கள் தயாராகவில்லை. விசித்திரமான உண்மைகள். தமக்கு தேவையான தகவல் சார்ந்த விசாரணையின் பின், தொடர்ச்சியாக படுகொலைகள் அரங்கேறுகின்றது. இந்த இடத்தில் சூசையின் பேட்டியில் (17.05.2009) மக்கள் பாதுகாப்பு வலயத்தினுள் இருக்கும் அனைத்து மக்களையும் ஜெனீவாவில் உள்ள அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்துடன் நேரடியாக செல்வராஜா பத்மநாதனூடாகத் தொடர்பு கொண்டு வெளியேற்றுமாறு கேட்டிருந்தோம். என்கின்றார். இப்படி சரணடைவுக்கு பின்னான நிகழ்வைத்தான் பத்மநாதன் வஞ்சகமான துரோகத்தமான முறையில் கொல்லப்பட்டதாக கூறுகின்றார். உண்மையில் இது நடந்தது. புலித்தலைவர்கள் பாதுகாக்கப்படுவார்கள் என்ற வாக்குறுதியின் பெயரில், சரணடைய வைத்தபின் அவர்கள் திட்டமிட்டவகையில் படுகொலை செய்யப்பட்டார்கள். பத்மநாதன் கூறுகின்றார்.

**வழுதி கூறுகின்றார் வேறும் சில நண்பர்கள் வேறு சில முனைகளால் தமது முயற்சிகளை எடுத்தனர். சரி அவர்கள் யார்? எப்படி? என்ன முயற்சி, யாருடன்? இங்குதான் சதி, சூழ்ச்சி என எல்லாம் ஒருங்கே அடங்கிக்கிடக்கின்றது.....**

புலிகளுடன் இறுதி நேர தொடர்பில் இருந்த புலிகளின் முக்கிய புள்ளியான வழுதி தம்மையும், இந்த சரணடைவின் பின் தாங்களும் செயல்பட்டதை மறுத்து ஏதோ ஒரு நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது. ஆனால், அது வெளியிலிருந்து யாராலும் கொடுக்கப்பட்டதல்ல என்கின்றார். இந்த சரணடைவு அவர்களின் முடிவு என்று கூறுகின்ற பின்னணியில், இதுவொரு அப்பட்டமான பொய். வழுதியின் அதே கட்டுரையில் இந்த சதியின் பின்னணி பற்றி போரை இடைநிறுத்தி, ஆயுதங்களை மௌனிக்கச் செய்வதற்கு மே 15, வெள்ளிக்கிழமை, இலங்கை நேரம் பிற்பகல் அளவிலேயே விடுதலைப் புலிகளின் தலைமை முன்வந்தது. என்கின்றார். அப்படியாயின் எதன் அடிப்படையில்? எந்த நம்பிக்கையின் அடிப்படையில்? அதை உங்களிடம் ஏன் சொல்ல வேண்டும்? இதில் உங்கள் பங்கு என்ன? என்ற கேள்வி சதியை மேலும் தெளிவாக்கின்றது. புலிக்கு நடந்த கதியை அம்பலமாக்குகின்றது. தாங்களும் சேர்ந்து நடத்திய அந்தச் சதியை பற்றி அப்போது என்னைத் தொலைபேசியில் அழைத்த நடேசன் அண்ணை ஆயுதங்களைக் கைவிடத் தாம் தயாராக இருப்பதாகவும், சம்மந்தப்பட்டவர்களை வந்து இறங்கி மீட்பு நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு சொல்லும்படியும், தலைவர் அவர்கள் முழு ஒத்துழைப்பு வழங்குவார் என்றும் என்னிடம் சொன்னார் வழுதி கூறுகின்றார் வேறும் சில நண்பர்கள் வேறு சில முனைகளால் தமது முயற்சிகளை எடுத்தனர். சரி அவர்கள் யார்.., எப்படி.., என்ன முயற்சி.., யாருடன்? இங்குதான் சதி, சூழ்ச்சி என எல்லாம் ஒருங்கே அடங்கிக்கிடக்கின்றது என்கின்றார்.

சரி அந்த சம்மந்தப்பட்டவர்களை வந்து இறங்கி என்றால், அவர்கள் யார்? சரி உரிய நேரத்தில் வந்து இறங்கிக் காப்பாற்றுவோம் என்றது பொய்யல்ல, என்றால் சம்மந்தப்பட்டவர்களை வந்து இறங்கி என்பது எதைக் குறிக்கின்றது. எனது பங்கு நடவடிக்கைகளை நான் எடுத்தேன் என்றால், யாருடன் சேர்ந்து இந்த சதி செய்யப்பட்டது? புலிகளை சரணடைய வைக்க சம்மந்தப்பட்டவர்களை வந்து இறங்கினார்கள். இந்தப் பின்னணியில் தான் ஆயுதத்தை கீழே போட்ட புலிகள் பாரிய பணக்கட்டுகளையும் தூக்கிக் கொண்டு அப்பிரதேசத்தை விட்டு வெறியேறும் வண்ணம் சரணடைந்தனர். வழுதி கூறுகின்றார் வேறும் சில நண்பர்கள் வேறு சில முனைகளால் தமது முயற்சிகளை எடுத்தனர். சரி அவர்கள் யார்? எப்படி? என்ன முயற்சி, யாருடன்? இங்குதான் சதி, சூழ்ச்சி என எல்லாம் ஒருங்கே அடங்கிக்கிடக்கின்றது. மேலும் வழுதி கூறுகின்றார் இதே தகவல் பத்மநாதன் அண்ணனுக்கு சூசை அண்ணனால் சொல்லப்பட, அவரும் உருத்திரா அண்ணனும் தமது பங்கு நடவடிக்கைகளை எடுத்தனர். சரி என்ன நடவடிக்கை? யாருடன் சேர்ந்து? இப்படித்தான் தமது பங்கு, எனது பங்கு என்பதன் மூலம் தான், அவர்கள் இறுதியில் சரணடைய வைக்கப்பட்ட நிலையில், அவர்கள் தாமாக முன்வந்து சரணடைந்தனர். இதன் பின் அவர்கள் ஈவிரக்கமின்றி சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டனர். இதுதான் நடந்த உண்மை. இதை மூடிமறைக்கின்ற அரசியல் பின்னணியில், அரசு மட்டுமல்ல அரசுக்கு வெளியில் உள்ள போர்க்குற்றவாளிகளும் உள்ளனர். இதுதான் இதன் பின்னுள்ள மற்றொரு உண்மையாகும்.

~ பி.இரயாகரன்.

# இலங்கை இனப்பிரச்சனையின் தோற்றுவாய் பற்றி...

இன்று தமிழ்மக்களின் போராட்டம் சிங்கள இனவாத அரசால் நசுக்கப்பட்டதன் பின்னர் மீண்டும் தனித்தமிழீழம் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டு வருகின்றது. அதை முன்தள்ளுவதற்கு இலங்கையின் இடது சாரிய வரலாற்றையும் அதேவேளை சிங்கள இனவாதிகளின் வரலாற்றையும் புரட்டிப்போட்டு தனிமையில் இனவாதத்திற்கு சிங்கள இனம் மாத்திரம் தான் காரணம் என்று கூறி அவர்களின் மீது பழியைப் போட்டு தமிழ் குறுந்தேசிய வாதத்தை முன்தள்ளுகின்றனர். இதில் சிங்கள இனவாதமும் தமிழ் இனவாதமும் பிரித்தானியர்களின் சூழ்ச்சியின் முக்கிய கருவான பிரித்தாளும் தந்திரத்தால் உருவாக்கப்பட்டு வளர்க்கப்பட்டதே ஒழிய தனிமையில் சிங்களவர்களால் உருவாக்கப்பட்டது என்று கூறிவிட முடியாது. எவ்வாறு சிங்கள மக்கள் மத்தியில் இனவாதத்தை விதைக்க சிங்கள மேட்டுக்குடி முன்வந்ததோ அதேபோன்று தமிழ் இனவாதத்தையும் விதைக்க தமிழ் மேட்டுக்குடியினர் முன்வந்தனர்.

இன்று பலரும் அனாகரிக தர்மபாலாவை இனவாதத்தின் தந்தையாக வர்ணிக்கின்றனர். இவர் சிங்கள மக்கள் மத்தியில் பிரித்தானியரின் வேண்டுதலின் பெயரில் இதை விதைத்தார். ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் அன்று தம்மை மேட்டுக்குடிகளாக காட்டிய ஆறுமுக நாவலர் தமிழ் மக்கள் மத்தியிலேயே சாதியத்தை ஊற்றி வளர்த்தவர் என்பதை எவரும் கருத்தில் கொள்வதில்லை. இலங்கையில் இனவாதம் ஆரம்பிப்பதற்கு அடிப்படைக்காரணங்களாக இருந்தது அரை நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ சக்திகளே. அன்னிய காலணித்துவத்தின் போது அன்னியர்களுடன் சேர்ந்து நின்று தொழிலாள வர்க்கத்தை சுரண்டியவர்கள் அன்னியர்கள் வெளியேறியதும் அதை தொடர்ந்து செய்து வந்தனர். இதற்கு மறைமுகத்தில் அன்னிய சக்திகளின் தூண்டுதல்களும் இருந்தேறின. இக்காலத்தில் இலங்கையில் மிகவும் வலுவான கம்யூனிசக் கட்சியும் இருந்தது இது இவர்களுக்கு எதிரான போராட்டத்தை கூர்மைப்படுத்தும் வகையில் இயங்கியது. இதைக்கண்ட காலணித்துவ நாடுகள் இவர்களின் அடிவருடி களைக் கொண்டு இனமுரண்பாட்டை தூண்டி விட்டனர். இவ்வினமுரண்பாடு என்பது இயல்பாக ஏற்பட்டதல்ல மாறாக காலணித்துவ நாடுகள் தமது சுயலாபம் கருதி பிரித்தாளும் தந்திரத்தை பயன்படுத்தினர்.

தமக்கு நம்பிக்கையும் தமது கோட்பாட்டை மறைமுகமாக இலங்கைக்குள் திணிக்கக் கூடிய தரகு சக்திகளை தேர்ந்தெடுத்து அவர்களை உயர் பதவிகளில் அமர்த்தியதன் மூலம் தமது திட்டத்தை நிறைவேற்ற ஆரம்பித்தனர். இதனால் தான் இரு இன முதலாளித்துவ சக்திகளுக்கும் இடையான போராட்டம் என்பது உக்கிரம் அடைந்தது. இதற்கு உதாரணமாக தமிழ் அதுவும் யாழ்பாணத்து தமிழர்களில் மேல் சாதி யினரை அன்னிய சக்திகள் தமது தேவைகளுக்காக பயன்படுத்த ஆரம்பித்தன. அதன் விளைவாக யாழ் மேல்சாதியினர் கல்விமான்களாக ஆக்கப்பட்டு அவர்களுக்கு சேவகம் செய்யவும் புறப்பட்டனர். இவர்களை இலங்கையின் மற்றைய பகுதிகளுக்கு இந்த அன்னிய சக்திகள் வேலைக்கு அமர்த்தி மற்றைய பகுதி மக்களை இவர்களின் ஊடாக சுரண்ட ஆரம்பித்தன. நேரில் பார்க்கையில் இந்த யாழ் தமிழர்களே இவர்களை சுரண்டுவது போன்ற ஒரு பார்வையையும் மற்றைய சமூகத்தின் மத்தியில் வளர்த்தும் வந்தனர்.

அதேவேளை இந்த யாழ் மேல்சாதியினர் எற்கனவே யாழ்ப்பாணத்தில் கீழ்சாதியினரை ஒடுக்கி



அடக்கி வாழ்ந்தவர்கள் பதவியும் அதிகாரமும் கிடைத்தவுடன் அதை இரட்டிப்பாக செயற்படுத்தவும் ஆரம்பித்தனர். போர்க்குணம் கொண்ட சிங்கள மக்களை ஒடுக்கவும் அவர்களின் போராட்டங்களை மளுங்கடிக்கவும் இந்த யாழ் மேல்சாதியினரை அன்னியர்கள் பயன்படுத்த

ஆரம்பித்தனர். இது மட்டுமல்லாது சிங்கள மேட்டுக்குடியினரையும் இந்த அன்னியர்கள் தமக்கு சேவகம் செய்ய பயன்படுத்தினர். இவ்வாறு இரு இனங்களுக்கிடையேயும் இருந்த மேல்மட்டத்தினரை தமது கைக்குள் போட்டுக்கொண்டதன் மூலம் இரு இனங்களையும் இணைய விடாது பிரித்தே வைத்திருந்தனர்.


யாழ் மையவாதத்துடன் பின்னிப் பிணைந்தது. கிழக்கிலங்கையைப் பொறுத்தவரையில் அங்கு வாழ்ந்த மக்கள் இனமத வேறுபாடின்றியே வாழ்ந்து வந்தனர். இவர்களின் வாழ்க்கை முறை ஒருவரை ஒருவர் தங்கி வாழ்ந்த வண்ணமே இருந்திருந்தது.

தமிழர்கள் 35 சத விகிதத்திற்கும் கீழ் இலங்கையில் இருக்கும் போதே 50 சதவீத உரிமை கேட்டதன்மூலம் சாத்தியமற்ற ஒரு தீர்வை அன்றே முன்வைக்க கோரியிருந்தனர். இவ்வாறு 50 சத வீத அதிகாரப்பகிர்வு கேட்டவர்கள் தான் பின்னர் தழிழர்களும் சிங்களவர்களும் ஒன்றாக வாழலாம் எனவும் கூறினர்.

**ஒரு தேசிய இனம் தனக்கான சுயநிர்ணய உரிமையை பிரிந்து போதலுடன் கூடியதாக கோருவது என்பது சரியான கோரிக்கையாக இருந்தாலும் அதற்காக பிரிந்து போவதுதான் ஒரே முடிவு என்ற கோரிக்கை தப்பானது, இது பாட்டாளிவர்க்க சித்தாந்தத்திற்கும் முரணானதும் கூட....**

இவர்களின் வேலைகளாக விவசாயமும் மீன்பிடித்தொழிலுமே முக்கிய பங்காற்றியது. இந்த தரகு அரசால் இவர் களின் உழைப்பிற்கு சரியான பலன்கிடைக்காததால் அங்கிருந்த பலர் அரசுக்கு எதிராக சுயமான போராட்டங்களில் ஈடுபட்டுவந்தனர். இந்தப் போராட்டங்களை மளுங்கடிக்கவும் தமது லாபங்களை பேணிப்பாதுகாக்கவும் சிங்கள அரசால் முன்னிறுத்தப்பட்ட இனவாதக் கொள்கையும் தமிழ் முதலாளிக் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியால் முன்வைக்கப்பட்ட தனித்தமிழீழம் என்ற கோட்பாடும் முட்டி மோத ஆரம்பித்தது.

இந்த காலகட்டத்தில் தான் யாழ் மேலாதிக்கத்தினர் பரவலாக சிங்களப் பிரதேசங்களிற்கு அரச ஊழியர்களாக தொழில் செய்யப்புறப்பட்டனர் அப்போது அவர்கள் சிங்கள மக்களை மூன்றாம் தர பிரஜைகளாகவும் அடிமைகளாகவுமே நடத்தி வந்தனர். தமது வீடுகளில் வேலைக்கு அமர்த்தி சித்திரவதையும் செய்தார்கள். இதன் மறு பக்கமாக சிங்கள மேட்டுக்குடியினர் இவற்றை தமது சுயலாபத்திற்காக பயன்படுத்த ஆரம்பிக்கலானார்கள். எற்கனவே பிரித்தானியரின் தூண்டுதலின் பெயரில் சிங்கள மேட்டுக்குடியினரால் முன்தள்ளுப்பட்டிருந்த இனவாதத்தை தமது கைகளில் தாங்கி இனமுரண்பாடு முற்ற வைக்கலானார்கள். தமிழ் சிங்களத் தலைமைகள் தாம் ஆட்சிபீடம் ஏறுவதற்காக இந்த இனமுரண்பாட்டை பயன்படுத்தினார்கள். இதன் விளைவாக தமது சுயலாபம் கருதி யாழ்ப்பாண மேலாதிக்க தமிழ் முதலாளி களால் சிங்கள இனவாதத் திற்கு எதிராக முன் வைக்கப்பட்டதே தமி ழீழக் கோரிக்கை. தமிழீழக் கோரிக்கையை நாம் கவனத்தில் எடுப்போமாயின் இதை மாவட்ட ரீதியாக வாழும் தமிழ் மக்கள் எந்த வகையில் இதன் பின்னால் கொண்டு வரப்பட்டனர் என்பது புலப்படும். தமிழீழக் கோரிக்கை



இதன் விளைவாகவே இன்றைய தமிழீழக் கோரிக்கையும் உருவானது. இவ்வாறு உருவான தமிழீழக் கோரிக்கையை கையில் ஏந்தியவர்கள் குட்டி பூர்சுவா இளைஞர்களே. அவர்கள் இந்தக் கோரிக்கையை அரசியல் மயப்படுத்தி அதனூடாக மக்களை அணிதிரட்ட சிங்கள இனவாதத்திற்கு எதிரான போரை ஆரம்பித்தனர். இந்த இளைஞர்கள் தமிழ் சிங்கள பாட்டாளி வர்க்கத்தின் பங்கை முற்று முழுதாக ஏற்றுக் கொள்ளாது மறுத்து இயங்கினர். மறுபுறத்தில் தமிழ் பாட்டாளி வர்க்கத்தினர் தமிழீழக் கோரிக்கை ஒரு தீண்டத்தகாத ஒரு கோரிக்கை என்பது போலவும் சாதியப் போராட்டமே முதன்மையானது என்பது போன்றும் தமது செயற்பாடுகளை குறுக்கிக் கொண்டனர். இதனால் தமிழ்தேசியம் ஒரு பூதாகர நிலைக்கு மாறியது.

பாட்டாளி வர்க்க சித்தாந்தத்தை கொண்ட பலரும் ஓரங்கட்டப்பட்டார்கள். ஒருசிலர் தேசியவாதம் தீண்டத்தகாதது என ஒதுங்கியும் கொண்டனர். இதனால் சிங்கள இனவாதமும் தமிழ்த்தேசிய வாதமும் முட்டிமோதிக்கொண்டது. தமிழீழம் கோருவோர் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்றும் அது பிரிந்து போதலுடன் கூடிய சுயநிர்ணய உரிமையைக் கொண்டது என்றும் பாட்டாளிவர்க்க கோசத்தை எடுத்து பறைசாற்றினார்கள். இவர் களின் இக்கருத்து சரியானதாக இருந்த போதும் இங்கு பிரிந்து போதல் என்ற பதத்தில் நின்ற படி எம்மை பிரித்துத்தான் ஆகவேண்டும் என்றும்

கூறுகின்றனர். ஒரு தேசிய இனம் தனக்கான சுயநிர்ணய உரிமையை பிரிந்து போதலுடன் கூடிய தாக கோருவது என்பது சரியான கோரிக்கையாக இருந்தாலும் அதற்காக பிரிந்து போவதுதான் ஒரே முடிவு என்ற கோரிக்கை தப்பானது. இது பாட்டாளிவர்க்க சித்தாந்தத்திற்கும் முரணானதும் கூட...!

சிங்களப் பேரினவாதம் தமிழ் மக்களை ஒடுக்குவதற்காகவும் சிங்கள பாட்டாளி வர்க்கத்தை சுரண்டுவதற்காகவும் ஐக்கிய இலங்கை என்ற பதத்தை முன்தள்ளி சிங்கள பாட்டாளிகளை ஏமாற்றி வருகின்றது இதற்கு சிங்கள இடது சாரிகள் என்று கூறும் பலர் இதனூாடு உடன்பட்டுப் போகின்றனர். இங்கு உண்மையான பாட்டாளி வர்க்க சித்தாந்தத்தை கொண்டு இயங்கும் எந்த ஒரு அமைப்பும் பிரிந்து போதலுடன் கூடிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் அதே வேளை அது எல்லாத் தேசிய இனங்களுடனும் ஐக்கியப்பட்டே போராட்டத்தை நடத்தும். அதேபோன்று மற்றைய தேசிய இனங்கள் தமக்கு பிரிந்து போகும் உரிமையை அங்கீகரிக்க கோரும் அதே வேளை அது ஐக்கியத்துக்கான போராட்டத்தையும் முன்னிறுத்தி மற்றைய தேசிய இனங்களின் பாட்டாளி வர்க்கத்துடன் இணைந்து போராடும். இது பாட்டாளி வர்க்க சிந்தாந்த அரசியல் பார்வை.

இதையடுத்து இலங்கையின் புவிசார் வளம் பற்றிய விஞ்ஞான பூர்வமாகவும் இதைப்பற்றி ஆராயவேண்டும். அத்துடன் இலங்கையில் பல இன மக்கள் வாழ்கின்றனர் அவர்களை எந்தவகையில் வகைப்படுத்துவது

1. சிங்கள இனம்
2. தமிழ் இனம்
3. முஸ்லீம் இனம்
4. மலையகத் தமிழ்
5. பழங்குடியினர் (வேடுவர்)
6. ஐரோப்பிய கலப்பினத்தவர் (பேகர்)

இவ்வாறு பல இனக்குழுமங்களைக் கொண்ட ஒரு நாட்டில் அவர்கள் தமக்கேயான தனித்தன்மையுடன் தம்மை அடையாளப்படுத்தும் இவர்களை எந்த வகையில் வகைப்படுத்துவது. இவர்கள் அனைவரும் தேசிய இனமா? அல்லது முதல் நான்கு வகையினரும் தேசிய இனமா? போன்ற கேள்விகள் உள்ளன. இவ்வாறாயின் அனைத்து தேசிய இனங்களும் பிரிந்து தமக்கான இடங்களை பிரகடனப்படுத்துமாயின் ஒரு தீவு விஞ்ஞான பூர்வமாக அது சாத்தியமற்றதாகின்றது.

- சீலன்.

# முள்ளிவாய்க்கால் இரவுகள்..

ஓங்கி வளர்ந்திருந்த மரங்களினூடாக
ஒளியில்லாத நிலவு கசிகிறது
முடிவில்லாமல் கடல் அலைகள் கரைக்கு ஒதுங்குகின்றன
வெள்ளிய மணல் கும்பங்களில்
கால்கள் புதைய நடக்கின்றேன்
மெல்லிய அழுகைகள்,விம்மல்கள்
காற்று முழுக்க கதறல்கள்
திடீரென்று எங்கும் குழந்தைகள்,குழந்தைகள்
குறுநடை நடந்து சிறு கை வீசி
விம்மிய குழந்தை ஒன்று கேட்டது
எங்கே போயிருந்தாய் இவ்வளவு நாளும்
நாங்கள் பால் இன்றி,பால் தந்த தாயும் இன்றி
பரிதவித்த போது எங்கு போயிருந்தாய்
நீயும் கொலைகாரர்களில் ஒருவனா
கோபமாக கேட்டது
இல்லை.இல்லை பதறியபடி மறுத்தேன்
அந்த நாட்களில் நான் உண்டதில்லை
உறக்கம் கொண்டதில்லை
கண்கள் முழுக்க கண்ணீரோடு இருந்தேன்
கோபம் குறைந்த குட்டி கன்னக்குழி மிளிர கேட்டது
போர் முடிந்து விட்டதாமே
இப்போது குழந்தைகள் குதித்து விளையாடுகிறார்களா
மனிதர்கள் பகை மறப்பார்கள்
பைபிளில் சொன்னது போல்
பசுவின் கன்றும்,பால சிங்கமும்
பக்கம்,பக்கம் நின்று நீர் பருகும் என்றேன்
குழந்தைகள் தானே,நம்பி குதூகலமாக சிரித்தார்கள்
சென்று வாருங்கள் எம்செல்வங்களே என்றேன்
அப்பா எங்கே என்ற *அந்தோணி மகளின்
அழுகையை மறைத்தபடி.

(*) - [அரச படைகளால் கொல்லப்பட்ட புத்தளம் மீனவர்]

- விஜயகுமாரன்.

# "வாழ்க்கையின் ஒவ்வொரு அடியையும் மாற்றத்திற்கானதாகப் பார்க்க கற்றுக் கொண்டேன்... அந்த வகையில் நான் எப்போதுமே போராளிதான்"

வவுனியாவில் இருந்து நான் காலை எட்டு மணிக்கு ஏறிய இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து மூன்று மணித்தியாலங்களின் பின் தம்புள்ள நகரை சென்றடைந்தது. நகரத்தின் மத்திய பஸ் தரிப்பு நிலையத்தில் இறங்கிய எனக்கு திசை ஒன்றும் விளங்கவில்லை. இருபத்தி இரண்டு வருடங்களுக்கு முன் தம்புள்ளைக்கு வந்ததாக நினைப்பு. இன்று யாழ்பாணத்தை விட, ஏன் அனுராதபுரத்தை விட வளர்ச்சி அடைந்த நகராக காட்சி தருகிறது. வன்னி ஒரு காலத்தில் இலங்கையில் அரிசிக்களஞ்சியம் என்பது போல தம்புள்ள இப்போதும் இலங்கையில் மரக்கறித் தோட்டமாக விளங்குகிறது. கிட்டதட்ட இலங்கையில் நடுப்பகுதில் அமைத்துள்ள தம்புள்ள இன்று நாட்டின் பெரும்பான்மையான பகுதிகளுக்கு மரக்கறியை விநியோகிக்கும் சந்தையாக மட்டுமல்லாமல் பல சேவை களை வளங்கும் நவீன நகரமாகவும் இயங்குகிறது. யுத்தத்துக்கு பின்னான இன்றைய காலத்தில் அரசினாலும் சர்வதேச நிறுவனங்களாலும் உல்லாசப்பயணிகளை கவரும் நகராக அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது. இன்று தம்புள்ள சிங்கள மக்களின் வாழ் பிரதேசமாகவே பலராலும் அறியப்பட்டுள்ளது. இன்றுள்ள மக்கள் தொகையில் பெரும்பான்மயானவர்கள் சிங்களவர்களாகவும், அடுத்து முஸ்லீம்களும், தமிழர்கள் சில ஆயிரம் பேரும் தம்புள்ளையில் வசிக்கின்றனர். ஆனால் பத்தாம் நூறாண்டில் இருந்து 1980 ஆண்டு வரை தமிழர்களின் செல்வாக்கு மிகுந்த பிரதேசமாக தம்புள்ள விளங்கியது. தம்புள்ளை என்று தமிழர்களால் அழைக்கப்பட்ட இன்றைய டம்புள ராஜராஜசோழன், ராஜேந்திரசோழன் போன்றோரால் ஆளப்பட்டுள்ளது. தென்னிந்திய கலாச்சரா சின்னங்களும் எச்சங்களும் இன்றும் தம்புள்ளையில் காணக்கூடியதாக உள்ளது. இன்று தம்புள்ள பல நூறாண்டுகளின் பின் அரசியல் சர்ச்சைகளின் நிலமாகவும் மாறி வருகிறது. இதனால் வடக்கினில் குறைக்கப்பட்டு வரும் படையினரைக் கொண்டு நகரின் வெளிப்புறத்தை அண்டி இராணுவ முகாம்கள் அமைக்கப்படுகிறது. குறிப்பாக கடந்த வருடத்தின் இறுதி பகுதியில் இலங்கை அரசுக்கு எதிராக நடைபெற்ற விவசாயிகளின் போராடத்தின் பின் படையினரினதும், புலனாய்வு பொலிசாரினதும் பிரசன்னம் அதிகரித்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இரண்டு மணித்தியாலங்கள் நகரின் மத்திய பிரதேசத்தை சுற்றி பார்த்ததுடன், ஓட்டோ சாரதிகள், சாப்பாட்டு கடை ஊழியர்கள், சந்தையில் வியாபரிகள் சிலருடன் உரையாடியதில் மேற்கண்ட தகவல்களை அறிந்து கொண்டேன். நான் தம்புள்ள வந்ததன் நோக்கம் சைந்தவி ராஜரத்தினம் என்ற முன்னால் யாழ் பல்கலைக்கழக மாணவியை முன்னணி இதழுக்காக பேட்டி எடுப்பதற்காகவும் இன்றைய மத்திய இலங்கையில் அரசியல் சூழலை விளங்கி கொள்வதற்காகவுமாகும். கடந்த இதழில் முன்னாள் பல்கலைக்கழக மாணவியும் போராளியுமான ஜனனி செல்லத்துரை பேட்டி கண்டிருந்தேன். அவரை போலவே சைந்தவி ராஜரத்னமும் எனக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவியாக அவர் இருக்கும் போது 2004 எனக்கு அறிமுகமானார். அவரை நான் வடபகுதி "தமிழ் இளையோரும் தற்கொலையும்" என்ற தலைப்பிலான எனது களஆய்வுக்காக பேட்டி கண்டிருந்தேன். இன்று சைந்தவி தனது பிறப்பிடமான தம்புள்ளயில் வசிக்கிறார். சைந்தவி சொன்னபடி தம்புள்ளை நகரை ஊடறுத்து செல்லும் யு9 பாதையில் அமைத்துள்ள உல்லாசப்பயணிகள் விடுதியின் சிற்றூண்டிச்சாலையில் என்னை சந்திக்க வந்திருந்தார். சிங்கள பெண்கள் அணியும் முறையில் சேலை உடுத்திருந்தார்.

**2004 இக்கு பின்னான உங்களது சீவியம் இன்று எப்படி உள்ளது? தனிமனித, சமூதாய, அரசியல் கண்ணோட்டத்தில் பதிலை எதிர்பார்கிறேன். உதாரணமாக, உங்களை 2004 இல் சந்திக்கும் போது தமிழ்.., தமிழ்.., தமிழ்ஈழம் என்று நீங்கள் தமிழ் தேசியவாதியாக உங்களை உருவாகப்படுத்தினீர்கள். இன்று உங்கள் உருவமே மாறியுள்ளது. சிங்கள சாறியும் நெற்றி பொட்டும் இல்லாமல் வந்துள்ளீர்கள் ....**
**சிரித்தபடி பதில் சொல்ல ஆரம்பிக்கிறார் சைந்தவி.**

முதலல ஒரு கண்டனம். நான் ஆணாக இருந்திருந்தால் நீங்கள் நான் எந்த உடையில் வந்திருந்தாலும் அதைப்பற்றி கேட்டிருக்க மாட்டீர்கள். பெண்கள் இன, மொழி, பிரதேச, சாதி அடையாளங்களை காவ வேண்டுமென்ற ஆணாதிக்க சமூதாய சிந்தனையின் வெளிப்பாடுதான் உங்கள் கேள்வியின் பின்னணியில் உள்ளது. அதுவும் இடதுசாரி அரசியல் பின்னணி கொண்டவராவும் ஐக்கிய இலங்கைக்குள் அனைத்து

தேசிய சமூக முரண்பாடுகளுக்கும் தீர்வு காணப்பட வேண்டுமெனவும் இனங்களுக்கிடையிலான ஐக்கியம் வளர்க்கப்பட வேண்டுமெனவும் கதைக்கும் நீங்கள் நான் சிங்கள சாறியில் நெற்றி பொட்டில்லாமல் வந்தது பற்றி கேட்டதை கண்டிக்கிறேன். தம்புள்ள ஒரு பல்லின சமூகம். இங்கு பிறந்து வளர்ந்த எனக்கு எந்த உடை அணிவதென்ற பிரச்சனை எந்த காலத்திலும் இருந்ததில்லை. இப்போ நான் கணக்காளராக இங்குள்ள பிரபல நிறுவனம் ஒன்றில் வேலை செய்கிறேன்.



மற்றது நான் எந்தகாலத்திலும் தமிழ் ஈழ தேசியவாதியாக என்னை காட்டிக் கொள்ளவில்லை. நான் யாழ்ப்பாணத்தில் படித்த காலத்தில் (1999 -2006)இ அரச படைகளின் கட்டுப்பாடில் யாழ்ப்பாணம் இருந்தாலும் அங்கு புலிகளின் கை ஓங்கி இருந்தகாலம். அங்கு சீவித்த அனைவரும் அவர்களின் கொள்கைக்கு இணங்கியவர்களாக காட்டிக்கொள்ள வேண்டிய தேவை இருந்தது. குறிப்பாக யாழ்பாண பல்கலைகழகத்தில் என்னை போன்ற வடக்கு - கிழக்குக்கு தவிர்ந்த வெளி மாவட்டங்களில் இருந்த கல்விகற்றவர்கள் பலர் தமிழர் களாக இருந்தாலும் சந்தேக கண்ணுடன் பார்க்கப்பட்டோம். வெளிமாவட்ட ஆண் மாணவர்கள் சிலரை இலங்கை அரச புலனாய்வு நிறுவனங்களின் உறுப்பினர்கள்இ என எமது சக மாணவர்களே புலிகளிடம் கோள் மூட்டி கொடுத்தார்கள்.

அதனால் பலர் தமது கல்வியை இடைநிறுத்தி விட்டு சொந்த ஊருக்கு போய் விட்டனர். என்னை போன்ற வெகு சிலரே அங்கு எமது கல்வி கற்கை நிறைவு செய்தோம். நீங்கள் என்னை சந்தித்த 2004 போர் நிறுத்த காலப்பகுதியில் யாழ் பல்கலை கழகம் முற்று முழுதாக புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. அப்போது புலிகளுடன் சாராது சில மாணவர்களால் பொங்குதமிழ் என்ற சிறு நிகழ்வு உருவாகப்பட்டது. நான் பாடக் கூடியவளாக இருந்ததால் நானும் அதில் பங்கு கொண்டேன். பொங்குதமிழ் நிகழ்வை ஆரம்பித்தவர்களை மிரட்டி தமது கட்டுப்பாடில் கொண்டு வந்தனர் புலிகளின் அதிகார சக்திகளாக அங்கு வலம் வந்த புலிகளின் மாணவர் பிரதிநிதிகளான கஜேந்திரன் (குதிரை) போன்றோரும் கணேசலிங்கம் போன்ற விரிவுரையாளர்களும். புலிகளுடன் எனக்கு உடன்பாடு இல்லாவிட்டாலும் பொங்குதமிழ் நிகழ்வில் இருந்து விலக முடியவில்லை. அப்படி விலக முயன்றவர்கள் தண்டிக்கப்பட்டனர். சிலர் வன்னிக்கு அழைத்து செல்லப்பட்டனர். அப்போதான் நீங்கள் என்னை சந்தித்தீர்கள். அதனால் தான் நான் அன்று என்னை தேசியவாதியாக உருவாகபடுத்தினேன் என நீங்கள் கூறுகிறீர்கள்.

**சரி தமிழ் தேசிய விடுதலை போராட்டத்தை பற்றி நீங்கள் இன்று என்ன நினைகிறீர்கள் ?**

அது வடக்கு - கிழக்கு தமிழர்களின் போராட்டம். குறிப்பாக அது வடக்கின் யாழ்பாண மேல்தட்டு வர்கத்தின் போராட்டம். மேற்படி வடக்கு - கிழக்குக்கு வெளியில் எல்லைப் பிரதேசங்களில் பாரம் பரியமாக வசித்த எம்மையோ அல்லது மலையாக மக்களையோ அந்த போராட்டத்தில் எவரும் இணைக்க முயற்சி செய்யவில்லை. இலங்கை அரச இயந்திரத்தின் திட்டமிட்ட முறையில் முன்னேடுக்கப்பட்ட கொடுமைகளை அனுபவித்தவர்கள் எல்லைப்புற பகுதிகளான தம்புள்ளை, அனுராதபுரம் போன்ற நகரங்களில் வாசித்த தமிழர்கள். அதேபோன்று பல நூறு வருடங்களாக இன்றுவரையும் தொழிலாள வர்க்கமாகவும் தமிழர்கள் என்ற இன அடிப்படையிலும் ஒடுக்கப்படுபவர்கள் மலையாக மக்கள் . நாம் அனுபவித்த ஒடுக்கு முறையுடன் ஒப்பிடும்போது வடபகுதி மக்கள் நேரடியாக 80களுக்கு முன் பெரிய அளவில் எந்த ஒடுக்குமுறையையும் ஒப்பிடளவில் அனுபவிக்கவில்லை. என்னை பொறுத்த அளவில் தமிழ் தேசிய விடுதலை போரட்டமானது வடபகுதி அரசியல்வாதிகளால் தமது சுயநல தேவைக்காக மக்கள் மீது திணிக்கப்பட்ட ஒன்று. அதனாலேயே பாரிய புலம்பெயர்வை வடபகுதி மக்கள் மேற்கொண்டனர் அவர்கள் எவரும் அந்த போராட்டத்தை தமதாக நினைக்கவில்லை. இன்று மூன்றில் ஒருபங்கு தமிழர்கள் மேற்கு நாடுகளில் வாழ்கின்றனர்.

**புலிகளின் தோல்விக்கும் இதுதான் காரணம் என்கிறீர்களா ?**

பல காரணங்கள் இருக்கலாம்இ ஆனால் மக்கள் தமது போராட்டமென நினைத்து அதற்கு உரிமை கொண்டாடாத போராட்டம் எதுவும் வென்றதாக சரித்திரம் இல்லை. எந்த வர்க்கம் தேசிய போராடத்தை திணித்ததோ அதே வர்க்கம் போராட்டம் முற்றி அது வன்முறையாக மாறியபோது அதிலிருந்து தப்பியோடியது. கல்வியில் அரச பதவிகளில் சம உரிமை இல்லாமல் போய் விட்டதென காரணம் காட்டி போராட்டத்தை ஆரம்பித்த வர்க்கம் புலம் பெயர்ந்த நாடுகளில் அனைத்து வசதியையும் அங்கு பெற்று

கொண்டது. புலம் பெயர்த்த மக்கள் புலிகளுக்கு காசு கொடுத்து ஒருவகை proxy போராடத்தை இங்கு முன்னெடுத்தார்கள். அடிப்படை வசதிக்காக அன்றாடம் போராடிய மக்கள் தலையில் தேசிய இனப்பிரச்சனையும் போரும் சுமத்தப்பட்டது. அதற்கு பலியானவர்கள் சமூதாயத்தில் ஏற்கனவே மேற்படி புலம் பெயர்ந்த மேற்தட்டு வர்க்கத்தால் சாதி சமூதாய ரீதியாக ஒடுக்கப்பட்டவர்களே. அதே போன்று மறு பக்கத்தில் பேரினவாத மேற்தட்டு வர்க்கத்தின் அதிகார வெறிக்கு உழைக்கும் சிங்கள மக்களின் எதிர் காலமும் அவர்களின் பிள்ளைகளின் உயிரும் பலியிடப்பபட்டது. ஆகவே தமிழ் தேசிய போராட்டமென்பது கருவிலேயே சிதைவடைந்த போராட்டம். புலிகள் தலைமை தாங்கினால் என்ன வேறு யாராவது தலைமை தாங்கினால் என்ன அது இறுதியில் அழிவையே முடிவாக கொண்டிருக்கும்.

**மேற்படி உங்கள் பதிலில் வர்க்கம் என்ற பதத்தை பல இடங்களில் பாவிக்கிறீர்கள். அப்படியானால் சிலர் சொல்வது போல வர்க்கசிந்தனையை அடிபடையாக கொண்ட சக்திகளால் தான் இனி தோற்றுப் போன தமிழ்த்தேசிய பிரச்சனை கையாள படவேண்டுமென நினைக்கிறீர்களா?**

எந்தவித தத்துவ பின்புலத்தை கொண்ட சக்திகள் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டுமென்பது நானோ அல்லது சில தனிநபர்களோ தீர்மானிக்கும் விடயமல்ல . அது எந்தவிதமான சமூக பொருளாதார சூழல் ஒரு சமூகத்தில் நிலவுகிறதென்றதை பொருத்தது. செருப்பின் அளவுக்கு தக்கியது மாதிரி காலை வெட்ட முடியாது. அது போன்று தத்துவதுக்கு தக்கியது மாதிரி சமூக பிரச்சனைகள் தம்மை மாற்றி கொள்வதில்லை. தத்துவ பிரயோகம் தான் பிரச்னைகளுக்கு தக்கியது மாதிரியாக அதை தீர்க்கும் முகமாக இருக்க வேண்டும். இன்றுவரை வலதுசாரி தத்துவ சிந்தனையும், முதலாளித்துவம் சார்ந்த சக்திகளும் தான் இலங்கையில் தமிழ்தேசிய பிரச்சனையில் ஆதிக்க சக்திகளாக இருந்து வருகின்றனர். அதனால் தான் போராட்டம் பாரிய வீழ்ச்சியை சந்தித்துள்ளது. இதன் அடிப்படையில் வர்க்க பார்வையில் உலகத்தை விளங்கி கொள்ளும் தத்துவப்பார்வை கொண்ட சக்திகள் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டுமென்பதே என்னை பொறுத்த அளவில் எம் முன்னுள்ள ஒரே தெரிவு.

**அதாவது சிலர் சொல்வதுபோல “சர்வலோக நிவாரணியான” மார்க்ஸ்சிஸ தத்துவம் தான் ஒரே தெரிவு என கூற வருகிறீர்கள் ?**

நீங்கள் நகைப்புகாக கூறினாலும் இன்றுள்ள உலகத்தின் முரண்பாடுகள் அனைத்தையும் அது தேசிய, சாதிய, வர்க்க, பெண்ணிலை சார்ந்த எவ்வகையான முரண்பாடாக இருக்கலாம். இவை அனைத்தையும் விளங்கி கொள்ள உதவுவதுடன் அரசியல் சார்ந்து சமூக மாற்றம் மூலம் சமூக முரண்பாடுகளை தீர்க்க வழிகாட்டுவது மார்க்ஸ்சிசமே. அத்துடன் அனைத்து முரண்பாடுகளையும் இணைத்து அவற்றிற்கு எதிராக போராட வகை சொல்வது மார்க்ஸ்சிசம் மட்டுமே. உதாரணமாக தேசிய போராட்டத்தை பெண்ணிய ஒடுக்கு முறைக்கெதிரான போராட்டத்தை வர்க்க முரண்பாட்டை தீர்க்கும் போராட்டத்துடன் இணைக்க முடியும். இன்று மலையகத்தில் மலையக மக்களை தேசிய இனமாக முன்னிறுத்தி உரிமைக்காக போராடும் குரல்கள் எழுதுள்ளன. இந்த குரல்கள் மலையக மக்களின் தேசிய உரிமையை முன்னிறுத்தும் அதேவேளை அவர் களின் வர்க்க நலனையும் உயர்த்திப் பிடிக்கின்றன. மலையக தமிழர்களின் வர்க்க மற்றும் தேசிய உரிமை பற்றி கதைக்கும் போது அங்குள்ள பெண்களின் உரிமை பற்றி கதைத்தே ஆகவேண்டும். ஆகவே நீங்கள் என்ன தான் சொன்னாலும் மார்க்ஸ்சிசம் சமூகத்தின் எல்லா பிரச்சனைகளுக்கும் தீர்வுகாண பிரயோகிக்க கூடிய தத்துவம். எனது இந்த கருத்தை ஏற்பதும் ஏற்காததும் அவரவரது வர்க்கம் சார்ந்தது.

**இன்று தம்புள்ளயின் அரசியல் சமூக நிலைமை பற்றி சொல்லுங்கள்.**

தம்புள்ளையை இன்று அரசபடைகளால் “சிறை” பிடிக்கப்பட்ட பிரதேசமாகவுள்ளது. யுத்தம் நடந்தபோது இங்கு படையினர் பெரிய அளவில் இருக்கவில்லை. இப்போ தம்புள்ளையை சுற்றி பயிற்சி முகாம்களும் ராணுவ தளங்களும் உருவாக்கப்பட்டுள்ளது. பல நூறு ஏக்கர் தனியாரின் விவசாய காணிகளும், அரச காணிகளும் காடும் பாதுகாப்பு அமைச்சினால் கையகப்படுத்தப்பட்டுள்ளது. நீங்களே கவனித்திருப்பீர்கள், எங்கு பார்த்தாலும் இராணுவத்தினரையும் புலனாய்வு பிரிவினரையும் காண முடியும். கடந்த வருடம் மரக்கறி விவசாயிகளால் நடத்தப்பட்ட பிளாஸ்டிக் கூடைக்கு எதிரான போராட்டத்தின் பின் மேற்படி ராணுவம் மற்றும் புலனாய்வு பிரிவினரின் கண்காணிப்பு இங்கு அதிகரித்துள்ளது. போராடத்தை முன்னெடுத்தவர்கள் அதன் பின் வந்த நாட்களில் பயம் காரணமாக ஒருவர் ஒருவராக இங்கிருந்து வேறு பிரதேசங்களிற்கு போய்விட்டனர் என சொல்லப்படுகிறது. அதேவேளை இங்கு மக்கள் போராட்ட இயக்கம் மற்றும் ஜேவிபியின் அரசியல் வேலைகளும் அதிகரித்துள்ளது. இன்னொருவகையில் சொல்வதானால் “புயலுக்கு முந்திய அமைதி”யான ஒருவகை அச்சமூட்டும் நிலை இங்கு நிலவுகிறது.

**உங்களுடன் யாழ்ப்பாண பல்கலைகழகத்தில் படித்தவர்கள் சிலரை யுத்தத்துக்கு பின்னான காலத்தில் சந்தித்தேன். அனைவரும் வெகுவாக விரக்தி அடைந்த நிலையில் உள்ளனர். கோபமும். ஆத்திரமும் அவர்களிடம் மிதம் மிஞ்சி காணப்படுகிறது. ஒருவகை**

**கையறு நிலையில் அவர்கள் இருப்பதை உணர்ந்தேன். நீங்கள் அவர்கள் பலருடன் சேர்ந்து இயங்கியவர். ஆனால் அவர்களிடம் காணப்படும் மேற்படி விரக்தியான நிலை உங்களிடம் காண முடியவில்லை . காரணமென்ன? மேலும் புலிகளுடன் முரண்பட்டவர்களை கூட புலிகளின் வீழ்ச்சி பாதித்தது.**

நீங்கள் சொல்வது மிகவும் சரி. எனது பல்கலைக்கழக தோழர்கள் பலரை முன்னாள் போராளிகள் என கூறமுடியும். அவர்கள் தம்மை விரும்பி புலிகளுடன் இணைத்து கொண்டவர்கள். புலிகளின் போராட்டம் வெல்லுமென்ற நம்பிக்கையில் தமது வாழ்வை அர்ப்பணித்தவர்கள். வெளிநாட்டு மாப்பிள்ளை, வெளிநாட்டு சீவியம், லண்டம் ஸ்கொலர்ஷிப் போன்றவரை தூக்கி எறிந்தவர்கள் அவர்கள் . ஆனால் இன்று எல்லாம் இழந்து நடுரோட்டில் நிற்பது போன்ற வாழ்க்கை சூழலில் உள்ளனர். நான் சில காலம் அவர்களுடன் இணைத்திருந்தாலும் என்னை ஒரு முன்னாள் புலி போராளி என கூற முடியாது. நான் ஒரு அடிமட்ட கூலி விவசாயியின் மகள். இன முரண்பாடுகளை நாம் அரச இயந்திரத்தால் அனுபவித்திருந்தாலும் அன்றாட சீவியத்துக்கான போராட்டம் எப்போதும் முக்கிய பிரச்சனையாக என் குடும்பத்துக்கு இருந்தது. அதே போன்று எம்மை சுற்றி இருந்த முஸ்லீம்கள் சிங்களவர்கள் அனைவருக்கும் வறுமைதான் முக்கிய பிரச்சனையாக இருந்தது. அதனால் சாதாரண மக்களான எமக்கிடையில் இன முரண்பாடு பெரிதாக வளரவில்லை. நான் அயல் வீட்டு சிங்களவர்களின் சாப்படை சாப்பிட்டு வளர்த்தவள். அதனால் புலிகளின் தோல்வி என்னை பெரிதாக பாதிக்கவில்லை. 2006 ஆம் அண்டு நான் கேலனிய பல்கலைக்கழகத்தில் Master of Accounting and Finance கற்கையில் ஈடுபட்டபோது மார்க்சிய சிந்தனையை அறிந்து கொண்டதும் தோல்வி என்னை பாதிக்காததிற்கான முக்கிய காரணியாக இருக்கலாம். மார்க்சிசம் மூலம் நான் வாழ்க்கையின் ஒவ்வொரு அடியையும் மாற்றத்திற்கான அடியாக பார்க்க கற்று கொண்டேன். அந்த வகையில் நான் எப்போதுமே போராளிதான்.

**முன்னாள் போராளி ஒருவரை சந்திக்க போகிறோம் என்ற எண்ணத்தில் வந்த எனக்கு, தான் எப்போதும் போராளிதான் என அறிவுறுத்தி விட்டு என்னிடமிருந்து விடை பெற்றார் சைந்தவி ராஜரத்தினம். மூன்று மணித்தியாலங்கள் எவ்வாறு கழிந்ததென்று தெரியாமல் கழிந்திருந்தது. தம்புள்ள நகரை செக்கல் கவிந்தது. நகரின் மேற்கு புற வானம் சிவந்திருந்தது.**

**- மா.நீனா.**


**இணையம் மூலம் கற்றுக்கொள்ள பத்தாயிரம் ஆவணங்கள் !**


**இயக்க வெளியீடுகள், சஞ்சிகைகள் முதல் மார்க்சிய நூல்கள் பழையன முதல் புதியன வரை கிடைத்தற்கரியவை பல தொடர்ந்து இணைக்கப்பட்டு வருகின்றன.**

**எமது படிப்பக இணையத்திற்கு சென்று கற்று பயன் அடையுங்கள்.**

HTTP://WWW.PADIPPAKAM.COM/

**இந்த இணையத்தினை மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். இதற்கு உங்கள் பங்களிப்பினை வழங்குவதோடு, உங்கள் கருத்துக்களையும், அபிப்பிராயத்தினையும் அறியத்தாருங்கள். .**






**புதிய ஜனநாயக மக்கள் முன்னணி**



# மீண்டும் அப்பாவாகிறேன்...

**தாய் தகப்பனுடன் இருக்க முடியாத காரணங்களினாலும் தாய் தகப்பன் இருந்தும் சில சமூகப்பழக்க வழக்க நடைமுறைகளை சரிவரச் செய்யத் தெரியாத ஒரு வகை உளவியல் வருத்தங்களைக் கொண்ட பிள்ளைகளை பராமரிக்கின்ற இடம் தான் நான் வேலை செய்யும் இடம். மெசின்களுடன் வேலை செய்வதை விட இந்த மனிதர்களுடன் வேலை செய்வதென்பது மிகவும் கஸ்ரமான ஒன்று. அதிலும் குழந்தைகளுடன் அதுவும் கொஞ்சம் மனம் சரியில்லா உளவியல் குறைபாடுள்ள பிள்ளைகள் என்றால். அதை அனுபவிச்சவர்களுக்குத் தான் தெரியும்.**

ஒரு நாள் வேலையில் குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருந்த போது என்னுடைய பொறுப்பதிகாரி வந்து உடனே வா உன்னுடன் கதைக்க வேண்டும் என்று என்னை கூட்டிக் கொண்டு தனது அலுவலகத்துக்குள் போனாள். இப்ப உனக்காக புதிய வேலை ஒன்று காத்திருக்கு என்றும் எங்கள் மேலிடத்துக்கும் அதற்கு மேலான சமூக சென்ரருக்கும் தகவல் அனுப்பி விட்டேன். நீ தான் அதற்குச் சரியான ஆள் என்றும் நான் தான் சிபார்சு செய்தேன் என்றும் சொல்லிக் கொண்டு போனாரே தவிர என்ன விடையம் என்பது பற்றி ஒன்றும் விளக்கமாகச் சொல்லவில்லை.

இந்த மனுசியைக் கோவிக்கவும் முடியாது. செய்தா ஏதோ அது நல்லாத் தான் செய்யும் என்ற நம்பிக்கை எனக்கு நிறையவே இருக்கு. கிட்டத்தட்ட இந்தத் தொழிலிலேயே பலவருடங்களுக்கு மேல் வேலை செய்த அனுபவமுள்ள மனுசி.

என்ன விசயம் என்று சொல் நான் அதற்கு ஓமோ இல்லையோ என்று பதிலளிக்கிறேன் என்றேன்.

உனக்கு ஒரு நல்ல சந்தோசமான செய்தியாகத் தான் இருக்கும் என்று நான் நினைக்கின்றேன் மிகுந்த சந்தேசத்துடன் சொன்னாள். அடுத்த கிழமை அகதி முகாமிலிருந்து அகதி அந்தஸ்த்துக் கிடைத்து இரண்டு தமிழ்க் சகோதரக் குழந்தைகள் எமது இடத்துக்கு வருகின்றார்கள். அவர்கள் ஏன் அனுப்பப்படுகின்றார்கள் என்ற சட்டரீதியான காரணங்களையும் இங்கே இருக்க வேண்டிய தேவைகள் பற்றியும் எனக்கு தெளிவாக விளங்கப்படுத்தினார்.

நான் கண்ணை வெட்டி முழிக்க, என்ன யோசிக்கிறாய். அவர்கள் இருவரும் போரிலே தாய் தந்தையைப் பறிகொடுத்த அனாதைக் குழந்தைகள், யாரோ உறவினர்களின் உதவியினால் இங்கு வந்தவர்கள் என்ற போது என் மனம் ஒரு கணம் பாஸ்போட் விஸா இல்லாமல் என் நாடு போய் திரும்பி வந்தது.

அனாதைக் குழந்தைகள் என்ற அந்தந் சொல்லை மறந்து அதற்கு இன்னொரு சொல் வைக்க வெண்டும் என்று என்மனம் அங்கலாய்த்துக் கொண்டது. போர் பற்றியும் அதன் கொடுமைகள் பற்றியும் இவர்களுக்கு நன்கு தெரிவது போல் இப்ப எங்களுக்கும் எல்லாத் தமிழ் மக்களுக்கும் இந்தக் கொடுமைகள் பற்றி நன்கு தெரியும்.

ஏற்கனவே இங்கே மூன்று தமிழ்குழந்தைகள் இருப்பதால் உனக்குப் பொறுப்புக்கள் கூட வரும் என எதிர்பார்க்கிறேன். உனக்கு என்ன தேவையோ அதைப் பெற்றுக் கொள்வதற்கான அனைத்து உரிமைகளும் உனக்குண்டு என்றபடியே மிச்சக் கோப்பியை எடுத்து ஊத்தினாள். குடித்து விட்டு வேறு கதைகளும் கதைத்து விட்டு வெளியே வந்து விட்டேன்.

அன்று வேலையில் பொறுப்புக்கள் நிறைய இருந்தாலும் எதையுமே மனம் நிறைவாக ஏற்றுக் கொள்ளவில்லை. அந்தக் குழந்தைகள் எப்படியிருப்பார்கள் என்பது பற்றியும் தாய் தந்தையை எப்படி பறிகொடுத்தார்கள் என்பது பற்றியும் அல்லது அசேலம் கேட்பதற்காக சும்மா தான் சொல்லியிருப்பார்களா? என்றும் அல்லது தனது கண்ணுக்கு முன்னே பறிகொடுத்திருப்பார்களா என்றும் அந்தக் கடும் போரை எப்படி எதிர்கொண்டார்கள் என்றும் எனது மனம் அங்கலாய்த்து அங்கலாய்த்து தவித்துக் கொண்டது. அவர்கள் வந்தால் எந்த அறையில் அண்ணன் தங்க வேண்டும் எந்த அறையில் தங்கை தங்க வேண்டும் என்ற ஒழுங்குகளோடு மற்றும் அவர்களுக்குத் தேவையான மற்றைய விடையங்களும் விரைவாக நடைபெற்றுக் கொண்டன.

அந்த நாளும் வந்தது. அவர்களும் வந்தார்கள். பார்ப்பதற்கு அழகாய் முழிப்பாய் இருந்தார்கள். பொடியன் கொஞ்சம் பயந்த சுபாவம் கொண்டவன் போலவும் கொஞ்சம் கூனிக்குறுகி பயந்து பயந்து முழித்துக்கொண்டான். ஆனால் பெட்டையோ மிகவும் துடிப்பானவளாகவும் மிகுந்த சுட்டித்தனமாகவும் காணப்பட்டாள். ஏற்கனவே எனக்குக் கிடைத்த தகவல்களுக்குரிய கற்பனைத் தோற்றத்தில் அவர்கள் இருவரும் இருக்கவில்லை. ஏற்கனவே அவர்கள் இருந்த

இடத்தில் இந்த இடம் பற்றியும் என்னைப் பற்றியும் நிறையவே கேள்விப்பட்டிருக்கின்றோம் என்றும் நான் தானாம் தங்களுக்கு சகல பொறுப்புக்கள் என்றும் சிரித்துக்கொண்டே தங்கை சொன்னாள்.

இப்படியே எனது வேலையும் எங்களது உறவும் வளர்ந்து கொண்டு போனது. நாட்கள் கிழமைகளாகி கிழமைகள் மாதங்களாகி காலம் தன்னையறியாமல் கரைந்து கொண்டிருந்தது. வேலை முடிந்து வீட்டுக்குப் போகவிடாமல் தங்களுடன் இருக்கும் படி அவள் பல முறை வேண்டிக் கொண்டாள். அல்லது எங்களையும் வீட்டுக்கு கூட்டிக் கொண்டு போங்கள் என்றும் வேண்டினாள்.

என்னுடைய மனதிலும் பல மயக்கங்களும் குழப்பங்களும் வந்து போயின ஆனாலும் தவிர்த்துக் கொண்டேன். வேலையின் சட்டதிட்டங்களுக்கமைய என்னைக் கட்டுப்படுத்தியும் என்னை நானே வருத்தியும் சிலவற்றைக் கட்டுப்படுத்திக் கொண்டேன்.

ஒரு நாள் இரவு ஏதோ படம் பார்த்துக் கொண்டிருந்த போது திடீரென்று ஏதோ நினைத்தவளாய் நான் இப்பொழுது உங்களுக்கு ஒரு கதை சொல்ல வேண்டும். இங்கே ஒருத்தருக்கும் தெரியாத பெரிய உண்மையென்றும் இதுபற்றி ஒருத்தருக்கும் சொல்லக் கூடாது என்று என் கைகளைப்பற்றிக் கொண்டாள். நானும் வியப்போடும் ஆவலோடும் பார்த்துக் கொண்டு நிண்டேன். உண்மையிலே எனக்கு அம்மா இருக்கிறா, அப்பா தான் இல்லையென்றும் நான் மூன்று மாதக்குழந்தையாய் இருக்கும் போதே இயக்கக்காரர் அப்பாவைச் சுட்டுப் போட்டினமாம். அப்பா வேறொரு இயக்கமாயிருந்த காரணத்தால் அவரை மற்ற இயக்கக்காரர் சுட்டுப்போட்டினமாம் என்றும் எனக்கு அப்போது தெரியாது நான் இங்கே வரும் வேளையில் தான் அம்மா எல்லாம் விபரமாகச் சொன்னவ. என்றும் இது பற்றி யாரிடமும் கதைக்கக் கூடாது என்றும் சொன்னவ. ஆனா, உங்களுக்கு இதை மறைக்க விரும்பவில்லை தெரியப்படுத்த வேண்டும் போலிருந்தது என அந்தப் பெரிய உண்மையையும் அந்த இருண்ட சோகத்தையும் என்மேல் இறக்கிவிட்டு அந்தக்குழந்தை மீண்டும் படத்தைப் பார்க்கத் தொடங்கியது.

என்னை அறியாமல் என் கைகள் அவளை அணைத்துப் பற்றிக் கொண்டது. ஏதோ நினைத்தவளாய் நான் அப்பாவின் போட்டோவைக் கூட பார்க்கவில்லை என்றும் ஒண்டோ இரண்டோ படம் இருந்ததாம் அதுவும் சண்டை நேரங்களில் துலைந்து விட்டதாம் அவர் எப்படியிருப்பார் என்று கூடத் தெரியாது என்றாள்.

நான் ஒன்றுமே பேசாது மௌனமாய் இருந்தேன். ரீவியில் ஓடிக்கொண்டிருந்த படம் பலத்த சத்தமாய் கேட்டது. என்னுடைய இந்தப்பாத்திரமானது மிகவும் கஸ்ரமாயே இருந்தது.. நண்பனாய் தோழனாய் தாயாய் தந்தையாய்.. பல வேடங்களிலேற்று நடிக்கவேண்டியதாயிற்று. உலகம் தெரியாத அந்தக் குழந்தைகள் இரண்டும் என் அன்பை மட்டுமே வேண்டி நின்றார்கள்.

இப்படியே எங்கள் மூவரது நெருக்கமும் அன்பும் வளர்ந்து கொண்டு போக காலங்களும் நகர்ந்து கொண்டு போனது. இப்படியே ஒரு நாள் வேலைக்கு வந்த போது திடீரென ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்துக்காக உடனே அழைக்கப்பட்டேன். எமது இல்லப்பொறுப்பாளர் உளவியலாளர் சமூகசேவையாளர் பாடசாலைப் பொறுப்பாளர்கள் என பலபேர் கூடியிருந்தார்கள். எனக்கு வியப்பாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது. என்ன அப்படி என்ன அவசரக்கூட்டம் என நான் விழித்த போது எல்லாம் தாரணி பற்றிய விடையங்கள் தான் என்றும் பொறுப்பாளர் கதைக்கத் தொடங்கினார்.

இண்டைக்கு தாரணி எல்லாரையும் பயப்படுத்திப் போட்டாள். ஒருமாதிரி பிடித்து சமாளிச்சு வைச்சிக்கிறோம். இண்டைக்கு இரண்டு முறை தற்கொலை முயற்சியில் இறங்கிவிட்டாள். என்ற போது என்னையறியாமல் உடம்பெல்லாம் படபடத்து வியர்த்தது.

தற்கொலையா..? வியப்போடு கேட்டேன். இவளின் பள்ளிக்கூடத்திலே ஏதோ விண்ணப்படிவம் நிரப்பும் படி கொடுத்த போது அப்பாவின் பெயர் வரவேண்டிய இடத்தில் உன்ரை பெயரைப் பதிந்திருக்கின்றாளாம். அதுமட்டுமல்ல பள்ளிக்கூடத்திலே பாவிக்கும் கொம்பியூட்டரின் இரகசிய பெயர்களுக்கும் உன்னுடைய பெயர் தான் பதிவு செய்யப்பட்டிருக்கின்றதாம். இது சம்பந்தமாக அவளுடன் கதைத்த போது உன்னைத் தான் தனக்குத் தெரியும் என்றும் இவர் தான் எனக்கு அப்பா என்றும் அடம்பிடிக்கின்றாள். நான் இப்போது நல்ல சந்தோசமாய் இருக்கிறேன் என்றும் தயவுசெய்து என்னுடைய சந்தோசத்தைப் பறித்து என்னை அனாதையாக்கி விட வேண்டாம் என்றும் மேல் மாடியில் ஏறி நின்று கீழே குதித்து சாவேன் என்று அந்தக் குழந்தை அழுததை என்னால் தாங்க முடியவில்லை ஒரு பெண்ணாய் இருந்து ஏற்றுக் கொள்ள முடியாமல் இருக்கின்றது என்ற போதே அவளது வார்த்தைகள் வெளிவரத் குரல் தளதளத்தது.

எல்லோரும் மிகுந்த அமைதியாக இருந்தோம்.

பின்னர் அந்தக்குழந்தையுடன் கதைத்தவைகளும் அதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகவைகளும் எனக்கு நடந்த உளவியல் செயற்பாடுகளும் இதிலே

எழுதமுடியாதவை. தாரணியைப் போல் இன்று எங்கள் நாட்டில் எத்தனையோ குழந்தைகள் பெற்றோரை இழந்து அனாதைகளா. ஆதரவற்றவர்களாக..

பின்னர் அந்தக்குழந்தைகளுக்கு செய்ய வேண்டிய

கடமைகள் அனைத்தும் சட்டரீதியாக செய்யப்பட்டு அவர்களுக்கு நல்ல வாழ்க்கையும் அமைத்துக் கொடுக்கப்பட்டது என்பது என் வாழ்வில் மறக்கமுடியாத நாட்கள்.

பிறகு கொஞ்சக்காலத்தின் பின்னர் அந்த வேலையைவிட்டிட்டு வேறு வேலை செய்யத்தொடங்கி அந்த வேலை இந்த வேலை என்று பலது மாறி இப்ப கொஞ்சக்காலம் புதிய ஒரு வேலையில் இணைந்து கொண்டேன். முன்பு போல் பெரிய பிள்ளைகள் அல்ல. மிகவும் சின்னக்குழந்தைகளை பராமரிக்கும் இடம் அழகான குழந்தைகள் போல் அழகான வேலையும். மனதுக்குப்பிடித்தமான சந்தோசமான தொழில்.

இதில் ஒரு விசேடம் என்னவென்றால் அந்த இடத்திலே நான் ஒருவன் தான் கறுப்பு நிறமுடையவன். எல்லாக்குழந்தைகளும் வந்து என் கையைத் தொட்டுப் பார்ப்பதும் தடவிப்பார்ப்பதிலும் மிகுந்த சந்தோசம் அடைவார்கள். இந்;தப் பழக்கம் கூடக்கூட பல பேர் மிகுந்த நெருக்கமானார்கள். அமேல்லியா என்ற மூன்று வயதுப் பெண் குழந்தை ஒன்று என்னுடன் மிகவும் நெருக்கமாய் பழகினாள். பராமரிப்பு நிலையத்தில் காலையில் தாய் வந்து அவளை விடும் போது ஓடி வந்து என்னையே முதலில் கட்டிக் கொள்வாள். பின்னர் தாய்வந்து கூட்டவரும் போது நான் போகமாட்டேன் என்றும் அடம்பிடித்து என்னிடம் ஒட்டிக்கொள்வாள். தன்னைத் தோளில் தூக்கி வை என்பதும் இருக்கும் போது காலில் வைத்து ஆட்டு என்பதும் அவள் விரும்பும் விளையாட்டுக்களில் முக்கியமானவை.

இந்த உறவு பற்றி அங்கு எல்லோரும் பேசிக்கொண்டார்கள். இவள் இப்படியாக இருப்பதும் நடந்த கொள்வதிலும் உனக்கேதும் பிரச்சினையில்லையோ என்று எனது இல்லப் பொறுப்பாளர் ஒரு நாள் கேட்டார். குழந்தைகள் என்றால் இப்படித்தானே..எனக்கு இது விருப்பம் அதுவும் அமேலியாவைப் போல் துடிப்பான குழந்தைகள் என்றால் மிகவும் விருப்பம் என்றேன் சிரித்தபடி. உனக்குத் தெரியுமா வழமையை விட அமேல்லியா மிகுந்த சந்தோசமாய் இருக்கிறாள் என்று அவளின் தாய் இப்போது சொல்லுகிறாள்.

எங்களாலும் அதைக் கண்டுகொள்ளக் கூடியதாயுள்ளது என்றும்.. உன்னுடைய இந்த அன்பும் அரவணைப்பும் கட்டாயமாக அவளுக்குத் தேவையென்றும் ஏன் தெரியுமோ என்றும் கேட்டாள். நான் மௌனமாக தலையை ஆட்டியபடி அவளது விடைக்காக காத்துக் கொண்டிருந்தேன்.

அமேலியாவின் தகப்பன் எங்கடை நாட்டின் சார்பாக ஆப்கானிஸ்த்தானுக்குப் போருக்கப் போன இராணுவவீரன். தகப்பனின் அன்பும் அரவணைப்பும் தெரியாதவளாய் தான் இவள் வளர்ந்து கொண்டிருக்கிறாள். ஒவ்வாரு நாளும் இரவு அவனுடன் ரெலிபோனில் கதைப்பது மட்டும் தான். இம்முறை வரும் கிறிஸ்மஸ் காலத்துக்கு இங்கே வருவான் என்று அவளது தாய் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள். எமது நாட்டு இராணுவ வீரர்களும் மிக விரை வில் நிரந்தரமாய் திரும்பிவர வேண்டும். ஏன் தான் அமெரிக்காவுக்கு எங்கடை நாடு வால் பிடிச்சுக்கொண்டு நிக்குதோ தெரியவில்லை என்றும் சொல்லிப் போட்டுச் சென்றுவிட்டாள்.

பிள்ளைகள் அங்கும் இங்குமாக ஓடிப்பிடிச்சு விளையாடிக் கொண்டிருந்தார்கள். காலம் கொஞ்சம் கொஞ்சமாய் கரைந்து கொண்டு போய் மாதங்கள் பல கடந்தன. வழமை போல் ஒரு நாள் வேலைக்குப் போய் இறங்கிய போது எமது நிலையப் பொறுப்பாளர் ஓடிவந்து என்னைக் கட்டிப்பிடித்து ஓவென்று கத்தியழுதினாள். எனக்கு ஒன்றும் விளங்கவும் இல்லை. புரியவும் இல்லை. பக்கத்தில் நின்ற மற்ற வேலையாட்களும் என் தோழிலே தட்டியபடி என்னை நெருங்கிக் கொண்டார்கள்.

ஒன்றுமே புரியாமல் முழித்துக் கொண்டேன்.

தலையை நிமிர்த்தியவளாய் அமேலியாவின் தந்தையும் அவனுடனும் சென்ற இருவரும் அங்கே போரிலே இறந்து போனார்களாம் என்ற செய்தி இப்பொழுது காலையில் தான் எமக்குக் கிடைத்தது என்றும் சொல்லிச் சொல்லி விக்கி விக்கி அழுதாள்.

உண்மையிலே என் மூச்சு ஒரு கணம் நின்று போனது போல் உணர்ந்து கொண்டேன். என் தொண்டையினுள் பாறாங்கல் ஒன்று இறங்கியது போன்ற பிரமை. ஓவென்று கத்திக்குறளியள வேண்டும் போல் இருந்தது. என் கண்முன்னே அமேலியா ஒரு கணம் வந்து போனாள். அவளைத் தூக்கிவிளையாடும் போது அவளில் இருந்து வரும் அந்த நறுமணம் கமழ்ந்து வந்தது. அது உண்மையோ பிரமையோ தெரியவில்லை. என் கண்கள் அமேல்லியா எங்கேயாவது நிக்கிறாளா என்று தேடியது. எங்கும் வெறுமையாகவே தென்பட்டது. என்னால் நிதானமாய் நிக்கமுடியாமல் இருந்தது. ஊரிலே என்ரை நண்பன் ஒருவன் ஆமியால் சுடப்பட்டபோதும், இன்னொரு நண்பன் தன்ரை இயக்கத்தாலேயே சுடப்பட்ட போதும், மற்ற இன்னுமொரு தோழன் மாற்று இயக்கத்தாலே சுடப்பட்ட போதும் ஒரு இயக்கமும் வேண்டாம் ஒரு சண்டையும் வேண்டாம். இந்தப் பொல்லாப் போன போரும் வேண்டாம் விடுதலையும் வேண்டாம் என்று தானே இங்கே வந்து என் வாழ்வைத் தொடங்கினேன். ஆனால் நான் எங்கு போனாலும் இந்தப் போரின் கொடுமைகளும் அனர்த்தங்களும் என்னைத் துரத்திக் கொண்டே இருக்கின்றது.

தாரணியைப் போல் அமேலியாவைப் போல் இன்று உலகம் முழுதும் எத்தனையோ ஆயிரக்கணக்கான அப்பாவிக் குழந்தைகள் பச்சைப் பாலகர்கள். பெற்றோரை இழந்து பாழாப் போரின் கொடுமையால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

குழந்தைகள் மட்டுமல்ல நானும் தான்.

- நிலாதரன்.

# சில உண்மைகளைச் சார்ந்து கழுத்தை அறுக்கும், சனல் 4 காட்சியும், ஐ.நா.தீர்மானமும்




ஐ.நா தீர்மானம், சனல்4 காட்சிகள், இந்திய ஆதரவு போன்றவை மக்கள் சார்ந்த சில கூறுகளைச் சார்ந்திருப்பதால் அவை மக்கள் சார்ந்ததாகிவிடுமா? இவை இலங்கை அரசுக்கு முரண்பாடாக இருப்பதால், இது முழுமையான உண்மையாகிவிடுமா?

மக்களைப் பார்வையாளராக்கிய கடந்தகால அரசியல், அன்னிய சக்திகளால் மக்களுக்கு விடிவு கிடைக்கும் என்று வழிகாட்டிய எமது கடந்தகாலப் போக்கு, சமூகத்தை மந்தையாக்கி இருக்கின்றது. இந்தப் பின்னணியில் ஐ.நா தீர்மானம், சனல்4 காட்சி, இந்திய ஆதரவு மீது குருட்டுத்தனமாக அவற்றை நம்பிப் பின்பற்றுகின்ற, அதை அரசியல் வழிகாட்டுகின்ற பின்புலத்தில் மக்கள் ஏமாற்றப்படுகின்றனர். உண்மைகள் புதைக்கப்படுகின்றது. நீதி மறுக்கப்படுகின்றது. தங்கள் குறுகிய நோக்கத்துக்கு ஏற்ப இவைகள் உண்மையைப் புதைப்பதில் இருந்து தான் தொடங்குகின்றது. அது என்ன என்பதையும், எதற்காக இவை என்பதையும், தெரிந்து கொள்வதன் மூலம், இந்தச் சதியை, சூழ்ச்சியை நாம் இனம் காணமுடியும்.

### ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் தீர்மானமும், இந்திய ஆதரவும்

இந்தத் தீர்மானம் போர்க்குற்றங்கள் மீது விசாரணையைக் கோரவில்லை. இனப்படுகொலையைக் கண்டிக்கவில்லை. ஐ.நா கூட தலையிட முடியாத, எந்த அதிகாரமுமற்ற பிரதிநிதிகள் தங்கள் சர்வதேச மேலாதிக்க நோக்குடன், இலங்கை அரசை மிரட்டி அடிபணிய வைக்கும் தீர்மானம் தான் இது. இந்த எல்லைக்குள் இலங்கையில் நடந்த சில உண்மைகளைச் சார்ந்து நின்று, நடந்தவைகளை மூடிமறைத்து புதைக்கின்றது.

உலகை ஏமாற்ற இலங்கை அரசு செய்த மோசடியை, இலங்கைக்கு எதிராக மீளப் பயன்படுத்தியிருக்கின்றது. இலங்கை மீதான மேற்கின் அழுத்தத்தையும் அதன் தலையீட்டைத் தவிர்க்கவும், உலகை ஏமாற்றவும் உருவாக்கியது தான் அரசு அமைத்த கற்றுக் கொண்ட பாடங்கள் என்ன என்பதை விசாரிக்கும் நல்லிணக்க ஆணைக்குழு. இது அரசின் வழிகாட்டலுக்கு ஏற்ப புலிகளை மட்டும் போர்க்குற்றவாளியாக்கி, அரசு மீதான போர்க்குற்றத்தை மறுதலித்தது. அரசு மீதான குற்றத்தை தங்கள் கைக்கூலிக் கும்பலான கருணா - டக்கிளஸ் மீது சுமத்தியது. இராணுவத்தையும் அரசையும் பாதுகாக்கும் வகையில், ஐ.நாவின் அறிக்கையை மறுத்தும் வெளியாகியது. மறுதளத்தில் அரசின் அச்சுறுத்தலையும் மீறி தமக்கு எதிராக சாட்சியமளிக்கக் கூடியவர்களை இனம் காணவும், அவர்களை முடக்கவும் இதனைப் பயன்படுத்தியுள்ளது. உண்மைகளை புதைக்க, சாட்சியங்களை அழிக்க கற்றுக் கொண்ட பாடங்கள் என்ற விசாரணை அரசுக்கு உதவியுள்ளது. இந்த வகையில் இது நடந்த உண்மைகளைப் புதைத்து, அரசுக்கு சார்பாக அரசால் முன்வைக்கப்பட்டது. சுயாதீனமான, நடுநிலையான விசாரணையைக் கொண்டதல்ல இது. இலங்கை அரசு எந்தவிதமான போர்க்குற்றத்திலும் ஈடுபடவில்லை என்று இந்த அறிக்கை கூறுகின்றது. பொது மக்களைப் பலியெடுக்கவில்லை என்கின்றது. அவர்களைப் பாதுகாத்ததாக கூறுகின்றது. அரசு மற்றும் இராணுவம் எதைச் சொல்லி வந்ததோ, அதையே மீள வாந்தி எடுத்திருக்கின்றது.

இப்படி உண்மைகள் இருக்க, இலங்கை அரசின் இந்த அறிக்கையை நடைமுறைப்படுத்தக் கோருகின்றது ஐ.நா. மனித உரிமை பேரவைத் தீர்மானம். இதை தம் காவடியாக்கி, தங்கள் தலையில் தூக்கி வைத்து ஆடுகின்றது அறிவிழந்த கூட்டம். அரசின் தீர்மானம் தமக்கான தீர்வாக காண்கின்ற, காட்டுகின்ற மோசடியைத் தான் இங்கு நாம் காணமுடியும். இது எந்த நிலையிலும் போர்க்குற்ற விசாரணையையோ, மனித உரிமை மீறலையோ, இனவழிப்பை குறித்த விசாரணைகளையோ கோரவில்லை. இலங்கை அரசின் இந்த மோசடியை, அமுல் செய்யுமாறு ஐ.நா கோருகின்றது. குற்றவாளிகள் தங்களை தாங்கள் சுயவிசாரணை செய்து விசாரிக்குமாறும், பூசி மெழுகுமாறும் கோருகின்றது. குறிப்பாக அரசுக்கு வெளியில் சுயாதீனமான விசாரணையை, ஐ.நா தன் தீர்மானம் மூலம் மறுதலிக்கின்றது.

இதில் உள்ள அடுத்த மோசடி, இந்தியா முன்வைத்த திருத்தமும், ஐ.நா. தீர்மானத்துக்கான ஆதரவு-மாகும். இது இலங்கையைப் பாதுகாக்கும் நோக்கிலானது. இந்தியா இதை ஆதரிக்க முன் தீர்மான வரையறையை ஐ.நா. மனித உரிமைத் தூதர் அளிக்கும் உதவியை இலங்கை ஏற்க வேண்டும் என்று இருந்தது. இதை எதிர்த்த இந்தியா ஐ.நா. மனித உரிமைத் தூதர் இலங்கை அரசுடன் கலந்து ஆலோசனை நடத்தி அதன் ஒப்புதலுடன் செய்யப்பட வேண்டும் என்று திருத்தியதன் மூலம், இலங்கை அரசுக்கு ஆதரவாக இதைத் திருத்தி அதனையே ஆதரித்திருக்கின்றது. இதுதான், இதன் பின்னுள்ள இந்தியாவின் மோசடியான ஆதரவாகும். இதன் மூலம் முக்கிய போர்க்குற்றவாளியான இந்தியா, இலங்கையை மட்டுமல்ல தன்னையும் சேர்த்து பாதுகாத்துக் கொண்டது. இதுமட்டுமின்றி புலத்துப் புலி உட்பட தமிழகத்து தமிழினவாதிகளையும் தன் பின்னால் காவடி எடுக்க வைத்திருக்கின்றது. இலங்கை அரசின் அறிக்கையின் பின், அனைவரையும் அணிதிரட்டி இருக்கின்றது.

மறுதளத்தில் இதன் மீதான மேற்கின் அக்கறையும், இந்தியாவின் நடத்தையும், மக்கள் சார்ந்ததல்ல. மாறாக தென்னாசியப் பிராந்தியத்தில் சீனாவின் செல்வாக்கை கட்டுப்படுத்தும் அரசியல் நோக்கிலானது. இலங்கை அரசு தனது இராணுவ பாசிச குடும்ப சர்வாதிகாரத்தை தக்கவைக்கும் நோக்கில், சர்வதேச முரண்பாட்டுக்குள் தன்னை உள் நுழைத்த பின்னணியில் தான், இந்த ஐ.நா. மனித உரிமை பேரவைத் தீர்மானம் உள் நோக்குடன் முன் மொழியப்பட்டது. இதை எதிர்த்த நாடுகளில் சீனா உள்ளிட கியூபா வரை அடங்கும். அதுவும் கூட இன்றைய உலக ஒழுங்கிலானது. அமெரிக்காவுடன் முரண்பட்ட நாடுகள், இந்தத் தீர்மானத்தை எதிர்த்தன. இந்த நிலையில் அமெரிக்காவுடன் முரண்பட்ட நிலையை, ஏகாதிபத்திய எதிர்ப்பாக காட்டுகின்ற வங்குரோத்து அரசியல் தளத்தில் இருந்து புலி எதிர்ப்பு அரசியல் இதை ஆதரிக்கின்றது. மறுதளத்தில் சீனா முதல் கியூபா வரை கம்யூனிச நாடாக கூறுகின்ற பின்புத்தியில் இருந்தும், தமிழினவாத வலதுசாரிகள் இதை வைத்து குறுகிய அரசியல் நடந்த முனைகின்றனர்.

உலகில் அமெரிக்காவுக்கு எதிரான நிலை என்பது, எப்போதும் மக்கள் சார்பான அரசியல் நிலையல்ல. இன்று இலங்கை அரசும் கூட அமெரிக்காவுக்கு எதிராகத்தான் இருக்கின்றது. அதனால் அது மக்கள் அரசோ, ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசோ அல்ல. இது போல் கியூபா, சீனா கம்யூனிசத்தின் பெயரால் ஆட்சியில் இருப்பதால், அவை கம்யூனிச ஆட்சியுமல்ல. மக்கள் விரோத அரசுகள் தான். உண்மையான ஒரு கம்யூனிச அரசு, மக்கள் சார்ந்த அரசு அமெரிக்காவின் தீர்மானத்துக்கு எதிராக, உண்மையான சுயாதீனமான சர்வதேச போர்க்குற்ற விசாரணையைக் கோரும் வண்ணம் மற்றொரு தீர்மானத்தை முன்மொழிந்து, அதை வாக்கெடுப்புக்கு முன்வைத்திருக்கும். மாறாக இந்த மக்கள் விரோத அரசுகள், அமெரிக்கத் தீர்மானத்தை வழிமொழிந்து அதை எதிர்த்ததன் மூலம் தம் பங்குக்கு போர்க்குற்றத்துக்கு உதவியிருக்கின்றது. இப்படி உண்மைகள் புதைக்கப்பட்டு இருக்கின்றது. நீதி மறுதலிக்கப்பட்டு இருக்கின்றது.

## சனல் 4 உண்மையின் ஒரு பக்கத்தைக் காட்டி, முழுமையான போர்க்குற்றத்தை மூடிமறைக்கின்றது

இந்த யுத்தத்தின் பின்னான குற்றவாளிகள் யார்? இதை மூடிமறைப்பதில் இருந்துதான், சனல் 4 காட்சி மௌனமாகி வெளியாகி இருக்கின்றது. முக்கிய குற்றவாளியான இந்தியா உள்ளிட்ட மேற்கின் குற்றங்களை மறுதலிக்கும் வண்ணம், அதை மூடிமறைத்து நடந்தது என்ன என்பதை பற்றிய பொய்யான பிரச்சாரத்தை சனல் 4 காட்சிப்படுத்தி இருக்கின்றது. நடந்த பின்னணியில் ஆயுதங்கள் முதல் கொண்டு தார்மீக உதவி வழங்கிய இந்தியா மற்றும் மேற்கின் பங்களிப்பு இன்றி, வெளியான காட்சிக்குரிய சம்பவங்களும் நடந்து இருக்க முடியாது. இப்படி உண்மைகள் இருக்க, அதை மூடிமறைத்து மேற்கின் நிகழ்ச்சிநிரலுக்கு ஏற்ப காட்சிகளையும், செய்திகளையும் சனல் 4 தணிக்கை செய்து மட்டுப்படுத்தி இருக்கின்றது. இதுமட்டுமல்ல மேற்குடன், இந்தியாவுடனும் கூடி அரசியல் செய்யும் புலிகளின் வலதுசாரிய அரசியலுக்கு இது உட்பட்டது.

போர்க்குற்றங்களில் இலங்கை அரசு மட்டும் ஈடுபடவில்லை. புலிகள் மட்டும் ஈடுபடவில்லை. இந்தியா முதல் மேற்கு மட்டுமின்றி, சீனா முதல் ருசியா வரை இதற்கு துணையாகவும் பக்கபலமாகவும் இருந்தது. இதுதான் இங்கு உண்மை. இதை சனல் 4 மறுத்து, உலகமயமாக்குகின்றது. இலங்கை அரசின் போர்க்குற்றத்துக்கு துணையாக இருந்த இலங்கை அல்லாத நாடுகளின் போர்க்குற்றத்தை மூடிமறைத்து, மேற்கின் தேவைக்கு ஏற்ப காட்சிப்படுத்துவதுதான் சனல் 4 காட்சிகளின் உள்ளடக்கம். இங்கு வெளியான காட்சிகள் கூட மேற்கின் நிகழ்ச்சிநிரலுக்கு ஏற்ப வெட்டப்பட்டு, தணிக்கைக்கு உள்ளாகின்றது. முதலில் வெளியிட்ட சுட்டுக்கொல்லப்படும் சனல் 4 காட்சியின் தொடர்ச்சியில், இசைப்பிரியா உள்ளிட்ட காட்சி வெட்டப்பட்டது. இதன் பின் மேற்கின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப வெளியான

இரண்டாவது காட்சியில், முதலில் வெட்டப்பட்ட இசைப்பிரியாவின் காட்சி வெளியாகின்றது. அதேநேரம் பிரபாகரனின் கடைசி மகன் பற்றி குறிப்பும் வெளிவருகின்றது. ஆனால் காட்சி வெளியிடப்படவில்லை. இதன் பின் மீண்டும் மேற்கின் நிகழ்ச்சிக்கு ஏற்ப வெளியான மூன்றாவது காட்சியில், பிரபாகரனின் கடைசி மகனின் காட்சி இடம்பெறுகின்றது. இங்கு காட்சிகள் முழுமையாகவும், தொடர்ச்சியாகவும் வெளிவரவில்லை. ஆக காட்சிகள் வெட்டப்பட்டு, மேற்கின் அரசியல் நிகழ்ச்சிநிரலுக்கு ஏற்ப தொடர்ந்து வெளிவருகின்றது. உண்மைகள் சுயாதீனமாக காட்சிப்படுத்தப்படவில்லை. ஒரு நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப காட்சிகள் வெளிவருகின்றது. இதே சனல் 4 யுத்தம் நடந்தபோது கே.பியின் பேட்டியையும், யுத்தத்தின் பின்னான பேட்டி உட்பட வீடியோ பேட்டி வரை வெளியிட்டது. இந்த வகையில் புலியுடன் கொண்டிருந்த தொடர்பும், மேற்கின் அரசியலுடன் பின்னிப் பிணைந்த வண்ணம் பேட்டிகளும், காட்சிகளும் வெளியாகின. இந்த தொலைக்காட்சி இந்தியா உள்ளிட்ட அமெரிக்கா வரை, இந்த போர் குற்றத்தில் எந்த வகையில் எப்படி சம்பந்தப்பட்டது என்பதை கொண்டுவரவில்லை. அதை மூடிமறைக்கும் வண்ணம், அவர்களை நண்பர்களாக காட்டும் வண்ணம், உண்மைக் காட்சிகளை கொண்டு அரசை மட்டும் குற்றவாளியாக்கி காட்ட முனைகின்றது. ஊடக தர்மத்தை புதைத்து, உண்மையையும் நீதியையும் மோசடி செய்திருக்கின்றது.

### உண்மைகளும் பொய்களும்

நடந்த சில உண்மைகளைக் கொண்டு தங்கள் சர்வதேச அரசியலை இவர்கள் நடத்த முனைகின்றனர். மக்களின் துன்பங்கள், துயரங்கள் தங்கள் மேலாதிக்க நலனுக்கு பயன்படுத்தும் மோசடிகள் மூலம், மக்களை கழுவேற்றுகின்றனர். தென்னாசிய பிராந்திய மேலாதிக்கத்தை நிறுவமுனையும் அமெரிக்கா மற்றும் இந்தியா நலன்கள், மக்கள் சார்ந்த விடையங்களை பயன்படுத்தி கொள்ளும் சுயநல வக்கிரத்தை இதன் பின்னால் நாம் காணமுடியும். இதை தீர்வாகவும், வழியாகயும் காட்டி அரசியல் நடத்தும் அரசியல் போக்கிலித்தனத்தை இனம் கண்டு நாம் சுயமாக அணிதிரளாத வரை முள்ளிவாய்க்காலில் நடந்தது போன்ற புதைகுழிதான் மீண்டும் பரிசாக கிடைக்கும். இதைத்தான் எமது கடந்தகால வரலாறு, எமக்கு கற்றுத் தந்திருக்கின்றது.

- பி.இரயாகரன்.

# எதுவரை எதுவரை இருந்தோம்...

- கங்கா.

நீதியும் சமாதானமும்
அபிவிருத்தியினூடாக அடையப்பெறுதலும்
அதிகாரங்கள் பகிரப்படுதலும்
சூழப்பட்ட துப்பாக்கிதாங்கியவர்களின்
குழல்களிலிருந்து வெடித்துவருமென சொல்லப்படுகிறது
இனி எந்தக் கூரிய ஆயுதமும்
ஏந்துவதற்கான தேவை இல்லாது ஒழிக்கப்பட்டதாயும்
அது பேனாவாகவோ
பெரும்பான்மையினத்து ஆதரவுக்குரலாகவோ
இருப்பினும்
காணாமல் போதல் தொடருமென எச்சரிக்கிறார்கள்

தொப்புள்கொடி உறவாய்ப்போன
இந்திய நடுவண்அரசின்
வர்த்தகமேம்பாட்டிற்கான ஒவ்வொரு வருகைக்கும்
அரசியல் தீர்வுக்கான
நெருக்குதலாகவே அர்த்தம் புகட்டப்படுகிறது
கூடங்குளத்தில்
அப்துல்கலாம் கொடும்பாவி எரிக்கப்பட்டாலும்
முள்ளிவாய்க்கால் பேரழிவின்போது
விஞ்ஞான ஆராச்சியில் கண்ணாய் இருந்திருப்பாரென
மாலைசாத்தி அனுப்பியிருக்கிறோம்

மரணப்பொறிக்குள் இறுக்கியவர்கள்
எமக்காய் பரிந்துபேசுவதாய்
அமெரிக்க விசுவாசம் அடுத்துக்கிளம்புகிறது
தப்பியோர் சிறையும் தாளாக் கொடுவதையும்
இளம் பிஞ்சுகள்-ஏங்கி
மனம் நொருங்கி மாளாவலியுமாய்...
இன்னம் நாமேன்-அந்நியக்கனவோடு
அழுத்தம் கொடுப்பதாய் ஏங்குகிறோம்

வர்க்க ஐக்கியம் மேலெழ இனங்கள் இணைதலும்
மக்கள் சக்தியின் தத்துவம் எழுதலும்
மாற்று இதுவேயென களமிறங்கியதால்
லலித்தும் குகனும்
எம்மிடமிருந்து கடத்தப்பட்டிருக்கிறார்கள்
அரசகோரதாண்டவம் காணாமல்போதல்
இலங்கை மக்கள் ஒருமித்தெழுதலே வழியென
தோழமையை நிலை நாட்டியிருக்கிறார்கள்



# நடையண்ணை மறைஞ்சா...!

சீறீ.

நடைண்ணை வழமைக்கு மாறாய் இண்டைக்கு கொஞ்சம் ஆசுவாசமாகத்தான் வந்திருந்தார். ஆனால் சம்பாசணை வேற திசையில ஆரம்பிச்சது. இண்டைக்கு அவர், தான் அறிவில இவ்வளவு கம்மியாகவா இருக்கிறன் எண்ட ஆத்திரத்தில இருந்தார். அவரோட இண்டைக்கு வெளுத்து வாங்க வேணும் எண்ட தோரணையில கதைச்சுக் கொண்டிருந்தது வேறு யாருமில்ல பரமசிவம் தான்.

**அப்படா தம்பி நீ சொல்லுறாய் அறிவு அநுபவத்திலிருந்து தான் வருகுதெண்டு.**

சூடுகண்ட பூனை அடுப்பங்கரை நாடாது எண்டொரு பழமொழியிருக்கல்லோ. பூனை என்ற மிருகம் அடுப்பங்கரையை சூடுகண்ட பின்னால நாடாது தான். அது சிக்கலான எந்தக் காரியங்களையும் தொடர்புபடுத்தி சிந்திக்காத மிருகம். ஆனால் மனிசன் நெருப்புச் சுடும் எண்ட அனுபவ அறிவை தன்னுடைய புலன் உணர்வால பெற்றுக் கொண்ட பின் சிந்திக்கிறான். சிந்திக்கிறதெண்டதே இந்த மனிச மிருகத்தின்ர சிறப்பியல்பு. அவன் விரலில் சுட்ட நெருப்பின் குணத்தை அதோட விட மாட்டான். அது நெருப்புப்பற்றி அவனுக்கு கிடைத்த அடிப்படைப் புலனறிவு. பட்டறிவெண்டும் சொல்லுவினம். அந்த அறிவை ஒழுங்குபடுத்தி, முறைப்படுத்தி இன்னும் பலதோட ஒருசேர எண்ணித் தொகுக்கிறதன் மூலமாக அவன் கருத்துக்களை உருவாக்குகிறான். இந்தப் புலனறிவினால, அனுபவ அறிவினால ஏற்பட்டவற்றை கருத்துக்களாக உருவாக்குவதும், நெருப்புச் சுடும் என்பதும், இந்தச் சுடும் இயல்பை ஏதாவது செய்யலாமா என வேறு வழிகளில் மதிப்பிடுவதும், ஊகித்துணர்வதுமான கட்டத்தில அவனிட்ட தொகுக்கப்படுற அறிவுதான் பகுத்தறிவாகும்.

எத்தனையோ காலத்த கடந்து வந்த புலனறிவின்ர அடிப்படையில பல கட்டங்கட்டமா பகுத்தறிவு மேலும் வளர்ச்சியடைந்தது. பகுத்தறிவில இருந்து புலனறிவுக்கு போறது சில வேளையல்ல ஆபத்து. சும்மா ஒரு கதைக்கு சொன்னா பொலிடோல் குடிச்சால் அது நஞ்சு, உயிர் போய்விடும் எண்டது பகுத்தறிவு. அதை உண்மையா எண்டறிய புலனறிவுக்கு போகக் கூடாது. ஊருக்கு நிரூபிச்ச பின்னால உலகத்தை விட்டே போகவேண்டியது தான். பகுத்தறிவு அதை விருத்தியாக்கி விளக்கங்களோட சொல்லித்தந்திருக்கு. எனவே நிரூபணம் எண்டது பகுத்தறிவானதெண்டதன் பின்னால் அவசியப்படாது. பகுத்தறிவு சமூகத்தில வியாபகமாகி விடும். இப்படித்தானண்ணை அறிவு எண்டது பொருட்களின் மேல மனிதனுக்கு கிடைச்ச அநுபவத்தினாலையும் அந்த பொருட்களின் மேல, தான் முன்னமே பெற்றுக்கொண்ட பகுத்தறிவை பாய்ச்சுவதன் மூலமாகவும் அதனடிப்படையில் பொருட்களின் இயந்திரமயமான மாற்றங்களை, பௌதீக, இரசாயனக் குணங்களை, தன் நோக்கத்திற்கு ஏற்றாற்போன்று வேறு சில பொருட்களை தயார்படுத்துவதற்கு தன் உழைப்பையும் அதன் மீது பாய்ச்சுகின்றபோதும் மேலும் மேலும் வளர்ந்து கொண்டு வந்திருக்கு.

அண்ணை! சக்கரம் உருண்டோடும் எண்டது மனிதனுக்கு எப்பவோ கிடைச்ச அறிவு. அந்த அறிவு துவிச்சக்கரவண்டியை உருவாக்க அவனுக்கு அடிப்படையாயிருந்திருக்கு. எங்க எந்த திசையில வண்டியை ஓட்டிறது எண்டதுக்கு இன்னொரு சக்கரம் தேவைப்பட்டபோது அது துவிச்சக்கர வண்டியா வந்துது. தொடக்கத்தில கால்களால நிலத்தில உந்திச் செலுத்தப்பட்ட துவிச்சக்கரவண்டியாத் தான் அது இருந்தது. மேலும் அறிவை அதன் மீது பாய்ச்சியதனால தான் மிதிக்கிற துவிச்சக்கரவண்டியா மாறிச்சு

இப்பிடி மனித வரலாற்றில பல கட்டங்கள கண்டு சமாந்தரமாக வளர்ந்த வேறு வகை அறிவு இதோட சேந்தபோது நீராவி இயந்திரம், எரிபொருள் இயந்திரம் தந்த அறிவு துவிச்சக்கர வண்டியை மோட்டார் சையிக்கிள் எண்டளவுக்கு மாத்தியது. இப்படியா வளர்ந்து வந்த பல் துறை அறிவ ஒண்டையோயொண்டு தொடர்புபடுத்தி தர்க்கரீதியாக சிந்திச்சால் வேறெயொரு புது அறிவு மனிசனுக்கு கிடைக்கிறது. இந்தவிதமாக் கிடைச்ச அறிவை திரும்பவும் ஏதேனையும் உருவாக்கிற நடைமுறையில பாவிக்கிறபோது அது இன்னும் சரிப்படுத்தப்படுகிறது. சக்கரமும் துடுப்பும் போக்குவரத்துத்துறையை இண்டைக்குள்ள நவீன நிலையில கொண்டு வந்து விட்ட ஆரம்பக் கண்டுபிடிப்புகள். அந்த அறிவின்ர தொடர்ச்சி இண்டைக்கும் இருக்கின்ற போக்குவரத்துத் துறையின்ர அடிக்கல். மாசேதுங்கின்ர

தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகள் எண்ட முதல்பாகத்தில் 302 ம் பக்கம் என்ன சொல்லுதெண்டால் கேளுங்கோவன் அண்ணை.

**வெளியுலகப் பொருட்களோடும் நிகழ்வுகளோடும் தொடர்பு கொள்வதே அறிதலின் முதற்கட்டமாகும். இது புலனறிவுக்கட்டமாகும். அறிவு அனுவபத்திலிருந்து தொடங்குகின்றது. இது தான் அறிதல் கொள்கையின் பொருள் முதல்வாதம் என்பதாகும்.**

தர்க்கரீதியான பகுத்தறிவே, அறிதலின் இரண்டாம் நிலையாகும்.

புலன்களால் அறிந்தவற்றை ஒழுங்குபடுத்தி, மீண்டும் முறைப்படுத்தி அவற்றை ஒருசேர எண்ணிப்பார்க்கும் கட்டம், இரண்டாவதாகும். இது கருத்துக்களை உருவாக்குவதும், மதிப்பிடுவதும், ஊகித்துணர்வதுமான கட்டமாகும். பகுத்தறிவு, புலனறிவைச் சார்ந்துள்ளது. புலனறிவும் பகுத்தறிவாக வளர்த்தெடுக்கப்பட வேண்டியுள்ளது. இதுதான் அறிதல் கொள்கையின் இயக்கவியல் பொருள் முதல்வாதமாகும்.

கோட்பாட்டிலிருந்து நடைமுறைக்கு கொண்டுவருவதன் மூலம் பெறும் அறிவு மூன்றாம் நிலையாகும்.

அறிவு நடைமுறையிலிருந்து தொடங்குகிறது, கோட்பாடு அறிவு நடைமுறையிலிருந்து பெறப்பட்டு, மீண்டும் நடைமுறைக்குத் திரும்ப வேண்டும். இதுதான் கோட்பாட்டைச் சோதித்து பார்த்து வளர்த்தெடுக்கும் முறையாகும். அறிதல் முறையின் தொடர்ச்சியாகும்.

**ஏன்டா தம்பி மனப்பாடம் பண்ணியும் வச்சிருக்கிறியோடா கோதாரியில போவானே..**

இதுக்குள்ள நாங்கள் இன்னொன்றையும் உணரவேணும் அண்ணை.

இப்படிப்பட்ட அறிவுசார் துறையையும், உற்பத்திக் கருவிகளையும், மூலப்பொருட்களையும் யார் கைப்பற்றிக் கட்டுப்படுத்துகின்றனரோ அவர்களே சமுதாயத்தின் மீது ஆதிக்கம் செலுத்துகிறார்கள்.இப்போது உடல் உழைப்பும் இந்த அறிவைப் பகுத்து தொகுத்து காரியமாற்றும் சிந்தனையுழைப்பும் யாருக்கு சேவை செய்யும்படி கட்டுப்படுத்தப்படுகின்றனவோ, அவைகளே சமூகப் போக்கையும் கட்டுப்படுத்துகின்றன. இண்டைக்கு ஒரு மனிசனுக்கு எல்லாத்தையும் அனுபவப்பட்டு தான் அறியவேணுமெண்டில்ல. அத்தினை அறிவையும் தொகுத்து இயங்கி, இண்டைக்கிருக்கிற நிலைக்கு முன்னேறியிருக்கிற சமூகத்தில அவனுக்கு அறிவென்பது நம்முன்னோரளித்த அருஞ்செல்வந்தானேயொழிய அத்தனையும் அவனது சொந்த அறிவுச்சொத்தல்ல. பல்லாயிரம் அனுபவங்களின் அடிப்படையிலிருந்து பெறப்பட்ட பல நூறு சிந்தனைகள், பகுத்தறிவுகளால் கிடைச்ச அறிவே தான் அவன் முன்னாலே புத்தகங்களாகவும், கல்விக்கூடங்களாகவும், தொழில் துறைகளாகவும் பரவிக்கிடக்கின்றன. இது எந்தக் காலகட்ட மனுசனுக்கும் பொருந்தும்.

சமுதாயம் எண்டது இப்படித்தான் மாற்றமடைந்து இயங்கிக் கொண்டிருக்கண்ணே. சமுதாய விதிகளும் சட்டங்களும் அதிகாரத்திலிருக்கிறவையளால தானே கட்டுப்படுத்தப்படும் எண்டது ஏனென்டா இந்த உற்பத்திகளையும் அதன் பயனாய் கிடைக்கிற நன்மையளையும் தம் வசப்படுத்துதிறதுக்கு அப்பதான் அவையால முடியும். நிலவும் சமுதாயத்திற்கான சமூகப் பொருளாதார அடிப்படை என்னவென்பதை அறிந்தால் அந்த சமூகம் என்ன வகையானது என்பதை அறியமுடியும். மனிதர்கள் எச்சமுதாயத்தில் வாழ்ந்தாலும் அவர்களுக்கிடையில் உருவாகும் உறவானது நேரிடையாகப் புலப்படாதபடியும் இயல்பாகியும் போன விதிகளுக்கும் வரையறைகளுக்கும் கட்டுப்பட்டே இருக்கின்றது.

**தம்பி தெரியாமத்தான் கேட்கிறன். உனக்கும் எனக்கும் உன்ர — என்ன உறவடா..?**

அவர் முதலாளி நான் தொழிலாளி நீங்கள் நாங்கள் விக்கிறத வாங்கிற வாடிக்கையாளன். அந்தாள் முதல் போடுது நான் என்ர கையைக் கால ஆட்டி சமைச்சுப் போட்டு வாற உங்களுக்கு பரிமாறு-கிறன். நீங்கள் வாங்கி அநுபவிக்கிறியள். முதலாளி- உழைப்பாளி-நுகர்வாளி எண்ட உறவு இந்த மனிசருக்கிடையில இருக்குதண்ணே. ஆனா யாரும் கண்டுகொள்ளிறதில்லை. இந்தச் சிக்கலுக்குள்ள மனிசன் மாட்டுப்பட்டிட்டான். எங்களுக்கிடையில என்ன ஓடித்திரியுது தெரியுமோ? முதலாளியிட்ட பணம் இருக்கு என்னிட்ட உழைப்பிருக்கு உங்களிட்ட தேவையிருக்கு. இந்த மூண்டுபேருக்குமிடையில ஓடித்திரிஞ்சு இந்த உறவைப் பிடிச்சு வைச்சிருக்கிறது என்ன அது ? அது தான் நாகரீகமாச் சொன்னால் சம்பாத்தியம். கொஞ்சம் நறுக்காச் சொன்னால் பணம். முதலாளிக்கு என்ர உழைப்புத்தான் பணமாகுதண்ணே. நீங்கள் உழைச்ச பணத்தை கொடுத்து நாங்கள் படைக்கிறத வாங்கிறியள். இந்த முதலாளி இந்தக் கடையில இருக்கிற சாதனங்களுக்கு சொந்தக்காரன். அந்தச் சாதனங்களைப் பாவிச்சு

உணவு படைக்கிறதுக்கு என்ர உழைப்பை நான் பாச்சுகிறன். பரிமாறுகிறதுக்கு ஓடியாடித்திரிகிறன். இலாபம் கல்லாப் பெட்டிக்கு போனால் அதில நான் கைவைக்க முடியாது. முதலாளியிட்ட மாதக் கடைசியில தேறின இலாபத்தில எனக்குக் கிடைக்கிறது என்ன எண்டதை தீர்மானிக்கிறது முதலாளியின்ர சுதந்திரம். ஆனா எனக்கு அதில தலைப்போட உரிமையிருக்கோ சொல்லுங்கோ?.

**அப்ப தம்பி இந்தச் சுதந்திரம், விடுதலை எண்டது பொய்யேடா?**

இல்லையண்ண ஆனால் இந்த விதிகளும் கட்டுப்பாடும், அதிகாரத்தில இருக்கிறவையள் - சமுதாய இயக்கத்தை கட்டுப்படுத்திறவையளிட்ட இருந்தா அவையிட நன்மைக்குத்தான் அது இருக்குமண்ணே. அதை பிடுங்கி மாற்றி பொதுச் சமூகத்துக்கும் பயன்படுமாப் போல் மாற்றினா தான் பயன்கள் சமூதாயத்துக்கு போகும். அது தான் சமூக விடுதலை எண்டு சொல்லிறது. நான் இப்ப அதை செந்தமிழில சொல்லிறன் கேளுங்கோ.

சமூகத்தினது நுகர்வுத்தேவைக்கு உற்பத்தி என்பது அத்தியாவசியம். இந்த உற்பத்தி என்பது சமூகத்தின் அங்கமான மனிதர்களின் உழைப்பினால் உருவாகிறது. இந்த உழைப்பின் விளைவுகளாலான பண்டங்கள் சமூகத்தினருக்கு சென்றடைந்து பயன்பெறாதபோது அது தனது உற்பத்தியின் மதிப்பைப் பெறுவதில்லை. அவ்வுற்பத்திகள் சமூகத்தினரிடையே அவர்களின் நுகர்வுத்தேவைக்காக பகிரப்படுகிறபோது அவை பயன்பாட்டுப் பெறுமதியை உருவாக்குகின்றன. தேவைகளைப் பூர்த்திசெய்யவென உருவாக்கப்படும் உற்பத்திகள் மனிதர்களை சென்றடைந்து அவர்களால் பயன்படுத்தப்படும் போது அது நுகர்வெனப்படும். உற்பத்திப் பொருட்கள் பல. இந்த உற்பத்திப் பண்டங்கள் பரஸ்பர தேவைகளுக்காக பரிமாறப்பட்டாக வேண்டும். இந்தப்பண்டங்கள் பரிமாறப்படுகிறபோது சமூக ஒப்பந்தங்களும் உறவுகளும் உருவாகின்றன. இந்தப் பரிமாற்ற வேளைகளில் ஒருவகை உற்பத்தி அல்லது பண்டம் இன்னொருவகை உற்பத்தியோடு அல்லது பண்டத்தோடு ஒப்பிடப்பட்டாக வேண்டும். அங்கு இருவேறு உழைப்பு இருக்கின்றது. அதே போல் ஒருவகைப் பண்டத்தின் பயனும் தேவையும் அதன் உற்பத்தியின் மீது செலுத்தப்பட்ட உழைப்பும் இன்னொருவகை பண்டத்தின் பயனுடன் தேவையுடனும், அதன் உருவாக்கத்துக்காக செலுத்தப்பட்ட உழைப்பின் அளவிலும் மாறுபட்டிருக்கும்.

இவ்வாறான பண்டங்களின் உற்பத்தியின் மீது செலுத்தப்படும் வெவ்வேறு அளவிலானாதும் பண்பில் மாறுபட்டதாகவும் இருக்கும் உழைப்பு செலுத்தப்பட்டுருவான அப்பண்டங்களின் மதிப்பு, என்ன நியமத்தைக் கொண்டு அளவிடப்படுகிறது, என்ன நியமத்தை வைத்து இந்த நுகர்வுப்பண்டங்கள், சமுதாயத்தில் பகிரப்படுகின்றது என்பதையும் வைத்தே எவ்வாறு சமூகங்கள் பல்வேறு வடிவங்கள் ஊடாக, மாற்றங்கள் ஊடாக விருத்தியடைந்து வந்தது என்பதனை கண்டுகொள்ளமுடியும்.

**தம்பி டேய் நீ எங்கையாவது லெக்சரரா இருந்தமாதிரிக் கிடக்கு அள்ளி விசுக்கிறாய் ஆரடா இதைக் கேட்கப் போயினம்..., கேட்டுட்டு என்ன செய்யப் போயினம்..?**

குழப்பாதையுங்கோ அண்ணை. இப்பிடிச் கதைச்சா என்னையோ கேட்டுக்கொண்டிருக்க உங்களையோ வேலைவெட்டியில்லாதவன்கள் எண்டும் சொல்லுவினம். இப்படிப்பட்ட சில விடயங்கள் பரவ விடக்கூடாது எண்டதில யாரண்ணை கண்ணும் கருத்துமாயிருப்பினம்? அவையளே தான் அறிவு எது எண்டு சொந்தமா தீர்மானம் போட்டு மற்றதுகளை எல்லாத்தையும் மறைச்சுப் போடுவினம் அண்ணை. மூலதனம் எண்ட ஒரு நூலை எழுதி முழுவிசயத்தையும் அலசிப்போட்ட ஒருவரை உங்களுக்குத் தெரியாம இருக்காதண்ணை. அவர் என்ன சொன்னார் தெரியுமோ. நேரமிருந்தாக் கேளுங்கோ.

உழைப்புப் போக்கின் அடிப்படையான அம்சங்களை அவர் மூண்டாக பிரிச்சுபோட்டு விளங்கப்படுத்தினார்.

1. மனிதனின் தனிப்பட்ட செயற்பாடு அதாவது அவன் செய்யும் வினை.
2. அவன் செயல்புரியும் பொருள்
3. உழைப்புக்கருவிகள்

இரண்டாவது அம்சம் உதாரணத்துக்கு.., பயன்படுத்தப்படாத நிலம் (பொருளாதாரரீதியில் சொல்லப் போனால், இது நீரையும் சேர்த்து) மனிதன் வாழ்வுக்குத் தேவையான பொருட்களை வழங்குகின்றது. இது, மனிதனிடமிருந்து அப்பாற்பட்டு சுயேச்சையாகவே இருக்கிறது. இது எல்லாவிடத்தும் மனித உழைப்புக்கு உட்படுத்தப்படும் பொருளாக இருக்கிறது.

மூன்றாவது அம்சமான உழைப்புக் கருவிகள் பற்றி என்ன விளக்கம் எண்டால்.., உழைப்புக்கருவி என்பது ஒரு பொருள் அல்லது பொருட்களின் கலவை ஆகும். இதன் மூலம்தான் உழைப்பவன், உழைப்புக்கு உட்படுத்தப்படும் பொருளோடு தொடர்பு கொள்கிறான். மேலும் உழைப்பவனின் செய்கையைப் பாய்ச்சும் கருவியாகவும் இருக்கிறது. மனிதன் சில பொருட்களின் இயந்திரமயமான மாற்றங்களை, பௌதீக, இரசாயனக் குணங்களை, தன் நோக்கத்திற்கு ஏற்றாற்போன்று வேறு சில பொருட்களை தயார்படுத்துவதற்கு பயன்படுத்துகின்றான். உழைப்புப் போக்கில் மனிதனின் செயல்பாடு, உற்பத்திக் கருவிகளின் உதவியுடன் பொருள்களின் மீது முன்கூட்டியே திட்டமிட்டபடி மாறுதலை உண்டுபண்ணுகிறது. மனிதனின் உழைப்பு, உற்பத்தியான பொருளில் மறைந்து காணப்படுகிறது. மனிதனின் தேவைக்கு ஏற்றாற் போன்று மாறுதலுக்கு உட்பட்ட ஒரு பொருளுக்கு அதாவது, உற்பத்தி பொருளுக்கு பயன் மதிப்பு உண்டு. உழைப்பு, உற்பத்திப் பொருளோடு பின்னிப்பிணைந்து காணப்படுகிறது. உழைப்பானது, பொருள் மயமாகிறது. அதே நேரத்தில் உற்பத்திக்கு உட்படுத்தப்படும் பொருளானது மாறுதலுக்கு உள்ளாகின்றது. உழைப்பவனிடத்தில் இயக்கமாகக் காணப்படும் உழைப்பானது, இப்போது உற்பத்திப் பொருளில் இயக்கமற்ற, வரையறுக்கப்பட்ட தன்மையான மாறிவிடுகிறது(உ-ம்) கொல்லன், உருவாக்குகின்றான். உற்பத்திப் பொருள் உருவாக்கப்படுகிறது.

> வெளியுலகப் பொருட்களோடும் நிகழ்வுகளோடும் தொடர்பு கொள்வதே அறிதலின் முதற்கட்டமாகும். இது புலனறிவுக்கட்டமாகும். அறிவு அனுவபத்திலிருந்து தொடங்குகின்றது. இது தான் அறிதல் கொள்கையின் பொருள் முதல்வாதம் என்பதாகும்...

இந்த விளக்கை பிடிச்சுக் கொண்டு நாங்கள் சமூகங்கள் என்னென்னவாறாய் இருந்தன எப்படியெப்படி மாறி வந்ததெண்டு விளங்கிக் கொள்ளலாம் அண்ணை. அதில ஆதிச் சமூகம் எண்டது என்னவெண்டால், இரத்த உறவின்ர அடிப்படையில் இணைஞ்சு வாழும் சிறு குழுமங்களாகவும் பிரிவுகளாகவும் மனிசன் வாழ்ந்த சமூக அமைப்புத்தான் ஆதியில இருந்திருக்கும். இதை ஆதிச் சமூகம் எண்டு சொல்லுவினம். அவர்களுக்கிருந்தது நிலங்கள். விளைச்சலை உருவாக்கினார்கள். அதாவது அவையட உழைப்பு நிலத்தின் மீது செலுத்தப்பட்டது. நிலமே தான் அவையட உற்பத்தியின்ர மூலப்பொருள். நிலம் தான் அவையளுக்கு எல்லாமே. அங்கே பணம் இருக்க வாய்ப்பில்லை.

**தம்பி நீ இப்பிடியெல்லாம் படிச்சு இவ்வளவு விசயத்தோட விபரமா, எனக்கு விளங்கிச்சுதோ இல்லையே சொல்லிறாய். மார்க்ஸ் எண்டிறாய். மாவோ எண்டிறாய். ஏனடாப்பு உனக்கு வேற நல்ல உத்தியோகம் ஒண்டும் வாய்க்கயில்லையே. ஏன் இந்த ரெஸ்ரோரண்டில இருந்து இந்தக் கூலிக்கு மாரடிக்கிறாய்**

ஒண்டுமில்ல. இந்தப் பாழாய்போன என்ர உழைப்பெண்டது நீங்கள் தின்னுகிற சோறு எண்ட பண்டத்துக்குள்ள பூருது. பிறகு என்ர தேவைக்கு பொருட்கள் தேவைப்பட்டா முந்தி அது இலக்கம் போட்ட கடதாசியாக வந்து கை குடுத்துது. இப்ப கடதாசியின்ர புழக்கம் மாறி காந்தத்தகடாய் மாறி ஒண்டும் சைபருமா மாறி மாறி நிண்டு பெருத்த சர்க்கஸ் விளையாட்டுக் காட்டுது.

நடையண்ணை தலையைச் சொறிஞ்சு கொண்டு முழிகளை மிரட்டினார், விளங்காமப் பேசுறதிலயும் இவன் என்னை மிஞ்சிவிட்டான் என்று. என்ன நாசமறுப்போ காந்தம் எண்டிறான். சைபரும் ஒண்டும் மாறி மாறி நிக்குது எண்டிறான். நான் எந்தச் சுவரில போய் என்ர தலையை மோத. ஆனாலும் விடப்படாது. இவனென்னடாண்டா மூச்சுவிடாமல் இருந்துகொண்டு ஆனானப்பட்ட எனக்கே புதுக்கதையெல்லாம் விடுறான் என்று யோசிச்சபடி அடுத்தமுறை இவனை ஒருக்கா மடக்கத்தான் வேணும் என்ற திட்டத்தோட அரைகுறை மனசோட நடையைக் கட்டினார் நடையண்ணை.

நடையண்ணையின்ர முகத்தில கண்ட மாற்றத்தை நளினமாப் பாத்து சரியண்ணை சனிக்கிழமை தண்ணிய கிண்ணிய கண்டபடி போடாம நிதானமா வந்தியளெண்டால் கதைப்பம் எண்டு சொல்லிவிட்டு அவன் வேலையில் மூழ்கினான்.

**காசே தான் கடவுளப்பா அந்தக் கடவுளுக்கும் அது தெரியுமப்பா**
**கைக்கு கைமாறும் பணமே உன்னைக் கைப்பற்ற நினைக்குது மனமே.**

# அத்தான் இல்லையேல் நான் செத்தேன்...!

**சொந்தத்தில் கார், கொழும்பிற் காணி**
**சோக்கான வீடு,வயல்,கேணி**
**இந்தளவும் கொண்டு வரின்**
**இக்கணமே வாணியின் பால்**
**சிந்தை இழப்பான் தண்டபாணி**

- மகாகவி உருத்திரமூர்த்தி

அறுவைதாசன் சகலதும் ஒடுங்கிப்போய் இருந்தான். அவனிற்கு வாயிலே சனி என்று மற்றவர்கள் சொல்வது உண்மை தானென்று நினைத்துக் கொண்டான். அவன்ரை மனிசி யாழினி ஒரு கலியாண வீட்டிற்கு போக வேணும் எண்டு சொன்னாள். அவனிற்கு கலியாண வீடுகளிற்கு போவதென்றால் வீடியோ கமெராவை கண்ட நித்தியானந்தா மாதிரி ஆகி விடுவான். நாலைந்து மணித்தியாலங்களிற்கு அய்யரின் அறுவையையும், இவனுகள் அடிக்கிற ஆடம்பர கூத்துகளையும் கண்டு அவனிற்கு மண்டை காய்ஞ்சு விடும். என்னத்தை சொல்லி இவளை சமாளிக்கலாம் எண்டு மண்டையை குழப்பிக்கொண்டு இருக்கேக்குள்ளே அய்யாமுத்து வந்து சேர்ந்தான். கவியரங்குகளில் அஞ்சு வரிக்கவிதையை ஒவ்வொரு வரியையும் மூன்று, நாலு தரம் சொல்லி அரைமணித்தியாலத்திற்கு கழுத்தறுக்கிற கவிஞனுகளின் கெட் அப்பில் ஆட்டுத்தாடியும், குர்தாவுமாக கலியாண வீட்டிற்கு இவர்களோடு போக கலாதியாக வந்தான்.

அறுவைதாசன் வெளிக்கிடாமல் இருந்ததை பார்த்ததும் அய்யாமுத்து, ஆகா வசமாக மாட்டியிட்டாய் இன்னைக்கு உனக்கு இருக்குதடா பூசை என்று மனசிற்குள்ளே சந்தோசமாக சிரிச்சபடி, முகத்தை அப்பாவியாக வைத்துக்கொண்டு, அக்கா இவன் உன்னை ஏன் ஒரு இடத்திற்கும் கூட்டிக்கொண்டு போறதில்லை என்று குழையடிச்சான். இது இப்பிடித்தான் எல்லா இடத்திற்கும் நான் தான் தனியே போக வேணும் எண்டு அவள் கோவித்துக் கொண்டாள். அவள், அறுவைதாசனை அது, இது எண்டு தான் சொல்லுவாள். அதே மாதிரி அவளின்ரை நாயையும் அது எண்டு சொல்லுவாள். சில நேரங்களில் அவள் யாரைப்பற்றி கதைக்கிறாள் எண்டு அறுவைதாசன் குழம்பி விடுவான். ஏன் உன்ரை சினேகிதி கங்காவும் எல்லா இடத்திற்கும் தனியே தானே போகிறா. அவ உன்னை மாதிரி புருசனோடை சண்டை பிடிக்கிறதில்லை என்றான் அறுவைதாசன்.

கங்காவின்ரை புருசன் அவளை கோயிலிற்கு கூட்டிக்கொண்டு போகிறவர், நீர் அப்பிடி கூட்டிக்கொண்டு போறனீரா என்று யாழினி கேட்டாள்.



# அழும் குழந்தைச் சின்னமடி நீ எமக்கு

**அன்பு மகளே..!**

உனக்கு மட்டுமல்ல
எமக்குந்தான்
இந்தச் சோக வாழ்வு சொந்தமடி..!?
உனது அழுகைதான்
உனது நிலையாச்சு என்பது மட்டுமல்ல
உனைப்போன்ற அத்தனை மனிதரையும்
காக்கும் பொறுப்புகளை
அறுத்தெடுத்த பேய்களும்
பிசாசுகளுமான அரசும்
அதன் அடிவருடிகளையும் அழிக்கின்ற
குழந்தைகளின் போராட்டமடி உனது..!!

நீ உன்னால் முடிந்தவரை அழு..
அழு.. அழு.. தொடர்ந்து அழு..
அழுவதைத் தவிர்த்து
வேறொன்றும் பேசிப் பறைந்துவிடாதே மகளே..!
இதைவிட வேறொன்றும்
இல்லையடி உனக்கு..!?

நீ உனது தந்தைக்காக மட்டுமல்ல
எங்கள் தாய்நாட்டில்
உனைப் போன்ற சகோதருக்காகவும்
அழுகின்ற குழந்தைச் சின்னமடி.

உனது தந்தையை
கடத்திய அம்மிக் கல்லுகள்
என்றோ ஒருநாள்
பெரும் சுனாமியுள் மாட்டும்வரை
நீயே எமக்கு
அழும் குழந்தைச் சின்னமடி.

உனது தந்தையைப் போல்..
உனது நிலையான
இன்னும் பல்லாயிரம்
குழந்தைகளின் பெற்றோரை..?
இந்தப் பேய்களும் பிசாசுகளுமான
அரசும் அதன் அடிவருடிகளும்
பிடித்து அடைத்து வதைத்து..??
உனை என்றும் அழவைத்த
இலங்கை அரசியலில்
நீ என்றுமே
அழும் குழந்தைகளுக்கான சின்னமடி.

- மாணிக்கம்

நான் என்ன மாட்டேன் எண்டா சொல்லுறேன் அதுக்கு கங்காவெல்லோ ஓமெண்டு சொல்ல வேணும் எண்டு தன்னை மறந்து அறுவைதாசன் ஜொள்ளு விட்டான். யாழினி முறைச்ச முறைப்பிலே அடுத்த கதை இல்லாமல் வெளிக்கிட்டு வந்தான் அறுவை. கலியாணமண்டபத்திலே பக்கத்திலே இருந்த தன்ரை சினேகிதி ஒருத்தியை பார்த்த யாழினி, நல்ல வடிவான சீலை புதிசோ என்று கேட்டாள். ஓமப்பா, நான் ஒவ்வொரு கலியாண வீட்டிற்கும் ஒரு புதுச்சீலை தான் என்று சினேகிதி பெருமையடிச்சுக் கொண்டாள். ஏன் ஒவ்வொரு கலியாணவீட்டிற்கும் ஒரு புதுப்புருசன் வைச்சிருந்தாய் எண்டால் இன்னும் நல்லாயிருக்கும் எண்டு பல்லை கடிச்சுக்கொண்டான் அறுவைதாசன்.

மணவறையில் மாப்பிள்ளையும், பொம்பிளையும் அய்யர் சொல்லிறதையும், செய்யிறதையும் பக்திசிரத்தையாக திருப்பி சொல்லியும் செய்தும் கொண்டுமிருந்தார்கள். தெய்வசன்னிதானத்திலே குரு சொல்லுறதை எவ்வளவு கவனமாக கேட்டு செய்யினம் என்று பக்திக்கடலிலே சுழியோடினான் அய்யாமுத்து. இவ்வளவு சீதனம் தந்தால் தான் தாலி கட்டுவேன் எண்டு இவன் சொல்லியிருப்பான். தான் படிச்ச படிப்பு, வேலை என்று ஒவ்வொன்றிற்கும் ஒரு ரேட் வைச்சிருக்கிற இவனுகள் எல்லாம் மனிசங்களா? கமலா ஒரு லட்சம் தந்தால் கமலா மனிசி, விமலா அதை விட கூட தந்தால் விமலா தான் மனிசி சொல்லுற இவனுகளை எல்லாம் செருப்பாலே அடிக்க வேணும். மனிசங்களிற்கு ஆறறிவு, மிருகங்களிற்கு அஞ்சறிவு தான் என்று விஞ்ஞான விளக்கம் சொல்லுவானுகள் இந்த அறிவுக்கொழுந்துகள், ஆனால் ஒரு மாடு இன்னொரு மாட்டோடு கூடுவதற்கு காசு கேட்கிறதா? அல்லது சாதி, சமயம், மொழி என்று மசிர்புடுங்கும் இவனுகளைப்போல நிறம், இனம் பார்த்தா சேர்கிறது. கொடுத்த காசை திருப்பி கேட்பது மாதிரி இவ்வளவு காசு எண்ணி வை எண்டு சீதனம் வாங்கும் இவனுகள் பிறகு அவ இல்லாவிட்டா நான் சாப்பிடவே மாட்டேன் எண்டு அன்புமழை பொழிவான். அத்தான் இல்லையேல் நான் செத்தேன் என்று இவ அசடு வழிவாள். காசிலே தொடங்கிய வியாபாரத்திலே காதலும் கத்தரிக்காயும் எங்கிருந்து வர முடியும்.

மணவறையில் மாப்பிள்ளைக்கு பெண் எழுந்து நின்று மாலை போட (மரியாதையாம்) மாப்பிள்ளை உட்கார்ந்தபடியே கூடைப்பந்தாட்டக்காரர்கள் பந்தை எட்டி கூடைக்குள்ளே போடுவதுபோல மாலையை எட்டி பெண்ணின் கழுத்தில் போட்டுக் கொண்டிருந்தான். ஏண்டா இவன் இருந்த இடத்தை விட்டு எழும்பாமல் இருக்கிறான், இவனிற்கு என்ன மூலக்கொதியோ என்று கவலைப்பட்டான் அறுவை. பிறகு மாப்பிள்ளை பெண்ணிற்கு கூறைச்சீலையை கொடுத்தான். அவள் அதை வாங்கிக்கொண்டு அன்னநடை போட்டபடி உள்ளே போனாள். கிழிஞ்சுது போ, ஒரு பொம்பிளை ஒரு சீலை உடுக்கவே ஒரு நாள் வேணும். இவனுகள் ஏற்கனவே பாதிநாள் மினக்கெட்டு சீலை கட்டி வந்தவளிட்டை மறுபடி சீலையை கட்டி வரச்சொல்லுறான்கள். அதுவுமில்லாமல் மாப்பிள்ளை எப்படா கழட்டலாம் என்று அவசரப்பட்டு கொண்டிருப்பான். இவனுகள் மாத்தி மாத்தி சீலையை கட்ட வைச்சு அவனை கடுப்பேத்துறானுகள் என்று பொடியனிற்காக பரிதாபப்பட்டான் அறுவை.

நீ எங்கடை தமிழ் பண்பாட்டை நக்கலடிக்காதே என்றான் செந்தமிழ் வீரமறவன் அய்யாமுத்து.

எதடா தமிழ்பண்பாடு. சாதகமும், சீதனமும் பொருந்தி கந்தையா தாலியை கட்டினால் கந்தையா கண்நிறைந்த கணவன், அவனிற்கு பொருந்தாமல் முத்தையாவிற்கு பொருந்தினால் முத்தையாவிற்கு முந்தானை விரிக்க வேண்டும் என்று எவரிற்கும் ரெடி என்ற நிலையில் பெண்களை அடக்கி வைத்திருக்கிறீர்களே இதுவா பண்பாடு. தனது துணையை தானே தேடிக்கொண்ட தமிழ்ப்பெண்களை அடிமைகளாக்கியது தான் உனது இன்றைய இந்துசமயப்பண்பாடு. நல்ல சுத்தமான நீர் கிடைக்கும் எனது தாய்வீட்டை விட விலங்குகள் கால் பதிக்கும் சேறும் சகதியுமான குட்டையில் நீர் கிடைக்கும் எனது காதலனின் வீடு தான் எனக்கு விருப்பத்தை தருகிறது என்று பெண் ஒருத்தி சொல்வதாக சங்கப்பாடல் ஒன்று சொல்கிறது. சாதி,சமயம் இல்லாத காதலை மட்டும் அடிப்படையாக கொண்ட அது தான் உண்மையான பண்பாடு. ஊர்பொதுமன்றில் மனோகரமான மாலைப்பொழுது முழுதும் நடனமாடும் இளைஞர்களும், இளம்பெண்களும் இரவுப்பொழுதினை தமக்கு பிடித்த இணையுடன் காதல் செய்து களிப்படைவார்கள். அவர்களில் சிலர் கணவன், மனைவி என்று ஆகுவர். சிலர் மனக்கசப்பின்றி பிரிவர். பெண்சுதந்திரம், பாலியல் சுதந்திரம் என்ற நவீன கால சிந்தனைகள் நடைமுறையில் இருந்த சமுதாயம் அது. மத்திய இந்தியாவில் வசிக்கும் திராவிடமொழி பேசும் பழங்குடிகளிடம் இன்றும் அப்பண்பாடு நிலவி வருகிறது. மணமேடையில் இருந்த எல்லோரையும் வெளியே போகச்சொல்லி விட்டு இரண்டு பேர் ஒரு திரைச்சேலையை பிடித்துக்கொண்டு நின்றார்கள். உள்ளே மாப்பிள்ளையும், மணப்பெண்ணும் மட்டும் இருந்தார்கள். அறுவைதாசன் திடுக்கிட்டுப்போனான். ஏண்டா, அய்யர் செய்து காட்ட அவங்கள் திருப்பி செய்தாங்களே இப்ப திரைச்சீலையாலே மூடி விட்டு அய்யர் என்ன செய்து காட்டுறார் என்று பதைபதைத்தான் அறுவை. இவன் என்னத்தை நினைத்து கேட்கிறான் என்பதையும், இவன் தன்னிடம் சொன்னது வெளியிலே கேட்டால் நிலைமை என்னவாகும் என்பதையும் யோசித்து பார்த்த அய்யாமுத்து மின்னலாய் மறைந்து போனான்.

- விஜயகுமாரன்.



# மக்கள் விரோத மகிந்த குடும்ப சர்வாதிகார ஆட்சி...!

**அரசு எதிர்காலத்தில் மகிந்த சிந்தனையை மீறி செயற்படின் அரசுடனான உறவு முடிவுக்கு வருமென அரசின் பங்காளிக் கட்சியான ஜாதிகெல உறுமய மகிந்தாவிற்கு எச்சரிக்கை செய்கின்றது.**

**கசாப்புக்கடை நடாத்தும் இரு நண்பர்களுக்கிடையில் கொள்கை முரண்பாடு வந்தால் எது நடக்குமோ எவ்வெச்சரிக்கை கொண்ட சமிக்கையைக் காட்டுமோ, அதுபோன்றதொரு எச்சரிக்கையைத்தான் ஜாதிகெல உறுமயவின் உறுமலுக்கூடாக காணமுடிகிறது..**

**சிங்கள-பௌத்த பேரினவாதத்தின் இனவெறி கொண்ட ஆகப் படுமோசமான, படுபிற்போக்கு அரசியல் செயற்பாட்டகத்தின் மொத்த உருவகம்தான் ஜாதிகெல உறுமய. அதை அரவணைத்த அரசியல்தான் மகிந்த சிந்தனை.!**

இன்றைய நடைமுறையிலான தனிநபர் பாசிச சர்வாதிகாரம் கொண்டுள்ள அரசியலமைப்பை ஜே.ஆர். அன்று நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையாகக் கொண்டு வந்தார். அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகளின் ஜனாதிபதிகளை விட அதிக நிறைவேற்று அதிகாரங்களை உடைய ஜனாதிபதி யாகவே ஜே.ஆர். அதனைக் கொண்டு வந்து நிறைவேற்றினார். இதனை அன்று சிறீலங்கா சுதந்திரக் கட்சியானது கர்ன கொடூரமாக எதிர்த்தது. அதில் முன்னின்ற கடும் எதிர்ப்பாளர்களில் முக்கியமான ஒருவர்தான் மகிந்த ராஜபக்சா. இச் சிந்தனையாளன் 2010-ம் ஆண்டு கொண்டு வந்த 18-வது திருத்தச் சட்டத்தின் மூலம் இச் சர்வாதிகாரத்திற்கு உரமும் வலுவும் சேர்த்துக் கொண்டார். முன்பு ஜே.ஆர். ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் கொண்டு வந்ததை, மகிந்த ராஜபக்ச மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் கொண்டு வந்தார். இதற்கூடாக இரண்டு தடவையல்ல அதற்கு அப்பால் எத்தனை தடவையும் ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிடலாம் என்ற ஆயுள் அரச அதிகார வாழ்விற்கு வழிவகுத்தார்.

ஆட்சி அதிகாரத்திற்கு வருமுன் ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும், மக்கள் சார்பு செயற்பாட்டையும் கைகளில் தூக்கிய ஒரு கடும்போக்குடைய தேசியவாதியாகத்தான் மகிந்தா அரசியல் அரங்கிற்கு வந்தார். அரசுக்கட்டிலேறி சர்வாதிகாரப் படிநிலைகளுக்கூடாக உச்சத்தை அடைந்து கொண்டதிலும் பாசிச வழிமுறைகளைப் பின்பற்றத் தயங்குவதில்லை என்பதிலும் மகிந்தாவை விட இன்னொருவர் இலங்கையின் அரசியல் தளத்தில் பிரசன்னமாகவில்லை என்றே சொல்லலாம். 2009-மே-மாத முள்ளிவாய்க்காலின் இனப்படுகொலை இதற்கோர் பெரும் எடுத்துக்காட்டாகின்றது. சர்வதேச யுத்த விதிகளை மீறி புலிகளை அழித்தவிதம் கொலைவெறிப் பாசிசத்தின் உச்சம்தான் மறுபுறத்தில் இன்றும் பிரதான முரண்பாடாகவும், பிரச்சினையாகவும் இருந்துவரும் தேசிய இனப் பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வை மகிந்தாவும் அவரது அரசும் கண்டடையவில்லை. மாறாக பாஸிச இனவெறி கொண்டு பலவற்றைச் செய்கின்றது.

வட-கிழக்கின் எல்லா முக்கிய இடங்களிலும் இராணுவ முகாம்களை அமைத்து, அவை மக்களைப் பாதுகாப்பதுடன், அம்முகாங்களின் ராணுவத்தினரை சமூக சேவையில் ஈடுபடுத்தியுள்ளோம். மக்களுக்காக சேவை செய்யும் மக்கள் ராணுவத்தை எக்காலத்திலும் எடுக்கோமென அரசு சொல்லுகின்றது. இதுவுமொரு மகிந்த சிந்தனை வியாக்கியானம் தான்.

- இதற்கூடாக வடகிழக்கு மக்களின் காணிகளை அபகரிப்பதும், தமிழ் பகுதி முழுவதும் இராணுவப் பிரசன்னத்தை உருவாக்கி, ராணுவத்தின் சப்பாத்துக் கால்களுக்குள் தமிழ் மக்களை வைத்திருப்பது முதலாவது அம்சம்.
- இராணுவத்தினரின் துப்பாக்கிக் கரங்களால் அரவணைத்து அவர்களுக்கு சமூகசேவை என்பதன் மூலம் தமிழ் மக்களைக் கபளீகரம் செய்து காலப்போக்கில் சிங்களமயமாக மாற்றிவிடுவது எனும் உள்ளடக்கம் இரண்டாவது அம்சம் ஆகும்.

அத்தோடில்லமால் தமிழர் தாயகமெங்கும் மதவெறி கொண்ட புத்தமத மயமாக்கல் நடைபெறுகின்றது. புனிதப் பிரதேசம் எனும் காலத்திற்கொவ்வா பொருள் கொண்டு பிற மத அழிவாக்கம் நடைபெறுகின்றது. இது கொலனியல் கால மதஅழிப்புக் காலம் போன்று, பிறமதத்தின் அடையாளச் சின்னங்கள் அழிக்கப்படுகின்றன. பிறமதத் தலைவர்கள் தாக்கப்படுகின்றார்கள். அதுவும் .புனிதப் பிரவாகம் கொண்ட புத்த மதத் துறவிகளின் சண்ட மாருதத்தால் தவிரவும் தென்னாசியாவில் அரசு இயந்திரத்தைப் பலப்படுத்துகின்ற இராணுமயமாக்கலில், இலங்கையே முன்னணியில் உள்ளது. ஏனிந்த நடவடிக்கை?

**பாஸிசம் என்பது கடிவாளம் இல்லாத இனவெறியும், ஆதிக்க வெறியும் பிடித்த யுத்தமாகும். தொழிலாளி வர்க்கத்தின் சகல உழைக்கும் மக்களின் கொடிய விரோதியாகும். என்கின்றார் டிமிட்ரோவ் அவர்கள். இக்கணிப்பானது எம்நாட்டின் மகிந்த அரசின் சமகால சர்வாதிகார அரசியலின் பிரதிபலிப்பை படம் பிடித்துக் காட்டுகின்றது...**

மகிந்த அரசாட்சியின் வரலாறு மக்கள் விரோதமாகவே தொடர்கின்றது. நாடு என்றுமே கண்டிராத பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளது. வட்டியுடன் கூடிய உள்நாட்டு-வெளிநாட்டுக் கடன், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியத்தின் உத்தரவிற்கேற்ற பணிந்த பொருளாதார நடவடிக்கைகள், இதனூடான பொருளாதாரக் கொள்கையிலான நெருக்கடியின் சுமைகளை மக்கள் சுமக்கின்றார்கள். இதற்கெதிராக மக்கள் வீதிக்கு வந்து போராட்டங்களை நடாத்தின், அவற்றை நடாத்தும் கட்சிகள், வெகுஜன அமைப்புக்கள் குண்டர்கள் கொண்டு தாக்கப்படுகின்றார்கள். இவ் ஜனநாயக விரோதங்களை கண்டித்து எழுதும் ஊடகங்கள் இல்லாதாக்கப்படுகின்றன. ஊடகவியலாளர்கள் தாக்கப்படுகின்றார்கள், வெள்ளைவான் கொண்டு கடத்தப்படுகின்றார்கள், இல்லாதாக்கப்படுகின்றார்கள். நாட்டின் சகல இனமக்களுக்குமான பேச்சு, எழுத்து, கருத்துச் சுதந்திரம் கொடுங்கோல் கொண்டு இல்லாதாக்கப்படுகின்றது. இதனால் மக்களின் கோபத்திற்கு அரசு ஆளாகின்றது. இவற்றிற்கும் இதன் இன்னோரன்ன மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு பதில் சொல்ல இரும்புக் கரம் கொண்டு அடக்க பாசிச சர்வாதிகாரம் கொண்ட இராணுவமயமாக்கல் தேவைப்படுகின்றது.

**பாஸிசம் என்பது கடிவாளம் இல்லாத இனவெறியும், ஆதிக்க வெறியும் பிடித்த யுத்தமாகும். தொழிலாளி வர்க்கத்தின் சகல உழைக்கும் மக்களின் கொடிய விரோதியாகும், என்கின்றார் டிமிட்ரோவ் அவர்கள்.** இக்கணிப்பானது எம்நாட்டின் மகிந்த அரசின் சமகால சர்வாதிகார அரசியலின் பிரதிபலிப்பை படம் பிடித்துக் காட்டுகின்றது. எமது நாட்டின் தமிழ்-முஸ்லிம் பாராளுமன்ற சந்தர்ப்பவாதக் கட்சிகள், அதிலும் பாராளுமன்ற இடதுசாரிகள் அரசுடன் வர்க்க சமரசம் செய்து, உடந்தையோடு (மக்கள் விரோத-பாசிஸ-சர்வாதிகார) இருக்கும் கொள்கை-கோட்பாடுடன் சங்கமமாகியுள்ளனர். இதனால் பேரினவாத அரசியல் மிகச் சுலபமாக சிறுபான்மை தேசிய இனங்களை, சிங்கள மக்கள் மத்தியில் இருந்து பிளவுற வைக்கின்றது. அத்துடன் சிறுபான்மை தேசிய இனங்களுக்கிடையிலும் இன-மத-மொழி-சாதிய ரீதியிலும், பிரதேச ரீதியிலும் உள்ள முரண்பாடுகளை கூர்மையாக்கி மோத விடுகின்றது. இதனால் எம்நாட்டின் போராடும் சக்திகளான அடக்கி ஒடுக்கப்படும் மக்கள் அரசியல் ரீதியிலும், ஸ்தாபன ரீதியிலும் வலுவிழந்து நிற்கின்றார்கள். இத்தயைதொரு சமுதாயக் கட்டமைப்பிலேயே, மகிந்த அரசின் பாசிஸ-சர்வாதிகாரப் போக்கு தலைவிரித்தாடுகின்றது, மக்களை அடக்கி ஒடுக்குகின்றது.

ஆகவே இத்தகைய நிலையின் இன்றைய இப்போக்குடன் மக்கள் இசைந்து ஒத்தோடுவார்களா? இல்லையென்பதையே, மத்திய கிழக்கு மக்களின் வெகுஜனப் போராட்டக் கிளர்ச்சிகள் போன்ற அண்மைய சிங்கள ஒடுக்கப்பட்ட மக்களின் அரசுக்கெதிரான எழுச்சிகள் போராட்டங்கள் எடுத்துக்காட்டுகின்றன. நிருபிக்கின்றன. இதனால்தான் என் நாட்டின் மக்கள், என்னை கடாபிபோல் சாகடிக்கமாட்டார்கள் என்கின்றார் மகிந்தா. இது எதைத்தான் பிரதிபலிக்கினறது.? முதலாளி வர்க்கத்தின் இயல்பான பலவீனத்தை வெளிப்படுத்துகின்றது., ஒடுக்கப்பட்ட மக்களின் ஒன்றுபட்ட போராட்டம் ஒன்று உருவாகப்போவதை கண்டு பயப்படுகின்றது.

- அகிலன்.



# அனுமின்பிறப்பாக்கிகளும் அவலங்களும்..

**புயல்** , மழை, இடி, மின்னல், சுனாமி போன்றவாறான இயற்கைச் சீற்றங்கள் கொண்டு வரும் ஆபத்தை அவற்றின் இயல்புகளை பேரோசை மூலமோ அல்லது அசாதாரணக் காட்சிகள் மூலமோ அவற்றின் ஆற்றலையும் விளையவிருக்கும் ஆபத்தையும் மனிதன் தனது புலனுணர்வுகளால் அவை நடக்கும் கணங்களில் அறிந்து கொள்ள முடியும். அதன் ஆற்றலை சக்தியை மட்டிட்டு தன்னையோ மற்றவர்களையோ அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்த முடியும். அவை சூழலில் ஏற்படுத்தும் மாற்றங்கள் காரணமாக புலன்களுக்கு புலப்படுபவை. இச்சீற்றங்களிலிருந்து மனிதனோ உயிரினங்களோ தங்களை காப்பாற்ற அச் சூழலிலிருந்து குழப்பங்கள் தணிந்து போகும் வரைக்குமாவது அவ்விடத்தை விட்டு நகரமுடியும். அதாவது இக்குழப்பங்கள் நிரந்தரமானவையல்ல என்பதால் நீடித்திருப்பவையல்ல. மணித்தியாலங்களுக்குள் அவை தணிந்து நிலமைகள் வழமைக்கு திரும்பிவிடும். அத்தோடு இந்த இயற்கைச் சீற்றங்களின் வீச்சுக்கள் சில மைல்களுக்குட்பட்டவை தான். சுருங்கக் கூறின் பாதிக்கப்படும் பிரதேசம் ஒரு சில மைல் சுற்றளவுக்குள்ளும் ஒரு சில மணித்தியாலங்கள் மட்டும் நீடிக்கக் கூடியவையும் உணர்ந்து கொள்வதன் மூலம் முன்னெச்சரிக்கை கொள்ளக்கூடிய வகையிலும் இருக்கின்றன.

ஆனால் அரூபமானவும் நெடுங்காலம் நீடித்திருப்பதும் அசைவின்றி சப்தமின்றி தேசங்களையும் கடந்து சென்று அழிவுகளை தரும் கதிர்வீச்சின் ஆற்றலை அது எவ்வளவு சக்திகொண்டது என்பதை எந்தப் புலனுணர்வும் நமக்கு உணர்த்தாது. உடற்கலங்களை ஊடுருவி அழிக்கும் வல்லமை பெற்ற அணுக்கதிர்வீச்சு பற்றி வேறெந்த அழிவையும் விட அச்சம் கொள்ளப்படுவதற்கு இதுவே மூலகாரணம். கதிர்வீச்சுத் தாக்கத்துக்குள் ஒரு பிரதேசம் இருக்கின்றதா என்பதை, அதன் வல்லமையை சக்தியை அது ஏற்படுத்தக்கூடிய சேதத்தை அறிய விசேட கருவிகள் இன்றி முடியாதது. சாதாரண சூழல் நிகழ்வுகளுக்கும் அனர்த்தங்களுக்கும் அப்பாற்பட்டு இருப்பதால் அணுக்கதிர்வீச்சு இயல்புகளும் அது தரக்கூடிய பாதிப்புகளும் பற்றிய அறிவு சாதாரணமான மனிதர்களுக்கு அப்பாற்பட்டே இருக்கின்றது. விசேட அறிவும் தொழில்நுட்பமும் இன்றி கையாள முடியாதது. இந்த நிலையே அணுசக்திப் பயன்பாடு பற்றிய மக்களின் அறியாமையை தனக்கு மூலதனமாகப் பயன்படுத்துவதில் மூலதனக்காரர்களுக்கு அனுகூலம் வழங்குகிறது. இயற்கையில் அணுக்கதிரியக்கம் இருக்கிறதா எனின் ஆம் இருக்கிறது. ஆனால் அக்கதிர்வீச்சுகளின் தாக்கம் தவிர்க்க முடியாதது அல்லது மட்டுப்படுத்தப்பட்ட அளவுக்கு மேல் இருப்பின் அக்கதிரியக்கப் பொருளை அல்லது பிரதேசத்தை தவிர்க்க வேண்டியது என்பது நியதி.

ஒரு விமானத்தில் பயணிக்கும் ஒவ்வொரு பயணியும் ஒவ்வொரு தடவையும் விமானப்பயணத்தில் உயரப்பறக்கும் போது தரையில் இருக்கின்ற வேளையிலும் அதிகமானளவு கதிர்வீச்சுக்கு உட்படுத்தப்படுகிறார். ஒரு விமானி மற்றும் விமானத்தின் பணிப்பெண்கள் ஒவ்வொரு பறப்பின் போதும் கதிர்வீச்சுக்கு உட்படுத்தப்படுகின்றனர். உயரப்பறக்கும் விமானப் பயணம் என்பதில் கதிர்வீச்சு என்பது தவிர்க்க முடியாததாகின்றது. எனவே ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் அவர்கள் உறிஞ்சும் கதிர்வீச்சு அவர்களுக்கு ஆபத்தானது என்பதால் அவர்களின் ஓய்வு வயதெல்லை குறைக்கப்பட்டுள்ளது. இதே போலவே றேடோன் எனப்படும் ஒரு வாயு கதிரியக்கம் உடையது. இந்த வாயு கூட கண்ணுக்குப் புலப்படாத மணமற்ற ஒரு வாயு. சாதாரண காற்றை விட 9 மடங்கு கனதியானது. ஆனாலும் இந்தவாயு ஒரு அணுக் கட்டமைப்பை உடையதால் ( ஒட்சிசன் பிராணவாயு இரண்டு அணுச் சேர்க்கை கொண்டது) எளிதில் பல்வேறு வகையான தடுப்புக்களையும் தாண்டி கசிந்து பரவக்கூடியது. நிலவடியில் இருக்கும் கிறனைற் பாறைகளிலும் மணல்களிலும் படிமங்களாவிருக்கும் யுரேனியம் மற்றும் ஆழமான கிணறு போன்றவற்றிலிருந்தும் இந்த வாயு யுரேனியத்தின் படிநிலை கொண்ட கதிரியக்கச் சிதைவின் மூலம் உருவாகும் இடைநிலைப் பதார்த்தமான றேடியம் என்ற கதிரியக்க பதார்த்த்திலிருந்து வெளியேறு கிறது. இவ்வாயுவை காற்றோடு சுவாசிப்பதால் அல்லது குடிநீர் மூலம் உட்கொள்வதால் கதிர்வீச்சு மனித உடலை அடைகிறது. சுவாசிக்கின்ற வேளையில் மிகவும் மென்மையான சுவாசப்பைக் காற்றறைக் கலங்களை சென்றடைந்து கதிர்வீச்சு வெளிவிடப்படுவதால் சுவாசப்பைக் கலங்களின் மூலக்கூற்று கட்டமைப்பில் இக்கதிர்வீச்சு ஏற்படுத்தும் மாற்றத்தினால் புற்றுநோய்க்கான காரணிகளில் இவ்வாயுவே இரண்டாவது மிகப்பிரதான காரணியாகின்றது. சுரங்கங்களிலும் கட்டிடங்கள் நிர்மாணிக்கும் வேலை களிலும் ஈடுபடும் தொழிலாளர்கள் சுவாசிக்கின்ற காற்றில் நிலவடியின் கீழ் இருக்கும் பாறைப்படிமங்கள் மற்றும் கட்டிடப் பொருட்கள் என்பனவற்றிலிருந்து கசிவதன் மூலம் செறிந்து காணப்படுகின்ற இந்த

வாயுத் தாக்கத்துக்கு அவர்கள் உட்பட்டே ஆகிறார்கள். இந்த வாயு மேலும் அணுக்கதிர்வீச்சை உமிழ்வதன் மூலம் உருவாக்கப்படும் றேடோன் டோட்டர்ஸ் எனப்படும் திண்ம நிலையான உப பதார்த்தங்கள் காற்றில் உள்ள தூசுகளில் படிகின்றன. இத் தூசிக்காற்றை சுவாசிக்கின்றபோது அவை சுவாசப்பையை சென்றடைந்து சுவாசப்பை புற்றுநோய்க்கு காரணியாகின்றன. கட்டிடச் சுவர்களுக்கிடையில் காணப்படும் வெடிப்புகள் நீக்கல்களுக்கூடாக கசிந்து மேலெழுந்து பொதுவாக நிலக்கீழ் மாடிகளிலுள்ள வசிப்பறைகளில் காற்றைவிட பலடமடங்கு பாரமானதால் தேங்கிவிடும் இந்த வாயுவை போதுமானளவு காற்றோட்டத்தை திறந்து காற்றோட்டச் சுழற்சியை உருவாக்குவதன் மூலமோ அல்லது சுவர்களில் துளையிட்டு காற்றாடிகளை பொருத்தி உட்காற்றை வெளியேற்றுவதன் மூலமாகவோ இவ்வாயுவின் செறிவை குறைத்து, சுவாசப்பைகளை கதிர்வீச்சுக்கு உட்படுத்துவதை முடிந்த மட்டுக்கு குறைத்துக் கொள்ளலாம். மேற்கத்தைய மற்றும் மலைப்பிரதேச வீடமைப்பிலும் இந்தப் பொறி முறைகள் கைக்கொள்ளப்படுகின்றன. மேற்கத்தைய நாடுகளில் சூழலிலிருந்தான இன்னுமொரு கதிர்வீச்சுத் தாக்கம் தோல் புற்றுநோய்க்கும் அதன் காரணமாக மரணத்துக்கும் காரணமாகின்றது. அது எதுவெனில் ஊதாக் கடந்த கதிர்வீச்சு. சூரிய ஒளியில் கண்ணுக்குப் புலப்படக் கூடிய ஏழுநிறங்களையும் கடந்து ஊதா நிறத்திற்கு அப்பாலிருக்கும் கட்புலனுக்கு அப்பாற்பட்ட கதிர்வீச்சு, மாநிறமுடைய மேற்கத்தைய மனிதர்களின் தோல்களை இலகுவில் ஊடுருவுகின்றது.

இக்கதிர்வீச்சு சூரியக் குளியல் செய்கின்றபோது தோல்களை ஊடுவியும் கண்களுக்குள் சென்றும் மனிதர்களுக்கு ஊறு விளைவிக்கின்றது. சூரியக் கதிர்களின் தாக்கம் தோல்களின் கலங்களினூடாக விட்டமின் டி சத்தினை உடலுக்கு தந்து எலும்பு வளர்ச்சிக்கு நன்மையளிக்கும் அதேவேளை அதிக ஊதாக் கடந்த கதிர்வீச்சின் உறிஞ்சுதலால் தீமையும் விளைகின்றது. இந்த ஊதாக் கடந்த கதிர்வீச்சு தோலை ஊடுவிச் செல்லுமளவுக்கு சக்தி கொண்டது.



இந்தக் கதிர்வீச்சின் செறிவு வளிமண்டலத்துள் புக முன்னரே வடிகட்டப்படுகின்றது எனினும் இவ்வடிகட்டலையும் தாண்டி அது பூமிப்பரப்புக்குள் புகும் அளவு மேற்கத்தைய புவிக்கோளத்தின் தட்ப வெப்ப சூழல் காரணமாக மற்றைய தட்ப வலயப் பிரதேசங்களை விட அதிகளவானது. அத்தோடு இக்கதிர்வீச்சின் தாக்கத்தை தடுக்கும் நிறப்புள்ளிகள் இல்லாத தோல் கொண்ட மேற்கத்தைய மனிதர்களின் தோல்களை எரித்தும் விடுகின்றது. ஆனாலும் சாய்ந்த கோணத்தில் வலம்வரும் குரியனிலிருந்து தரைக்கு செங்குத்தாகவன்றி சமாந்தரமாக கண்ணுக்கு நேரான நிலையிலேயே சூரியக்கதிர்கள் பெரும்பாலான நேரங்களில் பூமியின் துருவங்களை அண்டிய நாடு களில் இருப்பதால் கண்களையும் இந்த நேர்பார்வையிலிருந்து பாதுகாக்க வேண்டியுள்ளது. எனவே தான் இக்கதிர்களை வடிகட்டும் விசேட கண்ணாடிகள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றை விட மருத்துவத் துறையில் எக்ஸ் ரே, சி.ரி எனப்படும் கம்யூட்டர் ரேமோகிறாபி, அல்ரா சொனிக் மற்றும் கான்சர் கலங்களை மட்டுப்படுத்தப்பட்ட கதிர்வீச்சுக்குட்படுத்தி அழிக்கும் மருத்துவ சிகிச்சை போன்றவற்றின் ஊடாகவும் தவிர்க்கவியலாதவாறு கதிர்வீச்சுக்கு மனிதர்கள் உடபடுத்தப்படுகிறார்கள். இயற்கையிலிருந்தும் மருத்துவ சிகிச்சை போன்றவற்றுக்காகவும் கதிர்வீச்சுக்குள்ளாக்கப்படும் மனிதர்கள் அதன் பக்கவிளைவுகளை ஏற்படக்கூடிய உயிரிழப்புகளுடனும் நோயிலிருந்து மீள்வதனுடனும் சீர்தூக்கிப் பார்த்தே ஏற்றுக் கொள்கிறோம். உபயோகத்திலிருக்கும் கதிர்வீச்சின் மருத்துவப் பயன்பாடென்பது பல துறைசார் மருத்துவர்கள் அறிஞர்களாலும் அரசுகளாலும் மருத்துவச் சட்ட சரத்துக்களால் வரையறுக்கப்பட்டிருக்கின்றது.

மருத்துவப்பயன்பாட்டுக்கென கதிர்வீச்சை உருவாக்கும் கருவிகள் அவற்றின் நிர்மாணங்கள், அவற்றால் ஏற்படக்கூடிய விபத்துக்கள் மற்றும் சிகிச்சையின் போது தேவைப்படும் கதிர்வீச்சின் அளவு மீறிவிடாத படியான கணிப்பீடுகள், இயக்கும் தொழில்நுட்ப அறிவுகள் என்பன அத்துறையில் பயிற்றப்பட்டவர்களுக்கு கட்டாயமாக வழங்கப்படுமாறு சட்டச் சரத்துக்களும் திருப்தியான சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. இவ்வாறெல்லாம் இயற்கையிலும் மருத்துவத் துறையிலும் தவிர்க்கவொணாதபடி கதிர்வீச்சுக்கு மனிதர்கள் உள்ளாக்கப்படுகிறார்கள். எலும்பையும் ஊடுருவிச் செல்லும் எக்ஸ்ரே எனப்படும் கதிர்வீச்சின் இயல்பினால் தான் அக்கதிர்வீச்சு எலும்புத் தொகுதிகளை படமாக்குதற்கு மருத்துவ துறையில் பயன்படுத்தப்படுகின்றது. ஆனாலும் இந்தக் கதிர்வீச்சு தான் ஊடுருவிச் செல்லும் பாதையிலுள்ள அணுக்களை அதிர்வடையச் செய்து அணுக்கட்டமைப்பிலுள்ள இலத்திரன்களை மோதி அகற்றிவிடுவதால் அணுவை மின்னேற்றம் கொண்டதாக மாற்றவல்லது. இப்படியான கதிர்வீச்சினை அயனாக்கும் கதிர்வீச்சு என்பார்கள். அயனாக்கமடையாத முறையில் மருத்துவத் துறையில்

பயன்படுத்தப்படும் படமெடுக்கும் கருவிகளுக்கு உதாரணமாக அதிவலு கொண்ட காந்தப்புலத்தின் உதவியுடன் உருவாக்கப்பட். எம்.ஆர் எனப்படும் கருவியின் பயன்பாட்டைக் கூறலாம். ஆராய்ச்சிகள் இன்று எவ்வாறு இந்த அயனாக்கும் கதிர்வீச்சின் அளவைக் குறைத்து ஆனால் தெளிவான படங்களைப் பெறுவது மற்றும் அயனாக்கமடையாத முறைகளை மேலும் விருத்தியாக்குவது போன்றவற்றில் கவனம் குவித்துள்ளன. இவ்வாறு கதிர்வீச்சின் ஆபத்து அதன் பயன்பாட்டை மீறியும் உணரப்பட்டு அதனை எவ்வாறு மேலும் மேலும் குறைப்பது என்பதை நோக்கிப் பயணிக்கின்ற மனித முயற்சிகளுக்கிடையில் செயற்கையான அணுவுலைகளையும், அணுகுண்டுகளையும் தயாரிப்பதில் மனிதவிரோத நடவடிக்கைகள் நடந்தவண்ணமேயுள்ளது. இந்தச் செயற்கையான அணுச்சக்தி அடிப்படையிலான கதிர்வீச்சு அழிவு களை உருவாக்குவது அன்று மட்டுமல்ல அது நின்று பல சந்ததி சந்ததிகளுக்கும் கோரமான விளைவு களைத் தருவது என்பது போர்களின் போது வீசப்பட்ட அணுக்குண்டால் ஏற்பட்ட கோரங்களிலிருந்தும் அணுஉலை விபத்துகளின் போது நடந்த கோரங்களிலிருந்தும் மனிதகுலம் கற்றுக்கொண்டவை. இத்தனை கோரங்களையும் மக்கள் மேல் திணித்து அணுசக்தியுலைகளை உருவாக்கும் முதலாளித்துவம் தனது இலாபம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இவ்வாறான அணுவுலை நிர்மாணங்களை முதலாளித்துவம் கூறும் எவ்வித காரணத்தையும் மறுத்து அதற்கெதிராகப் போராடியே தான் தீரவேண்டும். 1945 இலிருந்து 1981 வரையான காலப்பகுதியில் 461 அணுக்குண்டு வெடிப்புப் பரிசோதனை கள் நிகழ்த்தப்பட்டன. இந்த வெடிக்கவைக்கப்பட்ட 461 அணுக்குண்டுகள் எல்லாமாக 550 மெகா தொன் ரிஎன்ரி வலிமையுடையவை. ஜப்பானில் இரண்டாவது உலகப் போரின் போது கிரோசிமா, நாகசாகி நகரங்களில் வீசப்பட்ட அணுக்குண்டுகள் முறையே 15, 20 தொன் ரிஎன்ரி வலிமையுடையவை. இரண்டாம் உலகப் போரின் போது வீசப்பட்ட இந்த அணுகுண்டுகளின் விளைவால் ஏற்படுத்தப்பட்ட உடனடி நாசமும் பேரழிவும் எத்தனையோ வருடங்கள் தாண்டியும் இன்னமும் முற்றுப்பெறாத அதன் கோரங்களும் நாங்கள் கண்டுகொண்டவை. அதன் கதிர்வீச்சு இன்றும் கொல்கிறது. மனிதர்களை வதைக்கிறது பாதிக்கிறது எனில் அதைவிட பல மடங்கு சக்தி கொண்ட மேற்கண்ட அணுகுண்டுப் பரிசோதனைகளை நடாத்திவரும் இந்த ஏகாதிபத்தியங்கள் கதிர்வீச்சுப் பாதிப்புகளைப் பற்றி சற்றேனும் அலட்டிக்கொள்ள மாட்டா என்பதே நிஜம்.

முதலாவது அணுக்குண்டுப் பரிசோதனை வெடிப்பு (Trinity) நியூ மெச்சிகோவிலுள்ள அல்மாகொர்டா என்னுமிடத்தில் யூலை 1945 இல் நடாத்தப்பட்டது. இதன் பின்னர் இரண்டாவது, மூன்றாவது அணுகுண்டுகள் தான் யப்பானில் கிரோசிமாவிலும் நாகசாகியிலும் போடப்பட்டன. அதன் பின்னர் அமெரிக்கா, சோவியத், இங்கிலாந்து, பிரான்ஸ், சீனா, இந்தியா 1900 க்கும் அதிகமான அணுக்குண்டுப் பரிசோதனை களை நடாத்தி முடித்திருக்கின்றன. சோவியத் கிழக்கு கசாக்கிஸ்தானிலும் நோவாயா சேம்ல்யா என்ற தீவிலும் தனது இந்தப் பரீட்சார்த்த அணுக்குண்டு வெடிப்புகளை நடாத்தி வந்தது. 1945 ம் ஆண்டு முதல் அமெரிக்காவால் பசுபிக் சமுத்திரத்திலுள்ள பிக்கினித் தீவில் வெடிக்கவைக்கப்பட்ட பரிசோதனை அணுக்குண்டுகள் ஏற்படுத்திய தாக்கத்தினால் இன்று வரையும் மனிதர்கள் வசிக்கமுடியாத கதிர்வீச்சுப் பிரதேசமாக அத்தீவு இருக்கின்றது. அங்கு இந்தக் கதிரியக்கப் படிமங்கள் இன்றும் தாவரங்களிலும் பயிரினங்களிலும் காவப்படுகின்றன என்பதும் இன்று வரை அம்மண்ணில் விளைவிக்கப்பட்டு பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு வரும் பயிர்கள் பற்றி அவை உண்ணத்தகுந்தவையல்ல எனவும் நிபுணர்களால் கூறப்படுகிறது. இந்தப் பரிசோதனையை செய்வதற்கான அப்புறப்படுத்தப்பட்டு மீண்டும் 3 வருடங்களின் பின்னர் அங்கு சென்று வாழ அனுமதிக்கப்பட்டவர்கள் பத்துவருடங்களுக்கு பின்னால் அவ்விடத்திலிருந்து மீண்டும் அப்புறப்படுத்தப்பட்டார்கள். அவர்களில் பலபேர்களுக்கு படிநிலை விளைவான சீசியம் (137- அரைவாழ்வுக்காலம் 30 வருடங்கள்) என்ற பதார்த்தத்திலிருந்து கதிர்வீச்சு தைரொயிட் சுரப்பியில் கான்சர் நோயை உருவாக்கியிருப்பது கண்டறியப்பட்டது.




1954 ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதியன்று மேற்கொள்ளப்பட்ட இன்னுமொரு ஐதரசன் குண்டு (15 ரிஎன்ரி வலிமை கொண்டது) இத் தீவை அண்டிய கடற்பகுதியில் வெடிக்கவைக்கப்பட்ட போது எவரும் எச்சரிக்கப்பட்டிருக்கவில்லை. இந்தக் குண்டுவெடிப்பு நடந்த இடத்திலிருந்து 130 கிலோ மீற்றருக்கப்பால் மீன்பிடித்துக் கொண்டிருந்த படகொன்றிலிருந்த 23 யப்பானிய மீனவர்களில் 11 பேர் 2 தொடக்கம் ஆறுவரையான சீவட் அலகுகள் கதிர்வீச்சுக்கும், உடை, உணவு போன்றவற்றில் படிந்து உட்கொள்ளப்பட்ட கதிரியக்கமுடைய பதார்த்தங்களின் தாக்கத்திற்கும் உட்பட்டு குறுகிய காலத்துள் மரணமடைந்தார்கள்.

நீர் நிலகைள் மற்றும், பயிரினங்கள் , அவற்றை உட்கொள்ளும் கால்நடைகள், அந்த பயிரினங்களையோ அல்லது அவற்றை உண்ட கால்நடைகளின் இறைச்சியையோ உணவாக்கும் மனிதர்கள் என கதிரியக்க பதார்த்தங்களிலிருந்து எமது உணவு கூட கதிரியக்கமுடையதாகின்றது. உயிரினங்களும் தாவரங்களும்

குறோமோசோம் மாற்றத்துக்குட்பட்டு மரபணுப் பிறழ்வுகளுக்குள்ளாவதால் உயிர்க்கலங்கள் பிறழ்வடைந்து கலப்பிரிவடைவதால் அவை அவை கான்சர் என்னும் கோரமான நோய்களை உருவாக்கி சந்ததி சந்ததியாக கோரம் விளைவிக்கின்றது.

இவற்றை விட இன்று அணுமின்னுலைகள் நிர்மாணிப்பதில் பாதுகாப்பான தொழில் நுட்பம் முன்னேறிவிட்டதாக கூறி அணுமின் உலைகளை மக்களின் மின்சாரத் தேவைகளைப் பூர்த்திசெய்யவெனக் கூறிக்கொண்டு தனது இலாபநோக்குகளையும் மற்றைய ஆபத்துக்களையும் மறைத்துக் கொண்டு ஏகாதிபத்தியங்கள் நிர்மாணித்து வருகின்றன. அணுமின்னுலைகளால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள் அனர்த்தங்கள் சேதங்கள் என்பன இருட்டடிப்பு செய்யப்பட்டும் மறக்கடிக்கப்பட்டும் இந்த அணுமின்னுலைகளுக்கெதிரான விழிப்பும் மக்களின் எதிர்ப்பும் முடக்கப்படுகின்றன. 1986 ம் ஆண்டு ஏப்ரல் 26 ம் திகதி ஏற்பட்ட செர்னோபில் அணுமின்னுலை விபத்தின் பாதிப்புக்கள் சுற்றியுள்ள ஸ்கன்டிநேவியா நாடுகள் வரை ஏற்படுத்திய விளைவுகள் இன்றும் முற்றுப்பெறவில்லை. 2000 மீட்டர் உயரத்துக்கும் மேலாக வளிமண்டலத்தை சென்றடைந்த அணுக்கதிரியக்கத் தூசுகள் மழை மற்றும் காற்றினால் காவப்பட்டு சுவீடன், நோர்வே நாடுகளுக்கு காவப்பட்டன. டென்மார்க், நெதர்லாந்து, பெல்ஜியம், பிரான்சு, இங்கிலாந்து போன்ற நாடுகள் காற்றின் திசை வழி இல்லாதுபோனதால் தப்பின. ஆனால் ரோமேனியா, பல்கேரியா, ஹெலாஸ் செக்கோசிலாவாக்கியா போன்றன பாதிப்புக்குள்ளாகின. உக்கிரேய்ன் பெலாருஸ், ருசியா வின் பெரும்பகுதியில் கதிரியக்கப்பதார்த்தமான சீசியம் அச்சூழலை பெருமளவில் அணுக்கதிரியக்க மாசடைவுக்கு உள்ளாக்கியது. உடனடியாக 130000 பேர்கள் அப்புறப்படுத்தப்பட்டனர். 15 கிலோமீற்றர் சுற்றளவுக்குட்பட்டவர்கள் அதீதமான கதிர்வீச்சுக்குள்ளாக்கப்பட்டனர். சுமார் 24 000 பேர்கள் மட்டில் 450 மில்லி சீவர்ட் அலகு கதிர்வீச்சுக்குள்ளானார்கள்.

அணுமின்னுலை விபத்தினால் ஏற்படுத்தப்படும் நேரடியான விளைவுகள் இவை என்றபோதும், அணுக்கதிர் வீச்சும் விபத்துக்களின் பாரதூரமும் மக்களிடத்தில் மனோவியல் ரீதியாக கடும் தாக்கத்தையும் ஏற்படுத்தக் கூடியதுமாகும். புரிவதற்கு சிக்கலான இந்தக் கதிர்வீச்சுப்பற்றிய நுண்ணிய விபரங்கள் இன்னும் பொதுஅறிவாகவில்லையாதலால் மர்மமான இந்தக் கதிரியக்கத்தோடு இணைத்து அவர்கள் அலைக்கழிக்கப்படுகிறார்கள். இங்கிலாந்தின் செல்லாபீல்ட் எனுமிடத்தில் நடந்த அணுமின்னுலை விபத்து மேய்ச்சல் கால்நடைகளின் குறிப்பாக பசுப்பாலில் கதிரியக்கப்ப பதார்த்த்தமான I-131 இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது. ஹரிஸ்பேர்க் பென்சில்வேனியாவுக்கு அண்மையிலுள்ள திறீ மைல் ஜலண்ட் 1979 ம் ஆண்டு 28 ம் திகதி நடந்த அணுமின்னுலை விபத்தில் வெப்பத்தை அகற்றுவதற்கு அல்லது குளிர்மைப்படுத்துவதற்கென பாவிக்கப்படும் நீர்ச்சுழற்சியில் ஏற்பட்ட பழுதினால் அதிகரித்துச் சென்ற வெப்பம் காரணமாய் இந்த அணுமின்னுலையின் பகுதிகள் உருகத் தொடங்கியது. ஆறு அல்லது ஏழு மணித்தியாலங்களுக்குப் பின்னரே நீரில் மின்னணுஉலை குளிர்மை பெற்றது. கதிர்வீச்சு ஏற்படாதபடி பாதுகாப்புக் கலசத்துக்குள் இருந்தபோதும் கதிர்வீச்சு கசியவே செய்தது.




மிக அண்மையில் 2011 ம் ஆண்டு மார்ச் 11ம் திகதி ஜப்பானில் புக்குசிமாவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த அணுமின்னுலையில் பூகம்பமும் அதனால் ஏற்பட்ட சுனாமிப் பேரலை கள் உட்புகுந்ததனாலும் அணுமின்னுலையின் குளிரூட்டும் பதார்த்தமாக தண்ணீரை செலுத்தும் பம்புகளின் இயக்கங்கள் நின்று போனதால் விபத்து ஏற்பட்டதென்கிறார்கள். 20 கிலோமீற்றர் தூரத்துக்குட்பட்ட இடங்களிலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

ஒரு மணித்தியாலத்துக்குள் இங்கு மின்னுற்பத்தியாக்கும் மூன்று அணுமின்னுலைகளும் உருகிப் போய்விட்டன. இவற்றை குளிர்மைப்படுத்திக் கொண்டிருந்த போதே ஐதரசன் வாயு வெடிப்புக்குள்ளானது. கதிர்வீச்சுப் பரவுவதை தடுக்க முடியாது போய்விட்டது. பயிரினங்களில் கதிரியக்கப் பதார்த்தமான சீசியம் இருப்பது அறியப்பட்டு இந்தப் பகுதியில் விளைச்சலான காய்கறிகளின் விற்பனை நிறுத்தப்பட்டது. இன்னும் பல பத்தாண்டுகள் இந்தப் பகுதி பயிர்ச்செய்கைக்குதவாத நிலமாக மாறிவிட்டது. இவ்வாறு செர்னோபில் அணுமின்னுலையை விட பத்துமடங்கு குறைவான தாக்கத்தை விளைவித்தது என இவ்விபத்து அதிகாரிகளால் அறிவிக்கப்பட்டாலும் இற்றைக்கு 25 வருடங்களுக்கு முன் நடந்த அதே விபத்து மாதிரியான இந்த விபத்தை தொழில் நுட்பத்தால் தடுக்க முடியாது போய்விட்டது. பூதத்தைப் பிடித்து போத்தலுக்குள் அடைத்துவிட்டோம் அச்சப்படத் தேவையில்லை என்கின்றனர் அணுமின்னுலை நிர்மாணிப்போர். பூதம் வெளியில் வருகிறபோது இறந்து போவது யார் என்பது பற்றி அவர்களுக்கு அக்கறையிருப்பதாக எண்ணிக்கொள்வது நமது மடமை.

- சிறி.




# பேரினவாத ஒட்டுண்ணியாக அரசியல் நடத்தும் முஸ்லீம் தலைமைத்துவம்



எந்தளவுக்கு மதம், இனம் .. என்று பிரிந்து நிற்கின்றோமோ, அந்தளவுக்கு எம் மீதான ஒடுக்குமுறை அதிகரிக்கும். அரசு என்பது மக்களைப் பிரித்து ஒடுக்குவது தான். அதே பிரிவினையையும் பிளவையும் நாங்களும் வரிந்துகொள்வது, எம்மீதான ஒடுக்குமுறையை வரைமுறையற்றதாக்குவது தான். அரசு மட்டும் ஒடுக்குவதல்ல, ஒடுக்கப்பட்ட மக்களும் தமக்குள் தாம் மோதிக்கொள்கின்ற நிலையை உருவாக்குகின்றது. அரசபாசிசம் இன்று இதைச் சார்ந்து மேலும் தூண்டி விடுகின்றது. முஸ்லீம் மக்கள் மதம் - இனமாக பிரிந்து நிற்பதன் மூலமோ, இன்றைய முஸ்லீம் தலைமையை நம்புவதன் மூலமோ தங்கள் மீது பேரினவாத மத இனத் தாக்குதலை தடுத்து நிறுத்த முடியாது. இன்று பேரினவாத அரசு, மத - இனம் சார்ந்த அரசியல் மூலம் தன் பாசிசமயமாக்கலை கூர்மையாக்கி வருகின்றது. சிறுபான்மை இனங்கள் மீதும், சிறுபான்மை மதங்களின் மீதானதுமான அதன் எதிர்ப்பு அரசியல் மூலம் தான் சிங்கள மக்களை தன் பின் அணிதிரட்டுகின்றது. இதைத் தவிர மகிந்தாவின் பாசிச அரசியலுக்கு வேறு மாற்று அரசியல் கிடையாது. இன்றைய இந்த மத, இன பாசிச அரசியலை எதிர்கொள்வது என்பது அரசின் நோக்கத்துக்கு ஏற்ப தனித்து நிற்பதல்ல. தமிழ் குறுந்தேசிய அரசியல் போல் வன்முறையை தெரிவு செய்வதோ பாராளுமன்றம் மூலம் பேரம் பேசும் பிழைப்புவாதம் மூலமோ இந்தப் பாசிச அரச வன்முறைத் தாக்குதலை தடுத்து நிறுத்த முடியாது. இன்று இலங்கை அரசபாசிசம் உலக ஒழுங்கில் முரண்பட்டுக் கொண்டு தன்னை தனிமைப்படுத்தியபடி வீரியமடைகின்றது. இதை எதிர்கொள்ள ஒடுக்கப்பட்ட மக்கள் இனம், மதம் கடந்து தங்களை தாங்கள் அணிதிரட்டிக்கொள்வதன் மூலம் தான் பெரும்பான்மை சார்ந்து உருவாகும் அரச பாசிசத்தை எதிர் கொள்ளமுடியும். பெரும்பான்மையைச் சார்ந்து நிற்க முனையும் போக்கை உடைத்தெறியும் வண்ணம் பெரும்பான்மை ஒடுக்கப்பட்ட மக்களுடன் ஒன்றிணைய வேண்டும். அதற்காக நாம் எம் குறுகிய அடையாளங்களை கைவிட்டு முன்னின்று போராட வேண்டும்.

குறுகிய இன, மத அடையாளங்கள் மூலம் எதிர்கொள்வது என்பது தங்களைத் தாங்கள் தனிமைப்படுத்தி ஒடுக்க உதவி செய்வது தான். அரசு ஒடுக்கும் வர்க்கம் சார்ந்து நின்று மக்களைப் பிரித்து ஒடுக்குகின்றது. இதே அரசியலை ஒடுக்கப்பட்ட வர்க்கங்களும், ஒடுக்கப்பட்ட சமூகங்களும் தமக்குள் பிரிந்து நின்று கையாள முடியாது. ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின், ஒடுக்கப்பட்ட சமூகங்களின் ஐக்கியத்தை நோக்கி நாம் சிந்திக்கவும், செயலாற்றவும் வேண்டும். இருக்கின்ற முஸ்லீம் தலைமைகள் என்ன செய்தன, என்ன செய்கின்றன..? தமிழ் இனத்திற்கும் அரசுக்கும் இடையிலான தொடர்ச்சியான முரண்பாடுகள் ஒரு தீர்வு நோக்கிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகின்ற போது, அதில் ஒட்டுண்ணி அரசியல் நடத்த முனைகின்றன. அரசுடன் தீர்வு பற்றிய விவாதம் நடைபெறுகின்ற எல்லா நிலையிலும் அதற்குள் புகுந்து ஒட்டுண்ணி அரசியல் நடத்த முனைகின்றன. இதுதான் முஸ்லீம் தலைமைகளின் அரசியல் பாத்திரம். அரசுடன் ஒட்டுண்ணியாக சேர்ந்து நின்று ஒடுக்க உதவுவதும், விரிசல்களில் புகுந்து கொண்டு வாழ்வதுமாக முஸ்லீம் மக்களை அரசியல் அனாதையாக்குகின்றன. இலங்கை முஸ்லீம் மக்களை போராடத் தகுதியற்ற சமூகமாக, அண்டி வாழும் சமூகமாக இதன் மூலம் வழிநடத்துகின்றன.

சுதந்திரமாக, சுயாதீனமாக மற்றைய இனத்துடன் இணைந்து போராடி வாழும் சமூகமாக முஸ்லீம் மக்கள் வாழ்வதை இந்த ஒட்டுண்ணி பாராளுமன்ற தலைமைகள் விரும்பவில்லை. இதுதான் இதில் உள்ள உண்மை. தாங்கள் பாராளுமன்ற ஒட்டுண்ணி அரசியலை நடத்த முஸ்லீம் மக்களை மத இன ரீதியாக பிரித்து வைத்திருக்கவே முனைப்புடன் அவை செயல்படுகின்றன. பேரினவாதம் போல் அவை மத இன ஆயுதத்தைக்கொண்டு முஸ்லீம் மக்களை தனிமைப்படுத்துகின்றன. இதைபோல் தான் தமிழ் தலைமைகளும் செய்கின்றன. இலங்கையில் ஒடுக்கப்பட்ட மக்களை இனம் மதம் கடந்து ஐக்கியப்படுத்தும் அரசியலை முன்னெடுப்பதில்லை. அதை முறியடிக்கும் அரசியல் புள்ளியில் இவர்கள் அனைவரும் ஒன்றுபடுகின்றனர். இதற்கு மாறாக அனைத்து ஒடுக்கபட்ட மக்களும் ஒன்றிணைய வேண்டும். இதற்கு மதம், இனம் எவையும் தடையாக இருக்கக் கூடாது. ஒடுக்கப்பட்ட மக்களாக உணருகின்ற புள்ளியில் ஒருங்கிணைந்து ஒடுக்குமுறையை எதிர்த்து செயலாற்ற வேண்டும். இந்த வகையில் முஸ்லீம் மக்களும் சிந்தித்து செயலாற்ற வேண்டும். இது இன்று இலங்கை வாழ் அனைத்து மக்களினதும் உடனடிக் கடமை. எம் குறுகிய இன, மத அடையாளங்களை கடந்து ஒன்றிணையுமாறு அறைகூவல் விடுகின்றோம்.

- பி.இரயாகரன்

# தியாகங்கள் வீண்போகாது என உறுதியேற்போம் !

இன்று பேரினவாத மஹிந்த ராஜபக்ஷாவின் அரசு இலங்கை முழுவதும் தனது ஒடுக்குமுறையை விரிவுபடுத்தியுள்ளது. புலிகள் இயக்கம் அழிக்கப்பட்ட நிலையில், இலங்கை அரசானது இன்று தனது பாசிசப் பயங்கரவாதத்தை அனைத்து மக்கள் மீதும் ஏவிவிட்டுள்ளது. அதேவேளை, தமிழினம் புலிப்பாசிசத்தால் தன் ஆன்மாவை இழந்து, நடைப்பிணமாக கைகட்டி நிற்கின்றது.

முள்ளிவாய்க்கால் அவலத்தின் பின்னாடியும், எம் மக்களின் அவலங்கள் தொடர்கின்றன. அரச பாசிசத்தால் நடாத்தப்படும் கடத்தல்கள், படுகொலைகள், பாலியல் பலாத்காரங்கள், விவசாய, மீன்பிடி தொழில்களுக்கான தடையால் ஏற்படும் பட்டினிச்சாவுகள் எம் மக்களை வாட்டுகின்றது. அத்துடன் யுத்தத்தின் பாதிப்பால் ஏற்படும் சமூக - உளவியல் அவலங்களான உளவியல் பாதிப்புகள், போதைவஸ்துப் பாவனை, கொலை கள், தற்கொலைகள், பாலியல்வன்முறை, பெண்கள் சிறுவர்கள் மீதான வன்கொடுமை, திருட்டு, குற்றவியல் செயற்பாடுகளும் சமூக இயக்கத்தையும் தனி மனிதத்தையும் சீரழிக்கின்றது. இன்று தமிழ் மக்களின் ஒரே அரசியல் பிரதிநிதியென தம்மைக் காட்டிக் கொள்ளும் தமிழ் மேலாதிக்க, தமிழ் தேசியக் கூட்டமைப்பு நம் தேசமக்களின் அவலங்களையும், சீரழிவுகளையும் கண்டு கொள்வதில்லை. அதற்கெதிராக எந்தவித உடனடி நடவடிக்கைகளையும் எடுப்பதில்லை. ஒன்றைத்தவிர, அதாவது சர்வதேச மட்டத்தில் அரசியலாக்குகின்றோம் என்ற போர்வையில் எம் மக்களின் துயரங்களை பாவித்து தமது நலனுக்காகவும், தமது அரசியல் இருப்புக்காகவும் அமெரிக்காவையும், இந்தியாவையும் முன்னிறுத்தி அரசியல் செய்வதாகும்.

இந்த நிலையில் புலம்பெயர் சமூகத்தில் இருந்து மட்டும்தான், இந்தக் கொடுமைகளுக்கு எதிராக குரல்கள் எழ முனைகின்றன. அவையும் மக்களுக்கானதல்ல. புலம்பெயர் புலிப்பினாமிகள் தம் அதிகாரத்தையும் செல்வத்தையும் தக்கவைக்கும் துரோக அரசியலுக்காகவே மக்களின் துயரங்களை பாவிக்கின்றனர். தமது கடந்தகால தவறுகளை திரும்பிப் பார்க்காத, அதே மக்கள் விரோத அரசியல், மக்களை பணயம் வைத்து, அவர்களை பலியிட்டு நடத்திய அதே பாசிச அரசியல் புலம்பெயர் நாடுகளிலும் தொடர்கின்றது. இன்று, யுத்தக் குற்றங்களுக்கு சர்வதேச விசாரணை வேண்டும் என்ற போர்வையில், அந்த குற்றங்களின் பெரும் பங்குதாரர்களான இந்தியா, அமெரிக்கா, நோர்வே, மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தை தமது பாசிச அரசியலுக்கு துணையாக அழைக்கின்றனர், இந்தப் புலம்பெயர் மேலாதிக்க புலிப்பினாமிகள்.

அதேவேளை இடதுசாரிகள் என தங்களை அடையாளப்படுத்தியபடி, புதிதாக புலம்பெயர் மக்கள் மத்தியில் அரசியல் செய்ய வந்துள்ளவர்கள் சிலரும் பொய், புரட்டு, பித்தாலாட்டத்துடன் கூடிய அரசியல் கூத்துகளையே அரங்கேற்றுகின்றனர். நெருக்கடியில் இருந்து, நம் மக்கள் சுயமாக சொந்தப் போராட்ட வழிகளில் போராட உதவுவதற்கு பதிலாக இவர்கள், புலிகளின் அரசியலுக்கே முண்டு கொடுக்கின்றனர். இது ஒருபுறமிருக்க, சாதிய அரசியல், இலக்கியம், மனித உரிமை, புலி எதிர்ப்பு கதைத்தபடி மற்றொரு கும்பல் மஹிந்த பாசிச அடிவருடிகளாக தேசத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் தமது துரோகத்தனமான பாசிச அடிவருடி அரசியலை அதிவேகமாக முன்னெடுக்கின்றனர். இன்று முள்ளிவாய்க்கால் அவலத்தின் பின்னால் மூன்று வருடங்கள் கடந்துள்ள நிலையில் தமிழ் தேசியத்தின் பெயரால் பலியிடப்பட்ட ஆயிரம் ஆயிரம் இளைஞர்கள் யுவதிகளின் தியாகங்கள் மேற்படி மக்கள் விரோத சக்திகளால் கொச்சைப்படுத்தப்பட்டு அரசியல் வியாபாரமாக்கப்படுகின்றது. உயிரோடுள்ள முன்னாள் போராளிகளின் துயரங்கள், அவலங்கள், அவர்கள் மீதான அரச ஒடுக்குமுறையால், சமூகவொடுக்குமுறையால் இன்று உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. அவர்களின் தியாகங்கள் மறக்கப்படும் நிலையில் உள்ளன.

## இன்றுள்ள இந்த அரசியல் சூழ்நிலையில்,

1. **அனைத்து போராளிகளின் தியாகங்களுக்கும் தலைவணங்குகின்றோம் !**
2. **போராட்டக்களத்தில் தமிழ் தேசியத்தின் பெயரால் உயிர்த்தியாகம் செய்த அனைத்து பொது மக்களுக்கும் எமது அஞ்சலிகளை சமர்ப்பிக்கின்றோம் !**
3. **தேசவிடுதலையின் பேரால் மக்களும் போராளிகளும் செய்த தியாகங்கள் வீண்போகாது என உறுதியளிக்கின்றோம் !**
4. **தேசவிடுதலையின் பால் பற்றுக்கொண்ட அனைத்து சக்திகளையும் எம் மக்கள் நலம் சார்ந்து போராட, எம்முடன் இணைத்து போராட அறைகூவல் விடுக்கின்றோம் !**

# உழைத்து வாழும் தொழிலாளி, தன் வர்க்க உணர்வுகளை வெளிப்படுத்தும் நாளே மேதினம்!

இன, மத, நிற, பால், சாதியம் கடந்த உணர்வுடன் உலகத் தொழிலாளி என்ற வர்க்க உணர்வுடன் அணிதிரண்டு போராடும் நாளே மே நாள்!

தொழிலாளி வர்க்க உணர்வை மழுங்கடிக்கும் மேதின கூத்துக்களுக்கும் கும்மாளங்களுக்கும் என்றும் குறைவில்லை. தொழிலாளர்களின் வர்க்க உணர்வை மழுங்கடிக்கும் களியாட்டங்களுக்கும், அறிக்கைகளுக்கும், வாழ்த்துக்களுக்கும் பஞ்சமில்லை.

தொழிலாளியைச் சுரண்டிக் கொழுக்கும் கூட்டம் தொடங்கி, உழைத்து வாழ விரும்பாது சமூகநல உதவியில் மார்க்சிய அரசியல் பேசும் பிரமுகர்கள் வரை, மேதின வர்க்க உணர்வை நலமடித்து அதையும் வியாபாரமாக்குகின்றனர். இன, மத, நிற, பால், சாதியம் என்று பலவாறாய் மக்களைப் பிளக்கின்ற சுரண்டும் வர்க்கம் தொடங்கி, வர்க்க உணர்வு பெறாது இதை எதிர்க்கின்ற கூட்டம் வரை, மேதின வர்க்க உணர்வை மழுங்கடிக்க வைத்து அதைக் கொச்சைப்படுத்தி கேவலப்படுத்துகின்றனர்.

உழைத்து வாழும் தொழிலாளி, தன் உழைப்புச் சார்ந்து போராடும் வர்க்க உணர்வுகள் தான் மேதின உணர்வாகும். இந்த வகையில் தொழிலாளர் வர்க்கம் தன் வர்க்க உணர்வுகளை வெளிப்படுத்தும் வண்ணம்,
தங்களை அணிதிரட்டிப் போராடும் நாள் தான் மே தினம்.

இதுவல்லாத அனைத்தும் மேதினத்தை திரித்துக் கொச்சைப்படுத்திக் காட்டுவதும், கொண்டாடுவதும், வர்க்க உணர்வை இல்லாது ஆக்குவதற்கு தான். வர்க்க எதிரிகள் முதல் இடதுசாரிய "மார்க்சியம்" பேசும் பிரமுகர்கள் வரை, வர்க்க உணர்வு பெற்ற தொழிலாளிக்கு எதிராக, இந்நாளை வெறும் கொண்டாட்டமாக, வாழ்த்தாக மேதினத்தை இழிவுபடுத்திக் கொச்சைப்படுத்துகின்றனர். வர்க்க எதிரிகள் இதைக் களியாட்ட நிகழ்வாக்குவது தொடங்கி பிரமுகர்கள் முகநூலில் வாழ்த்துக்கள் கூறுகின்ற வரை, இதன் பின் தொழிலாளர் வர்க்க உணர்வுகள் நலமடிக்கப்படுகின்றது.

இந்த எதிர்ப்புரட்சி அரசியலுக்கு எதிராக, வர்க்க உணர்வு பெற்ற தொழிலாளரின் வர்க்க உணர்வை நேர்மறையில் மேதினம் கோருகின்றது. தொழிலாளர் மீதான வர்க்க விரோத செயல்பாடுகளை எதிர்ப்பது தான், வர்க்க உணர்வு பெற்ற தொழிலாளியின் மேதினச் செய்தியாகும்.

இலங்கையில் ஆளும் வர்க்க வலதுசாரிய பேரினவாதிகள் முதல் குறுந்தேசியவாதிகள் வரை, மேதினக் கொண்டாட்டம் நடத்துகின்ற கேலிக்கூத்தைக் காண்கின்றோம். அனைத்து அரசு சார்ந்த உற்பத்திகளையும், சேவை மையங்களையும், தனியார்மயமாக்கக் கோரும் உலகமயமாக்கல் நிபந்தனைகளை முன்னெடுக்கும் அரசுகள் மேதினத்தை கொண்டாடுகின்றன.

தொழிலாளர் உரிமைகளை ஒழித்துக் கட்டுகின்ற, அவர்களின் உழைப்பில் விளைந்த மக்களின் சமூக நிதியாதரங்களை தனியார்மயமாக்கி கொள்ளையிட உதவும் அரசுகளும், இந்த அரசியலை கொள்கையாகக் கொண்டவர்களும் கூட மேதினத்தைக் கொண்டாடுகின்றனர்.

வர்க்க உணர்வூட்டி அணிதிரட்ட முனையாத மார்க்சியம் பேசும் பிரமுகர்களின் பத்திரிகை அறிக்கைகள் முதல், முகநூலில் கோசங்கள் போட்டு முதுகு சொறியும் வாழ்த்துக்கள் வரை இன்று மேதின கூத்தாக அரங்கேறுகின்றது.

இப்படி வர்க்க உணர்வுக்கு வெளியில் மேதினம் கேவலப்படுத்தப்படுகின்றது. இதை எதிர்த்து மேதினத்தை வர்க்க உணர்வுடன் அணுகுவதும், வர்க்க உணர்வூட்டி அணிதிரட்டுவதும் தொழிலாளி வர்க்கத்தின் மேதினச் செய்தியாகும்.

வர்க்க உணர்வுடன், மக்களை உணர்வூட்டி அணிதிரட்டுவோம்!

வர்க்க உணர்வு பெறாத இன, மத, நிற, பால், சாதிய . அரசியலை நிராகரிப்போம்!

வர்க்க உணர்வூட்டி அணிதிரட்டாத பிரமுகர்த்தன இடதுசாரியத்தை நிராகரிப்போம்!

உழைத்து வாழாத கூட்டத்தின் மேதினச் செய்தியை நிராகரிப்போம்!

உலக தொழிலாளர் வர்க்க உணர்வுடன், மேதினத்தைக் கொண்டாடுவோம்!



## மூச்சுத்திணறமுதல் மூடு உலையை!!

ஏழை உழைப்பில் கொளுத்தவர்களே
உங்கள் மாளிகைகளிற்கு அருகாய்
தூசு கிடந்தாலும்
தொற்றுநோய் வந்திருமென்கிறாய்

நம்மையும்
நாளைய தலைமுறையையும்
கதிர்வீச்சுக் கொன்று போடப்போகிறது
கூலிப்பட்டாளத்தை அனுப்புகிறாய்
உரக்க ஒலிக்கும் குரல்கள் நசுக்கப்படுமா?
போபால் விசவாயு கசிந்து
துடித்து மடிந்ததும்
கோலா சிதைக்கும் வளமும் உயிர்களும்
பாரதமாதா கண்ணைத்திறக்கவேயில்லை
கொள்ளையிடும் நிறுவனங்களும்
கூட்டாட்சி செய்யும் கட்சிகளும்
ஒட்டுமொத்தமாய்
வாக்குப்பொறுக்கிகள் ஓரணியில்.....

உயிர்குடிக்கப் போகும்
இராட்சத உலை நிமிர்ந்து
குடிசைகளை அச்சுறுத்தி நிற்கிறது
தெரிகிறதா மாநிலமே
நச்சுக்கசிவு காற்றில் கலந்து
மூச்சுத்திணற முதல்
மூடு உலையை எனும் அலறல் கேட்கிறதா
வாழப்போராடும் மக்களை
சூழ்ந்து நிற்கிறது மாநிலக்கூலிப்படை
உழைக்கும் வர்க்கம் எதிர்த்து நிற்பது
கூடங்குளத்து
மக்களிற்கு மட்டுமாய் அல்லவே
இந்தியக்குடிமக்கள் அத்தனைபேரையும்
அந்நியக்கரங்கள் சாகடிக்கப்போகிறது
இனியும் உறங்கோம்
இனியும் உறங்கோம்
எழுக தேசமென
இடிந்தகரையில் முழக்கம் கேட்கிறதா!!

கங்கா

Munnani is published by NDPF (Org.Number: 996 514 749) and Printed at SET LINE DATA LTD, London for NDPF.













